படி இருக்கும்
83?

ஜகத்குரு
அருளாசி!

பணத்தை
எங்கு
சேமிக்க வேண்டும்?


மங்கையர் மலர்

MANGAYAR MALAR
ஜனவரி '83 ரூ.1-50



மங்கையர் மலர்

ஜனவரி 1983



உள்ளே ...

பேணி வளர்த்தேன்!

கட்டுரைப் போட்டி!

ரூ2000/ மதிப்புள்ள

வெள்ளிப் பாத்திரங்கள்

பரிசு! பக்கம் 17

சந்தா விவரம்

தனிப்பிரதி ரூ. 1-50

ஆண்டுச் சந்தா ரூ. 18/-

ஆறு மாத சந்தா ரூ. 9/-

அட்டை வண்ணப்படம்:
பி. ஏ. ரமணன்.



Edited, Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road. Guindy, Madras-600 032 (Phone: 431543)
Assistant Editor: Manjula Ramesh.

முதலீடு செய்பவர்களுக்கெல்லாம் ஓர் அமுதசுரபி இந்துவே

ஆம். முதலீடு செய்யப்பட்ட உங்கள் செல்வம் நன்ருகப் பாதுகாக்கப் படுவதோடு மட்டுமின்றி, பல்கி பெருகிட வழிகாட்டுவது இந்து மோட்டார் பைனுன்ஸ் கார்ப்பரேஷன்.

நம்பிக்கையையும், நாணயத்தையும் தனது முழுமூச்சாகக் கொண்டு பணிபுரியும், இந்து உங்கள் முதலீட்டுக்கு 20% வரை வட்டி அளிப்பதோடுமல்லாமல், அழகியதோர் வெள்ளிப் பரிசையும் உங்களுக்குப் பெற்றுத்தருகிறது.



20%
வட்டி

இந்து உறுதியுடனும், உத்தரவாதத்துடனும், உங்கள் முதலீட்டினைக் கட்டிக்காத்து உங்கள் செல்வம் பெருகிட வழிகாட்டுகிறது. வற்ருது வழங்கும் அமுதசுரபியே இந்து.

வட்டி விகிதம்—பிக்சட் டெபாசிட்டுகள்

1 வருடம்	2 வருடங்கள்	3 வருடங்கள்	5 வருடங்கள்
16%	17%	18%	20%

IMFC

இந்து மோட்டார் பைனுன்ஸ் கார்ப்பரேஷன்
H.O. 155, வடக்கு உஸ்மான் சாலே,
தியாகராய நகர், சென்னே-600 017.
போன் : 445529

கிளேகள்
32, ரங்கநாதன் தெரு, சென்னே-600 017
18, சிங்கண்ண நாயக்கன் தெரு, சென்னே-600 001
24, வடக்குமாடவீதி, பூந்தமல்லி, சென்னே-600 056-போன்-69566
41, தொப்பாமுதலியார் தெரு, பெங்களுர்–560 001 போன் : 579585
194, வக்கீல் புதுத் தெரு, மதுரை-625 001 போன் : 34940
106, பெரியதெரு, திருவண்ணுமலே–606 601 போன் : 681
22, வணிகர் தெரு, காஞ்சிபுரம்-631 201 போன் : 3048

UIPC: IMF: 305

இந்துவுடன் சேர்ந்து வளம் பெறுங்கள்

புத்தாண்டு வாழ்த்து



ஸ்ரீ கிருஷ்ண பகவான் பகவத் கீதையில் பல நல்ல அறங்களை — ஞானத்தை — பக்தியைப் போதித்தார். ஒரிடத்தில் ''கீர்த்திஹி ஸ்ரீஹி வாக்சச நாரீணாம்'' என்று குறிப்பிடுகிறார். அதாவது 'ஸ்திரீகளுடைய சொல் — கீர்த்தி — பொருள் இவைகளாகவும் நானிருந்து அருள் பாலிக்கிறேன்' என்று கூறுகிறார். லலிதா சகஸ்ர நாமத்திலும் ஸ்ரீமாதா என்று முதல் நாமாவளியாக தாயாகப் புகழப் படுகிறது. இந்து சமய அறநூல்களிலும் மனைவியோடு வாழும்போதுதான் மனிதன் எல்லா வித அறங்களையும் செய்யத் தகுதி வாய்ந்தவனாகிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சிறிது காலம் முன்பு பெண்மணிகளெல்லாம் வீட்டிலே பரம்பரையாக தங்கள் தாய் தந்தையர் சொல்லிக்கொடுத்து வந்ததையும் அவர்கள் கடைபிடித்து வந்ததையும் பார்த்து, கேட்டு தெரிந்து — அனுபவித்துத் தங்களுடைய வாழ்க்கையிலும் நடைமுறைப் படுத்திக் கொண்டு வந்தார்கள். இதனால் குடும்பங்களில் அநேக விதமான செலவுகள் இல்லாமல் பல பணிகளும் சுலபமாக நடைபெற்று வந்தன.

தற்காலச் சூழ்நிலையில் குழந்தைகளை படிக்க வைத்து அந்நிய தேசிய கலாச்சாரங்களில் ஈடுபடுத்தி, நிறைய செலவு செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு அதன் மூலம் பையனோ — பெண்ணோ கல்யாணம் செய்யும் பொழுது இருவரும் சம்பாதிக்க வேண்டும் என்ற சூழ்நிலையை உண்டாக்கி விடுகிறார்கள். ஆண்—பெண் இருவரும் சம்பாதிக்க வேண்டிய சூழ்நிலை வரும் பொழுது அதற்கு வேண்டிய உடை, உணவு, போக்கு வரத்துச் செலவு முதலியவைகளெல்லாம் வந்து சேருகின்றன. அதன் மூலம் சாமான்களின் விலைவாசி ஏறிவிடுகிறது.

பெண்களுக்கே இயற்கையாக இருக்கக்கூடிய நாணம் — கூச்சம் — அடக்கம்— மிருதுவான குணம் முதலியவைகளெல்லாம் சுலபமாக மாறிவிடுகிறது. அதன் மூலம் ஆண்—பெண் சமத்துவம் என்ற பெயரில் ஆண் பெண் எல்லோரும் சுலபமாகப் பழகி அதன் மூலம் பலவித துரதிர்ஷ்ட சம்பவங்கள் நடைபெறுகின்றன. அதன் மூலம் வாழ்க்கையே இந்திய கலாசாரத்திலிருந்து வெகுதூரம் சென்று விடுகிறது.

இப்படிப்பட்ட நிலையிலிருந்து மாறுதல் ஏற்பட்டு ஒவ்வொருவரும் இந்திய கலாசாரம், பண்பாடு இவைகளுக்குக் குந்தகம் வராமல் தங்களுடைய செலவுகளைக் குறைத்துக் கொள்ளும் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டு வீட்டிலிருந்தே சம்பாத்தியம் செய்யக்கூடிய பையிண்டிங் — ஊதுபத்தி -- சோப் செய்வது போன்ற பலவித கைத்தொழில்களையும் ஜாப் டைப்களையும் கணக்கு முறைகளையும் லாபரெட்டரி போன்றவைகளை வைத்துப் பயிற்சி பெற்று அதன் மூலம் வீட்டில் இருந்தபடியே சம்பாத்தியம் செய்ய முயற்சி செய்ய வேண்டும். இப்படிச் செய்வதின் மூலம் ஆடம்பரச் செலவு குறைந்து சுய வருமானம் பெருகி, சுதேசிப் பொருள்கள் உபயோகிக்கும் முறை வளர்ந்து, இந்திய கலாச்சாரப் பண்பாடு, உணவு, உடை முதலியவைகளும் வளர்ச்சி அடைய ஏதுவாக ஆகும்.

பெண்களுடைய வளர்ச்சிக்காகவே நடைபெற்று வரும் ''மங்கையர் மலர்' இதுபோன்ற நல்ல நோக்கத்துடனும் இலட்சியத்துடனும் நடைபெற்று வருவதைக் கண்டு சந்தோஷிக்கிறோம்.

எல்லா வாசகர்களும் குறிப்பாகப் பெண்மணிகளும் நல்ல விஷயங்களை நிறைய அறிந்துகொண்டு வருங்கால சமுதாயத்தாரை நன்றாக உருவாக்க முயற்சி செய்ய வேண்டும் என்று ஆசிர்வதிக்கிறோம்.

நாராயணா!

எப்படி இருக்கும் 83?



'சௌமா'

ஆண்டு முழுவதற்கான சிறப்புப்பலன்

மேஷம்

அசுவினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் வரையில்:

ராசியாதிபதியாகிய செவ்வாய் இவ் வருட ஆரம்பத்தில் பத்தாமிடத்தில் உச்ச பலத்துடன் விளங்குவதால் தெளிவான மன நிலையும், சரளமான பண வசதியும் உண்டாகும். ஏழாவது மாதத்திற்கு மேல் பொருளாதார வகையில் கவனம் தேவை. உத்தியோகம், தொழில் ஆகிய ஜீவனோதி பத்தியம் சீரடையும். கலைஞர்களுக்குப் படிப் படியாக உயர்வுகள் உண்டாகும். இயந்திரம் இண்டஸ்ட்ரீஸ், வண்டி வாகனத் தொழில் மேன்மையடையும். குடும்பத்தில் வரவுக்கு மிஞ்சிய செலவுகளும், வீடு, நிலம் போன்ற முதலீட்டு விஷயமாகப் புதிய கடன்களும் வண்டி வாகன சீர்திருத்தமும், விவசாயி களுக்குச் செய்தொழிலில் உயர்வும் உண்டு. ராசிக்கு யோக கிரகமாகிய குரு எட்டா மிடத்திலிருந்துஏழாவதுபார்வையாக குடும்ப ஸ்தானத்தைப் பார்வையிடுவது விசேஷம். இதன் காரணமாக தனம், வாக்கு, குடும்பம் ஆகியவற்றில் சிறந்த சூழ்நிலையும் இதுவரை திருமணம் தாமதமடைந்தவர்களுக்கு விவா ஹப் பிராப்தியும் ஒருசிலருக்குக் கடல் கடந்து வெளி நாடு செல்லும் போக்கும் அமையும்.

ரிஷபம்

கிருத்திகை, 2, 3, 4, ரோகிணி, மிருக சீரிஷம் 1, 2 வரை

இந்த ராசியின் தர்ம கர்மாதிபதியாகிய சனீஸ்வரன் ஆறில் உச்ச பலத்துடன் விளங்கு வதால் இந்த வருடம் ஆரம்ப முதலே எல்லா வகையிலும் மேன்மைகளையும் சரள மான பண வசதிகளும் திட்டமிட்டவகையில் வெற்றிகளையும் ஏற்படுத்தும் விதமாக கிரக நிலைகள் அமைந்திருக்கின்றன. உத்தியோக வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு உண்டாகும். புதிய உத்தியோக முயற்சி பலிதமடையும். இட மாற்றத்தின் மூலம் கௌரவம் உயரும். வியாபாரம் தொழில், கமிஷன், கான்ட்ராக்ட் முதலிய வற்றில் இருந்து வந்த சிக்கல்கள் விலகும். குடும்பத்தில் மனைவியின் உடல் ஆரோக்கியம் முன்னேற்றமடையும். களத்திர ஸ்தானத்தில் குரு பலம் பெற்றிருப்பதால் திருமணம் தாமதமடைந்துள்ள இந்த ராசி ஆண் பெண்களுக்கு விவாகமும், குடும்ப வாழ்க்கையும் வெகு காலமாகப் புத்திர பாக்கியம் இல்லாமல் இருப்பவர்களுக்கு புத்திர பாக்கியமும் உண்டு. வருடம் முழு வதும் ராஜபோக வாழ்க்கையும் அமையும்.

மிதுனம்

மிருகசிரீஷம் 3, 4 திருவாதிரை புனர் பூசம் 1, 2, 3 வரை.

இந்த வருடம் ஆரம்பத்திலேயே ஜீவனாதி பதியாகியகுருஜீவன ஸ்தானத்தைப் பார்வை யிடுவதால் உத்தியோகம், தொழில் ஆகியவை நல்ல முறையில் அமையும். தன ஸ்தான மாகிய இரண்டாமிடத்தை சனீஸ்வரன் பார்ப்பதால் வரவுக்கு மிஞ்சிய செலவினமும் ஒருசிலருக்குஎதிர்பாராதபொருள்விரையமும் காணப்படுகின்றன. கமிஷன் கான்ட்ராக்ட் கலை சம்பந்தமான தொழில்கள் மேன்மை யடையும். இந்த வருடம் ஏழாவது மாதம் முதல் ராகு கேதுக்கள் ஆறு பன்னிரண்டில் மறைவதால் மறைமுக நேர்முக எதிர்ப் புகள் இருந்தாலும் சாதகமாகும். குடும்ப வாழ்க்கையில் நிம்மதியான போக்கும், சுப காரிய முயற்சியில் வெற்றியும் உண்டாகும். தாய், தந்தை ஆகியவர்களுக்கு நோய் நொடிகள் காணப்படுவதால் கவனம் தேவை. வெளியூர், வெளி நாட்டுப் பிர யாணம் வெற்றியைத் தரும்.

கடகம்

புனர் பூசம் 4 பூசம், ஆயில்யம் வரை

இந்த ராசிக்கு யோககாரனான செவ்வாய் இந்தப் புது வருட ஆரம்பத்திலேயே உச்ச

பலத்துடன் அமர்ந்து இருப்பதாலும் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் குரு பகவான் திரிகோணம் பெற்று இருப்பதாலும் இந்த வருடம் முழுவதும் பண வசதிக்குக் குறைவில்லை. நான்காமிடத்தில் சனி உச்சம் பெற்றுள்ளதால் உடல் ஆரோக்கியக் குறைவும் வீண் செலவுகளும், குழப்பமான மனநிலையும் காணப்படுவதால் பிரதி சனிக்கிழமைகளில் சனீஸ்வர பகவானுக்கு விளக்கேற்றுதல் நலம். உத்தியோகம், தொழில், கமிஷன், காண்ட்ராக்ட் போன்றவைகளில் புதிய முயற்சிகளில் கவனம் தேவை. பழைய கடன் காட்சி நோய் நொடிகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. ஜென்மராசியை இந்த வருடம் முழுவதும் குரு பார்வையிடுவதால் தெய்வ பலம் பரிபூர்ணமாக அமையும். பூர்வீக ஸ்திர சொத்து வாங்கல், விற்றல் ஆகியவை லாபகரமாக இருக்கும். வெளியூர், வெளி நாட்டுப் பிரயாணம் வெற்றியாக அமையும்.

சிம்மம்

மகம், பூரம், உத்திரம் முதல் பாதம்வரை

அட்டமாதிபதியாகிய குரு பகவான் அந்த வீட்டையே இந்த வருடம் முழுவதும் பார்வையிடுகின்றார். ஆகையால் குரு பார்க்க கோடி நன்மை என்ற விதிப்படி இந்த வருடத்தில் பல முக்கியமான காரியங்கள் சுலபமாக நடந்தேறும். தனலாபாதிபதியாகிய புதனும் இவ்வருட ஆரம்பத்தில் ஆறில் மறைந்து இருப்பதால் மறைந்த புதன், நிறைந்த செல்வம்! நிறைந்த அறிவு இவற்றைத் தருவான் என்ற விதிப்படி பண வசதிக்கும் குறைவில்லை. உத்தியோகம், தொழில் ஆகிய ஜீவனாதிபத்தியம் மேன்மையடையும். இதன் சம்பந்தமாக மேற்கொள்ளும் புதிய முயற்சிகளும் தாமதமடைந்தும் காரியானுகூலமடையும். குடும்பத்தில் ஒற்றுமையான வாழ்க்கையும்; குரு பலம் நிறைந்துள்ளதால் சுப காரியமும் திருமணம் தாமதமடைந்து இருப்பவர்களுக்கு விவாக பிராப்தமும் ஏற்படும். கலை, மருத்துவம், போன்ற தொழில்களில் இருப்பவர்களுக்கு எதிர்பாராத நன்மையும் தனலாபம் இந்த வருடம் முழுவதும் ராஜ போக வாழ்க்கையும் அமையும்.

கன்னி

உத்திரம், 2, 3, 4 அஸ்தம், சித்திரை 1, 2 வரை.

இந்த ராசிக்கு சுபக் கிரகமாகிய சனீஸ்வரன் புது வருட ஆரம்பத்திலேயே தனஸ்தானத்தில் உச்ச பலத்துடன் விளங்குவதால் இவ்வருடம் முழுவதும் சரளமான பண வசதியும், நிம்மதியான சூழ்நிலையும் உண்டாகும். உத்தியோகத்தில் பதவி உயர்வுடன் இடமாற்றமும், புதிய உத்தியோக முயற்சியில் வெற்றியும், வியாபாரம், தொழில் கமிஷன், காண்ட்ராக்ட் ஆகியவற்றில் புதிய முயற்சியும், வரவேண்டிய பழைய பாக்கிகள் வசூலாகி, முக்கியமான காரியத்தை முடித்துக்கொள்ளும் பாக்கியமும் உண்டாகும். ஏழாமிடமாகிய களஸ்திர ஸ்தானத்தை குரு பகவான் பார்வையிடுவதால் திருமணம் தாமதமடைந்துள்ள இந்த ராசி ஆண் பெண்களுக்கு விவாக ப்ராப்தமும் குடும்பத்தில் சுப காரியங்களும் புதிய வீடு, நிலம் போன்ற ஸ்திர சொத்து சேர்க்கையும் வீடு கட்டும் முயற்சியில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு வெற்றியும், இரண்டாவது ஏழரைச் சனி நடைமுறையில் இருப்பவர்களுக்கு எல்லா வகையிலும் பிரபலமான ராஜ போக வாழ்க்கையும் அமையும்.

துலாம்

சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3 வரை.

இந்த ராசிக்கு அதிபதியாகிய சுக்ரன் சனியுடன் பரிவர்த்தனை அடைந்து சுக ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் இந்த வருட ஆரம்ப முதல் ராசி நேயர்களுக்குப் படிப்படியாக சில சௌகரியங்களும், சரளமான பண வசதியும் வீடு, நிலம் வாங்கல், விற்றல் வகையில் எதிர்பாராத நன்மையும் இட மாற்றம், ஜாகை மாற்றமும் ஏற்படும். ராசிநாதனை சுக்ரன் செவ்வாயோடு சேர்ந்து பத்தாமிடத்தைப் பார்க்கும் சமயத்தில் புது வருடம் பிறப்பதால் உத்தியோகத்தில் மேன்மையுடன் பதவி உயர்வுடன் இட மாற்றமும் மூன்று ஒன்பதில் ராகு கேதுக்கள் சஞ்சரிப்பதால் மறைமுக, நேர்முக எதிரிகள் எதிர்ப்புக்களால் எந்தமான கெடுதல்களும் ஏற்படுவதற்கில்லை. வியாபாரம், தொழில் வகை உயர்வு பெறும். இரண்டாவது ஏழரைச் சனி நடைமுறையில் இருப்பவர்களுக்கு அதிர்ஷ்டமான வாழ்க்கை உருவாகும். குடும்பத்தில் இருந்து வந்த சங்கடங்கள் எல்லாம் படிப்படியாக விலகி அமைதியும், எளிமையான வாழ்க்கை ஏற்பட்டுவிடும். சுப காரியமும் திருமணம் தாமதமடைந்து இருப்பவர்களுக்கு விவாஹமும் குடும்ப வாழ்க்கையும் ஏற்படும்.

விருச்சிகம்

விசாகம் 4ம் பாதமும், அனுஷம் கேட்டை வரை.

ராசிநாதனை செவ்வாய் உச்ச பலத்தில் சஞ்சரிக்கும் சமயத்தில் இந்தப் புது வருடம் பிறந்துள்ள சமயத்தில் ஏழரைச் சனியும் நடைபெறுவதால் இரண்டாவது ஏழரைச் சனி நடைமுறையில் இருப்பவர்களுக்கு எல்லா வகைகளிலும் முன்னேற்றமும் முதலாவது ஏழரைச் சனி நடைமுறையில் இருப்பவர்களுக்கு தாமதம், தடங்கல்களுக்குப் பிறகு

ஓரளவு வெற்றியும் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு 16.7.83க்குப் பிறகு புதிய முயற்சிகளில் லாபமும் அலுவலகத்தில் கடனுக்கு மனுச் செய்திருப்பவர்களுக்கு கைக்குப் பணம் வந்து சேர்ந்து திட்டமிட்ட காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்பும் உண்டாகும். இயந்திரம், இன்டஸ்ட்ரீஸ் வண்டி வாகனம் விவசாயத் தொழில்களில் இருப்பவர்களுக்கு தொழில் வளர்ச்சி நல்ல விதமாக அமைந்த போதிலும் அவ்வப்போது பண முடையும் கொடுக்கல் வாங்கல் வகையில் சிக்கல்களும் ஏற்பட்டு நிவாரணம் உண்டாகும். குடும்ப வாழ்க்கையில் நிம்மதியான வாழ்க்கைஅமையும்.

தனுசு

மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை.

தனாதிபதியாகிய சனிஸ்வரன் லாப ஸ்தானத்தில் உச்சம் பெற்று இருப்பதால் தனம் குடும்பம் மேன்மையடையும். கடந்த வருடத்தில் இருந்து வந்த சங்கடங்கள் யாவும் நிவாரணம் அடையும். உத்தியோகத்தில் இருந்த சங்கடங்கள் மாறும். நீண்ட கால விடுமுறை அல்லது தற்காலிக விடுமுறை அல்லது தற்காலிக வேலே நீக்கம் போன்றவைகளை அடைந்து இருப்பவர்களுக்கும் உத்தியோக வாழ்க்கை சீரடையும். வியாபாரிகளுக்கும் இயந்திர சம்பந்தமான தொழில்களில் இருப்பவர்களுக்கும் தொழில் வளர்ச்சியும் சமீபத்தில் தொழில் செய்ய முடியாத நிலைமையை அடைந்தவர்களுக்கும் இந்தப் புது வருடத்தில் புது முயற்சியில் வெற்றியுண்டாகும். குடும்பத்தில் சுப காரிய முயற்சியில் வெற்றியும், குரு பலம் நிறைந்து இருப்பதால் திருமணம் தாமதமடைந்தவர்களுக்கு விவாகமும், குடும்ப வாழ்க்கையும் ஏற்படும். வெகு நாட்களாகப் புத்திர பாக்கியம் இல்லாமல் இருப்பவர்களுக்கு விரைவில் புத்திர பாக்கியமும் ஏற்படும்.

மகரம்

உத்திராடம் 2, 3, 4 திருவோணம் அவிட்டம் 1, 2 பாதம்வரை

அச்சம், திகில், குழப்பமான மனநிலை ஆகியவற்றுடன் இந்தப் புது வருடம் ஆரம்பமானபோதிலும் ஆறில் ராகு, பன்னிரண்டில் கேது மறைந்து இருப்பதால் இந்தப் புது வருட ஆரம்ப முதல் ராசி நேயர்களின் வாழ்க்கையில் பல நல்ல திருப்பங்களும் நன்மைகளும் சரளமாக பண வசதியும் ஏற்பட்டு விடும்.

உத்தியோகத்தில் இட மாற்றம், பதவி உயர்வு ஆகியவை வெகு விரைவில் ஏற்படும். புதிதாக உத்தியோகத்துக்கு முயற்சி செய்பவர்களுக்குக் காரியம் கைகூடும். வியாபாரிகளுக்கும் இயந்திரம் சம்பந்தமான தொழில்களில் இருப்பவர்களுக்கும் தொழில் வளர்ச்சியடையும். பழைய பாக்கிகள் வசூலாகி சரளமான பண வசதி உண்டாகும். குடும்பத்தில் ஒற்றுமையும் ஏழாமிடமாகிய களத்திர ஸ்தானத்தைக் குரு பார்வையிடுவதால் குடும்பத்தில் சுப காரியமும், புதிய வீடு கட்டும் முயற்சியில் வெற்றியும், ஜாகை மாற்றமும் அனுபவ பூர்வமாக அமையும்.

கும்பம்

அவிட்டம் 3, 4 சதயம், பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் வரை.

ஜீவனாதிபதியும், யோகக்காரனுமாகிய செவ்வாய் உச்சம் பெற்றுள்ள வேளையில்இந்த புது வருடம் பிறந்துள்ளதால் கடந்த காலத்தில் ஏற்பட்ட சகல விதமான சிக்கல்களும் சிரமங்களும் படிப்படியாக விலகி அமைதியும் இனிமையுமான வாழ்க்கை இந்தப் புது வருடத்தில் உருவாகும் என்பது நிச்சயம். உத்தியோகத்தில் மேலதிகாரிகளுக்கும் சக தொழிலாளர்களுக்கும் இடையில் ஒற்றுமையும், அலுவலகத்தில் கடனுக்கு மனுச் செய்து இருப்பவர்களுக்கு கைக்குப் பணம் வந்து சேர்ந்து, வீடு, நிலம் போன்ற ஸ்திர சொத்து சேர்க்கை அல்லது வீடு கட்டும் முயற்சியில் ஈடுபடல் போன்றவை உண்டு. வியாபாரிகளுக்கும் கமிஷன் கான்ட்ராக்ட் போன்றவற்றில் எதிர்பாராத லாபமும் அமையும். குடும்ப வாழ்க்கையில் சிக்கல்கள் யாவும் விலகி அமையும். இனிமையான வாழ்க்கை அமையும் என்பது நிச்சயம்.

மீனம்

பூரட்டாதி, 4 உத்திரட்டாதி ரேவதி வரை

இந்த வருடம் முழுவதும் ராசியாதிபதியும், ஜீவனாதிபதியுமான குரு பகவான் பாக்ய ஸ்தானத்தில் இருப்பதாலும் விரையாதிபதியான சனிஅஷ்டாமிடத்தில்மறைந்து உச்சம் பெற்று விபரீத ராஜ யோக லட்சணமுடன் விளங்குவதாலும் புத்தாண்டு அதிர்ஷ்டம் நிறைந்து விளங்குகிறது. உத்தியோகத்தில் எதிர்பாராத நன்மையும் ஒரு சிலருக்குக் கடல் கடந்து வெளிநாடு செல்லும் யோகமும் எதிர்கால வாழ்க்கைக்கு ஏற்ற வகையில் பலமான அஸ்திவாரமும் உருவாகும். வியாபாரிகளுக்குக் கொடுக்கல் வாங்கல் சீரடையும். ஒருசிலருக்குப் புதிய நூதனமான தொழில் அமையும். குடும்ப வாழ்க்கையில் குதூகலமும் வண்டி வாகன கால்நடை, கட்டிட சீர்திருத்தமும் சுப காரிய முயற்சியில் வெற்றியும் திருமணம் சுணங்கியவர்களுக்கு குடும்ப வாழ்க்கையும் உருவாகும்.

கணித்தவர் : 'சௌமா'
ஆசிரியர், உங்கள் எதிர்காலம்



அன்பார்ந்த குழந்தைகளே!

உங்கள் ஆசை நிறைவேறுகிறது!


கோகுலம் மீண்டும் மலர்கிறது - மாதப்பத்திரிகையாக.

அதுவும் உங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய **அழ. வள்ளியப்பா** அவர்களைக் கௌரவ ஆசிரியராகப் பெற்று பொங்கல் திருநாளில் வெளியாகிறது.

முழுநாவல், சிறுகதைகள், பாடல்கள், வேடிக்கை விளையாட்டுக்கள், சிரிப்புப் பகுதிகள், பொது அறிவு விஷயங்கள், நல்லறிவூட்டும் கட்டுரைகள், தொடர்கதைகள், பக்தி வளர்க்கும் பக்கங்கள், மூளைக்கு வேலை முதலிய எல்லா அம்சங்களும் குறையின்றி இடம் பெறும். நீங்களும் உங்கள் எழுத்தாற்றலைக் காட்டலாமே! எழுதுங்கள், வரவேற்கிறோம்.

96 பக்கங்கள் ● ரூ. 2/- ● ஆண்டுச் சந்தா ரூ. 24/-

கோகுலம் கிண்டி, சென்னை-600 032.



காரணம், குழந்தைகளின் விரைந்த முழுவளர்ச்சிக்கான அதிக ஊட்டச்சத்துள்ள திட உணவாகும் ஃபாரெக்ஸ்.

உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான புரதச்சத்து நிரம்பியதாகும் ஃபாரெக்ஸ்.

புரதச்சத்துப் பற்றுக்குறையிலிருந்து குழந்தையைப் பாதுகாப்பதற்கென்றே உலக உடல்நலக் கழகம் பிராண்டு செய்யப்பட்ட திட உணவுகளில் அடங்கி இருக்கவேண்டிய புரதச் சத்தின் அளவு பற்றி சில தர நிர்ணயங்கள் விதித்துள்ளது. சிபாரிசு செய்துள்ள முறையைப் பின்பற்றி ஃபாரெக்ஸ் திட உணவைத் தயாரித்து அளித்தால் அது உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான புரதச்சத்து செறிந்ததாகும்.

ஆரோக்கியமான இரத்தத்திற்கென கூடுதல் இரும்புச்சத்து அடங்கியதாகும் ஃபாரெக்ஸ்.

"தாயிடமிருந்து ஏராளமான இரும்புச் சத்தைப் பெற்று குழந்தை பிறக்கிறது. பிறந்த பிறகு மெல்ல மெல்ல இரும்புச்சத்தின் அளவு குறையத் தொடங்குகிறது. பால் நல்ல உணவாக இருப்பினும், இரும்புச்சத்துப் பற்றுக்குறையினால் அது முழுமை யாவதில்லை. ஆகவே, குழந்தைக்கு இரும்புச்சத்து அடங்கிய திட உணவு தேவைப்படுகிறது."

—டாக்டர் சுபாஷ் C. ஆர்யா

குழந்தையின் இரத்தத்திற்கும், தொற்று நோய் எதிர்க்கும் சக்திக்கும், அவனது பொது ஆரோக்கியம் மற்றும் வளர்ச்சி இவற்றுக்குத் தேவை இரும்புச்சத்து. அதனால்தான் ஃபாரெக்ஸில் வேறு எந்த பிராண்டு செய்யப்பட்ட திட உணவைக் காட்டிலும் அதிக இரும்புச்சத்து அடங்கியுள்ளது.

உங்கள் குழந்தையின் பற்களுக்கும் எலும்புகளுக்கும் அத்தியாவசியமான கால்ஷியம் மற்றும் ஃபாஸ்ஃபரஸ் சரியான விகிதத்தில் அடங்கியுள்ளதாகும் ஃபாரெக்ஸ்.

உங்கள் குழந்தையின் பற்கள் மற்றும் எலும்புகளின் சீரான வளர்ச்சிக்குத் தேவை கால்ஷியம் மற்றும் ஃபாஸ்ஃபரஸ். ஆனால் 2:1 என்னும் விகிதத்தில் இவை ஒன்று சேர்ந்திருந்தால்தான் குழந்தைக்கு மிகச்சிறந்த பயனளிக்கும். இந்த இரண்டு அத்தியாவசியமான உட்பொருள்களும் உன்னதமான விகிதத்தில் அடங்கியதாகும் ஃபாரெக்ஸ். அது உங்கள் குழந்தை மிக ஆரோக்கியமான எலும்புகளையும் மிக திடமான பற்களையும் பெறுவதை உறுதி செய்கிறது.

தவிர, ஃபாரெக்ஸ் எளிதில் செரிக்கக்கூடியதாகும்.

குழந்தையின் மென்மையான செரிக்கும் சக்திக்கேற்றவாறு விசேடமாக முன்கூட்டியே பக்குவம் செய்யப்பட்டதாகும் ஃபாரெக்ஸ்.





டாக்டர்கள் சிபாரிசு செய்வது

ஃபாரெக்ஸ்®

வழங்குவோர் க்ளாக்ஸோ

CASGLF-39-206 TAM

22

நவராத்திரி கொலுவுக்கு அவளுக்குமுதல் முதலாக காமாட்சி புடவை கட்டிவிட்டாள். கட்டிவிட்டு, 'அட, என் கண்ணே பட்டுடும் போல இருக்கே' என்று கன்னத்தின் ஓரத்தில் திருஷ்டி பொட்டு இட்டாள். ரவி உள்ளே வந்து, ''ஹாய், நன்னு இருக்கேடி !'' என்றான். தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டபோது அவள் இதயம் படபடத்தது. அந்தக் கணத்தில் அவள் தன்னுடைய பெண்மையை ஒத்துக் கொண்டது போலத் தோன்றியது. அதில் ஒரு புதிய சந்தோஷம் இருந்தது அவளுக்கு. இந்த நாட்கள் சுவாரஸ்யமும் எதிர்பார்ப்பும் தந்தன. எதனால் சுவாரஸ்யம், எதற்கு எதிர்பார்ப்பு என்பது புரியவில்லை. எதிர்காலத்தில் அவளுக்கு ஏதோ ப்ரத்தியேகமாகநிகழப்போகிறது என்பது தெரிந்தது. இதெல்லாம் அதற்கு ஒரு விதத்தில் தன்னை ஜோடித்துக் கொள்வது போல் இருந்தது.

அந்த அறையின் மெலிதான இருட்டில் அவள் ஜொலித்தாள். பட்டு அவள் உடம்பைத் தடவும்போது அதில் ஒரு சந்தோஷம் இருந்தது. அதன் தடவலில், அதன் வாசனையில் அந்த வாசனையுடன் அம்மா சூட்டிய கதம்ப வாசனை, கழுத்தில் புஸ்ஸென்று அடித்த பாண்ட்ஸ்பூம் வாசனை, பவுடர் வாசனை அம்மா தன் பச்சைக் கல் நெக்லஸை அவள் கழுத்துக்குப் போட்டிருந்தாள். தொண்டையில் சில்லென்றிருந்ததுகூடப் பிடித்திருந்தது. அவள் அழகுபடுத்தப்படுகிறாள். தலை மயிர் ஒழுங்காக வாரிப் பின்னப்பட்டிருக்கிறது. வகிடுதான் எத்தனை நேர். உதட்டில்தான் எத்தனை சிவப்பு! அவள் மெல்ல மலர்கிறாள்! அவளுக்குள் கிணற்றில் ஜலம்போல சாத்தியங்கள் ஊறுகின்றன. சந்தோஷமாக இருக்கிறாள். பயப்படுகிறாள். நதிபோல் பிரவாகிக்கிறாள். இதோ இந்த அறையைவிட்டு வெளியே போகும்போது அவள் உண்டாக்கப் போகும் படபடப்பைப் பற்றி ரகசியமாக தெரிந்து கொண்டுதான் போகிறாள்.

கொலு பார்க்க பாஸ்கர் நிச்சயம் வருவான். அனுபமாவின் அக்கா பையன் வருவான். கொலுவுக்கு அழைக்கப்போகும் போது வீதியில் பல பையன்கள் அவளைப்பார்ப் பார்கள். அவர்கள் பேசிக்கொண்டிருப்பது பாதியில் நின்றுபோய்விடப் போகிறது. அவள் சிநேகிதிகளே அவளை இன்று வித்தியாசமாகப்பார்ப் பார்கள். அவர்கள் கண்களில் பொறாமை இருக்கும். பாடச் சொல்லுவார்கள். பிகு பண்



ணிக் கொள்ளப் போகிறான். பாய் போட்டு முழங் காலை அழகாக மடக்கிக் கொண்டு ஒரு கையை ஊன்றிக் கொண்டு அவள் அதிகம் பேசாமல் எல்லாவற்றையும், ஒருவிதமான வரவழைத்துக் கொண்ட ஆர்வத்துடன் அறியாமையுடன், கவனிக்கப் போகிறான். அவளைப் பற்றி மற்ற பேர் பேசினால் அவள் சிரித்துக் கொண்டு சும்மா இருப்பாள்.

பாஸ்கருக்கு அக்கா வயிற்றைச் சாய்த்துக் கொண்டு பிள்ளையாண்டிருந்தாள். அதனால் பாஸ்கரே வந்து கொலுவுக்கு அழைத்து விட்டுப் போனான். ''மாமி, சின்னுவையும் கட்டாயம் கூட்டிண்டு வாங்கோ! அக்கா படிச்சுப் படிச்சு சொன்னா.''

சின்னு அம்மா பின்னால் பாஸ்கர் வீட்டுக்குப் போயிருந்தபோது பாஸ்கர் அவன் சைக்கிளைத் துடைத்துக் கொண்டிருந்தவன் சட்டென்று எல்லாவற்றையும் கீழே போட்டு விட்டு உள்ளே ஓடினான். சற்று நேரத்தில் பளிச்சென்று சொக்காயும் பாண்டும்போட்டுக் கொண்டு, ''வாங்கோ'' என்றான்.

''சின்னு, முதல் தடவை எங்க வீட்டுக்கு வர இல்லே? அம்மா! அம்மா!'' என்று உள்ளே கூப்பிட்டான். அவன் அம்மாவும் அக்காவும் வந்ததும், ''போடா, பொம்மனாட்டி பண்டிகையில் உனக்கு என்னவேலை?'' என்று துரத்தினபோது பாஸ்கர் வெளியே போகாமல் வாசல் அறைக்குள்போய் உட்கார்ந்து கொண்டு, அங்கே டேப் ரிக்கார்டரைப் போட்டுப் பாட்டுக் கேட்டான். அவன் அறையில் இல்லாமலிருந்தும் அவன் இருப்பதை அடிக்கடி உணர முடிந்தது. பேனாவுக்கு இங்க் போடுவது போல் வந்து அலமாரியைக் குடைந்தான். ரேடியோவில் இங்கிலாந்து காமெண்ட்ரி வருகிறதா என்று திரடிப் பார்த்தான். ஒரு முறை, ''மாமி, இந்த வாரம் கெரஸின்வாங்கிட்டீங்களா?'' என்று விசாரிக்க வந்தான். ''உங்ககிட்டத்தான் கிரஸின் எல்லாம் வாங்கித் தரான். ஆத்திலே ஒரு காரியம் சொன்னா செய்ய மாட்டான். குறவன்! எப்பப் பார்த்தாலும் சைக்கிளை எடுத்துண்டு சுத்தறது! படிப்புங்கறது கிடையவே கிடையாது!''

''என்ன பாஸ்கர், அம்மா சொல்றது நிசமா? நாளைக்கு உனக்குப் படிப்பில்லேயானா யாரும் பெண் கொடுக்கமாட்டாளே''

சுஜாதா



''அதெல்லாம் பொய், மாமி! மதுவைக் கேளுங்கோ, நான் எப்படிப் படிப்பேன்னு!''

''என்ன கிழிச்சியோ போ!''

வீட்டிலிருந்து திரும்பும்போது, ''நான் தெரு கோடி வரைக்கும் கொண்டுவிடறேன், மாமி! விளக்கில்லே பாருங்கோ!''

''பரவாயில்லேப்பா, நாங்க போய்க்கறோம். அப்படி ஒண்ணும் பயமில்லே.''

''உங்களுக்குத் தெரியாது, மாமி!'' என்று சைக்கிளை எடுத்துக் கொண்டு உடன் வந்தான்.

''ரொம்ப நல்ல பையன்! ரொம்ப ஒத்தாசை. நம்ம மது ரவி ஏன் இப்படி இருக்க மாட்டேங்கறு?''

தெரு மூலையில் இருட்டில் ஒரு தடவை பாஸ்கர் அவளை முதுகில் தொட்டான். அவளுக்கு உடம்பெல்லாம் சில்லென்று ஆகிவிட்டது.

சிலருக்குக் கண்ணைச் சுற்றிலும் கருவளையம் காணப்படும். இது பலவீனம் காரணமாக ஏற்பட்டதாகும். சிறிதளவு தேங்காய் எண்ணெயுடன் மஞ்சள் பொடியைக் குழைத்து நன்கு காய்ச்சி அதனைத் தினமும் குளிப்பதற்கு முன் கண்ணைச் சுற்றிலும் தேய்த்துப் பின் பத்து நிமிடம் ஊறி, தொடர்ந்து சில நாட்கள் குளித்தால் பலன் கிட்டும்.

—அகிலா கோபால்

காமாட்சியின் தம்பி, பட்டு மாமா என்று அவரைப் பேர் சொன்னார்கள். அவருடைய மனைவியுடன் வந்திருந்தார். பட்டு மாமா அம்மாவைவிட வயசில் சின்னவர். முன் மண்டையில் வழுக்கை இருந்தாலும், பட்டு மாமா பார்க்க தமாஷாகத்தான் இருந்தார். அதற்கேற்றாற்போல் தமாஷாகவும் பேசினார். அவர் மனைவி நளினியை எப்போதும் அழுகை வரும் வரைக்கும் கிண்டல் பண்ணிக் கொண்டு இருந்தார். இவர்கள் எல்லோரையும் பல இடத்துக்குக் கட்டாயமாக அழைத்துச் சென்றார். அவர் வடக்கே ஏதோ ஃபாக்டரியில் இருப்பதால் தமிழ்ப் படங்கள் பார்க்க வாய்ப்பில்லாததால் தினப்படிக்கு ஒரு படமாக பார்த்துத் தள்ளிக் கொண்டிருந்தார். நளினிக்கு அலுத்துப் போனாலும் பட்டு மாமா இவர்களை கூட்டிக் கொண்டு இருக்கிற இருப்பையெல்லாம் பார்த்தார். பட்டு மாமாதான் இவளைப் பார்த்து, ''காமாட்சி உம் பொண்ணு. சினிமா ஸ்டார் மாதிரி அழகா இருப்பா பாரு. இந்த வயசிலேயே என்ன தளதளன்னு இருக்கா பாரு. இவளால் ரொம்ப பிராப்ளம் வரப்போறது. இப்பவே ரௌடிப் பசங்களாம் சுத்துவாங்களே!''

''ஏன், ரொம்ப அனுபோகமோ?'' என்று நளினி கேட்க—

''அனுபோகந்தான். மாலதின்னு வடக்கு மாசி வீதிலே ஒரு பொண்ணு. நான் எஸ்.எஸ்.எல்.ஸி. படிச்சிண்டிருந்தபோது இருந்தா. அம்பது வயசுக்கு மேற்பட்டவா எல்லாரும் சுத்திண்டு இருந்தா. நான் வாடகை சைக்கிள் எடுத்து அவ வீட்டுக்கு முன்னாலேயே நூறு ரவுண்டு அடிச்சி இருக்கேன். இப்ப அந்தத் தேவதை எங்கே இருக்காளோ?''

இப்படியெல்லாம் பெண்டாட்டியிடம் பட்டு மாமா பேசுவது சின்னுவுக்கு ஆச்சரியமாக இருந்தது. நளினி கோபித்துக்கொள்கிற மாதிரி பேசினாலும் உள்ளூர கோபமில்லே என்பதும் தெரிந்தது. பட்டு மாமா அவளுக்குத் தங்கத்தில் ஒரு நகை வாங்கிக் கொடுத்தார். அதை அவரே போட்டுவிட்டு, ''இந்தப் பொண்ணுக்கு சதிர் ஏதாவது சொல்லித் தர்றதுதானே! பொம்மை மாதிரி இருக்கே!'' என்று அவள் கன்னத்தில் முத்தம் கொடுத்தார். அதே சமயம் அவளை பின் பக்கத்தில் சதையை அள்ளிக் கிள்ளினார். புஜத்தில் அழுத்தினார்.

பட்டு மாமா ஊருக்கு இரண்டு தினங்களில் கிளம்பிவிடப் போகிறாரே என்பதில் எல்லாருக்கும் வருத்தமாகத்தான் இருந்தது. சின்னுவுக்கு நளினியைப் பிடித்துப்போயிருந்தது. அவள் டிரஸ் பண்ணிக்கொள்ளும்போது சின்னுவையும் சேர்த்துக்கொள்ளுவாள். உள் பாவாடையில் ரொம்ப நேரம் கண்ணாடிக்கு முன் நின்று கொண்டு சட்டென்று ரவிக்கை மாற்றிக் கொள்ள பட்டன்களைக் கழற்றிப் பாடியில் நிற்பாள். இந்தப் பக்கம் அந்தப் பக்கம் திரும்பித் திரும்பி கண்ணாடியில் பார்த்துக் கொள்ள சட்டென்று பாடியையும் கழற்றி சுதந்திரமாகி பாவாடை நாடாவைத் தளர்த்தி மார்பை மூடிக் கொள்வதற்குள் சற்று நேரம் நளினியின் இரண்டு மார்பகங்களும் தெளிவாகத் தெரிவதை சின்னு கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பாள். சின்னுவுக்கு மருதோன்றி அழகாக இட்டுவிடுவாள். அவளுக்குப் பவுடர் எப்படிப் போட்டுக் கொள்ள வேண்டும், காம்பாக்ட் மேக் அப் என்றால் என்ன, லிப்ஸ்டிக்கூட இலேசாக தீற்றிவிட்டாள்.

''என்னடி பாடி இது, உங்கம்மா தெச்சதா?''

''ஆமாம், மாமி, வடாம் வத்தல் மாமி கிட்டே அளவு கொடுத்துத் தெச்சண்டது.''

''இதபாரு, இது எனக்கு சின்னதாப் போச்சு. அதை நீ வெச்சுக்கோ!''

''அய்யோ, அம்மா திட்டுவா மாமி!''

''என்னை மாமின்னு கூப்பிடாதே, ரொம்ப வயசாயிட்ட மாதிரி இருக்கு. நளினின்னே கூப்பிடு. அம்மாகிட்டே எதுக்கு காட்டறே? பொட்டிக்குள்ளே வைச்சுக்கோ. எப்பவாவது சினிமா போறபோ போட்டுக்கோ. திம்முனு இருக்கும். இப்பவே யாரும் பார்க்க மாட்டா. போட்டுண்டு பாரு !''

''அந்தப் பக்கம் திரும்பிக்குங்கோ !''

''என்னடி வெக்கம் ? நானும் கல்யாணத்துக்கு முன்னாடி வெக்கப் பட்டுண்டு தான் இருந்தேன். அம்மாவை என்னைத் தேய்க்க விடமாட்டேன். முதுகில் இருக்கிற மச்சம்கூடத் தெரியக்கூடாது. ரொம்ப ரகளை பண்ணுவேன். இப்ப எல்லாம் மரத்துப் போச்சு.''

'' ஏன் ?''

''என்னு உனக்குக் கல்யாணம் ஆனப்புறம் தெரியும் '' என்றான். இந்தா செண்ட்டு இதையும் வெச்சுக்கோ. இது ஃபாரின் பவுடர்''எல்லாம் கொடுத்து அவள் கன்னம் காயம் படும்படியாக முத்தம் கொடுத்து. ''அடுத்த லீவுக்கு சித்திரிக்கு வா. எனக்கு ஏதாவது வேணும்னு லெட்டர் போடு.... என்ன சின்னு ?''

'' சரி, நளினி !''

நளினி இப்போது பெருமைக்குரிய சிநேகிதி மாதிரித்தான் தோன்றினாள். நளினி, தன்னை அந்தரங்கத்துக்குள் அழைத்துக்கொண்டு விட்ட நளினி. அம்மாவிடம் சொல்லாததைக் கூட நளினியிடம் சொல்லலாம்போல் இருக்கிறது. அம்மாவிடம் சொல்லாதது என்ன இருக்கிறது என்று யோசித்துப் பார்த்தாள். ஒன்றும் தென்படவில்லை.

சாயங்காலம் நாலு மணிக்கு பள்ளிக் கூடத்தில் வாலண்டியராக இருந்தபோது கொடுத்த பாட்சை நளினிக்குக் கொடுக்கலாம் என்று தோன்றி நளினியைத் தேடிச் சென்ற போது கூடத்தில் யாரும் இல்லை. அம்மா ஸ்டோருக்குப் போயிருந்தாள். அப்பா ஆபீஸிலிருந்து வரவில்லை. மூனு பேரும் விளையாடப் போயிருந்தார்கள். ஹாலே வெறிச்சென்று இருக்க சத்தம் போடாமல் போய் நளினி கண்ணைப் பொத்த வேண்டும் என்கிற ஆசை அவளுக்கு உதயமாகி, மாடிக்குப் போனாள். படிகளில் பாதம் ஒத்தும்போது கவனமாக நடந்தாள். மாடி அறைக் கதவை மெல்லத் திறந்து எட்டிப் பார்த்தாள்.

அங்கே பட்டு மாமா நளினியை...

அந்தக் காட்சியைப் பார்த்ததும் அவள் தனக்குள் ஒன்றைப் பரிபூரணமாக இழந்தாள்.

(தொடரும்)

இம்மாத இல்லத்தரசி போட்டி

பொருள்: கோஸ் (அ) காலிபிளவர்

முடிவு தேதி: 15 - 1 - 83

சமையல் கூப்பன்

.... என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

திருமணமலர்

பிராமணர், வடமாள், கௌண்டின்ய, ரேவதி, 30 வயது, பி.யு.சி. படித்துசென்னையில் புகழ் பெற்ற கம்பெனியில் பணி செய்து மாதம் ரூ. 1500 சம்பளம் பெறும் இளைஞருக்கு மாநில அரசாங்கத்திலோ, அல்லது மத்திய அரசாங்கத்திலோ பணியாற்றும் பிராமண வகுப்பைச் சேர்ந்த பெண் தேவை. பெட்டி எண் 606

கார்காத்த வெள்ளாளர் பிள்ளை வகுப்பைச் சேர்ந்த குடும்பப் பாங்கான மணமகளுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த வரதட்சிணை எதிர்பார்க்காத முற்போக்கு எண்ணம் கொண்ட நல்ல வேலையில் இருக்கும் மணமகன் தேவை இரண்டாம் தாரமாயினும் பரவாயில்லை. வயது முப்பதுக்குள் இருக்க வேண்டும்; குழந்தைகள் இருக்கக் கூடாது.
பெட்டி எண் 607

சொத்தும் வசதியும் உள்ள B.E. TNHBயில் A.E.ஆகரூ.1000க்குமேல் சம்பளம், வயது25 உடைய பிள்ளைக்கு சொத்தும் வசதியுமுள்ள சைவ உணவு சமைக்கத் தெரிந்த, குடும்பப் பாங்கான முதலியார், பிள்ளை, துளுவ வேளாளர். வெள்ளாள நாயக்கர் இவர்கள் வழிகளில் அழகுள்ள குணமுள்ள பெண் தேவை. பெட்டி எண் 608

25 வயது முதலியார் (அசைவம்) வகுப்பைச் சார்ந்த பிரபல பத்திரிகைக்குஏஜண்டாக இருக்கும் பிள்ளை மாதம் ரூ. 1500க்கு மேல் வருமானம் பெறும் ஒருவருக்கு எஸ்.எஸ் எல்.சி. வரை படித்த 18–20 வயதுக்குள் முதலியார் வகுப்பைச்சேர்ந்த பெண் தேவை. முதலியாரில் எந்தப் பிரிவாயிருந்தாலும் சரி பெட்டி எண் 609.

அரசு வங்கி யொன்றில் அலுவலராகப் பணியாற்றும் 25வயதுள்ள வடகலை சித்திரை நட்சத்திரம், நைத்ரப காச்யப கோத்ரம் பெண்ணுக்கு 29 வயதுக்குள் பி.ஏ. படித்துள்ள சென்னையில் வசிக்கும் வடகலை மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். போட்டோ இருப்பின் நலம். பெட்டி எண் 610

கௌண்டின்ய கோத்ரம், வடமாள், எஸ். எஸ். எல். சி. படித்து தனியார் இலாகாவில் வேலை, ரூ. 800 சம்பளம். அஸ்தம், வயது 31, பிராமணன் வகுப்பைச் சேர்ந்த கவர்ச்சியான பையனுக்கு அரசு பணி அல்லது வங்கியில் வேலை பார்க்கும் 26 வயதுக்குட்பட்ட உயரமான அழகிய பெண் தேவை. ஜாதகம் இல்லை. மலர் தேர்ந்தெடுத்தல் போதுமானது எதுவும் எதிர்பார்க்கப்படமாட்டாது. பெட்டி எண் 611.

பிஜி தீவில் பிறந்து அங்கு நிரந்தரக் குடி உரிமை பெற்றுச் சொந்தத் தொழில் நடத்தி வரும் கொங்கு வெள்ளாளக் கவுண்டர் 30 வயது அழகிய படித்த லட்சாதிபதி மணமகனுக்கு இந்தியாவில் தமிழ் ஆங்கில மொழி நன்கு பேச, எழுதத் தெரிந்த 30 வயதுக்குக் கீழ் உள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்த குணமுள்ள அழகிய மணமகள் தேவை. வரதட்சிணை தேவையில்லை. எம்மதமும் சம்மதம். புகைப்படத்துடன் எழுதவும். பெட்டி எண் 612.

சிறந்த உத்தியோகத்தில் இருக்கும் 31 வயதான சட்ட பூர்வமாய் விவாஹரத்து பெற்ற குழந்தைகள் இல்லாத ஐயர் பெண்ணுக்கு பரத்வாஜ கோத்திரம் அல்லாத மணமகன் தேவை. பெட்டி எண் 613.

கௌசிக கோத்ரம், பூச நட்சத்திரம், 26 வயது தனியார் துறையில் பணி புரியும் பி.ஏ. பட்டதாரி ஐயர் பெண்ணுக்கு சென்னையில் தனியார் துறை அல்லது அரசாங்கத்தில் பணிபுரியும் மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் 614.

பாரத்வாஜ ஐயர், வடமாள், வயது 31, அனுஷம். பிரபல தனியார் நிறுவனத்தின் திருவனந்தபுரம் கிளையில் வேலை. மாத வருமானம் ரூ. 850. அழகும், தெய்வ சிந்தனையும் உள்ள பெண் தேவை. வேலையில் இருந்தால் நல்லது. ஜாதகம், போட்டோவுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் 615

காச்யப கோத்ரம், வாத்யமா வயது 35 திருவோணம் B.sc., B.Ed பட்டதாரியான தமிழ் நாட்டில் கணித ஆசிரியை வேலை பார்க்கும் நல்ல குடும்பத்தில் உள்ள ஐயர் பெண்ணுக்குத் தகுந்த வேலையில் உள்ள ஐயர் மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் 616.

வயது 33. பாரத்வாஜ வடமாள் ஐயர், உத்திரம். திருவனந்தபுரத்தில் கவர்மெண்டு ஏற்றெடுத்த ஸ்தாபனத்தில் வேலை. மாத வருமானம் ரூ. 700. சங்கீத ஞானமும் அழகும் உள்ள பெண் தேவை. வேலையில் இருந்தால் நல்லது. ஜாதகம், போட்டோவுடன் அனுப்பவும். பெட்டி எண் 617.

32 வயது சைவ முதலியார் பெண்ணுக்கு 32 வயதுக்கு மேல் 38 வயதுக்குள் (சைவ முதலியார்) வரன் திருமணம் ஆகாதவர்கள் வழக்கறிஞர் அல்லது கல்லூரி ஆசிரியர் புலவர், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஜாதகத்துடன் விரைவில் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண் 618.

12.8.60ல் பிறந்த எஸ். எஸ். எல். சி., ஷார்ட் ஹாண்ட் டைப் பாஸ், மத்தியஅரசு கண்ட்லா போர்டில் வேலை பார்க்கும் ஸ்ரீவத்ச கோத்திரம் வடகலை ஐயங்கார் பையனுக்கு மாத வருமானம் 800. தென் கலையும் வேறு பிரிவும் நடக்கும். தொடர்பு தமிழில் மட்டும். பெட்டி எண் 619.

பாரத்வாஜ கோத்ரம், வடமாள் 32 வயதுடைய அரசுடைமை வங்கியில் அதிகாரியாக உள்ள பையனுக்கு அதே பிரிவைச் சேர்ந்த பட்டதாரிப் பெண் தேவை. வேலை தேவையில்லை. பெட்டி எண் 620.

ஆத்ரேய கோத்ரம், தென்கலை, சதய நட்சத்திரம் 5'4'' உயரமுடைய 28 வயது தனியார் பள்ளியில் ஆசிரியை வேலை பார்க்கும் பெண்ணுக்கு அதே பிரிவைச் சேர்ந்த நல்ல வேலை பார்க்கும் பையன் தேவை. பெட்டி எண் 621

பி.எஸ்.ஸி. பட்டதாரியான மாதம் 500 சம்பளம் பெறும் 5' உயரமுள்ள 22 வயதுப் பெண்ணுக்குத் தகுந்த மணமகன் தேவை. கலப்பு மணத் தம்பதிகளின் மகளான அவளுக்கு மணமகன் முற்போக்கு எண்ணம் கொண்ட கலப்பு மணத் தம்பதிகளின் மகனாய் இருந்தால் நல்லது. பெட்டி எண் 622.

அரசு வேலை. வருமானம் ரூ. 800. வயது 31. தாரமிழந்து இரண்டு வயது ஆண் குழந்தை மட்டும். கொங்கு செட்டியார். மேற்படி வரனுக்குப் பெண் தேவை. சைவ பிள்ளை. சைவ முதலியார், கலப்புக்குடும்பமாக இருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். பெட்டிஎண் 623.

27 வயது நிரம்பிய எஸ்.எஸ். எல். ஸி. வரை படித்த குடும்பப் பணிகளில் நன்கு தேர்ச்சி பெற்ற பெண்ணுக்குத் தகுந்த மணமகன் தேவை. பெண்ணின் தாயார் பிராமண வைணவ குலத்தைச் சேர்ந்தவர். தகப்பனார் நாயுடு. மணமகன் பிராமண குலத்தைச் சேர்ந்தவராகவோ அல்லது பெற்றோரில் எவரேனும் ஒருவர் பிராமண குலத்தைச் சேர்ந்தவராக இருப்பதும் சைவஉணவு அருந்துபவராக இருப்பதும் முக்கியம். பெட்டி எண் 624.

வடகலை, அய்யங்கார், கௌசிக கோத்ரம் மிருகசீர்ஷம் 1ம் பாதம், 26 வயது பி.காம் பம்பாயில் தனியார் கம்பெனியில் மாதம் ரூ. 1000 வாங்கும் பையனுக்கு நன்கு படித்த (அ) வேலையில் இருக்கும் அய்யங்கார் பெண் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் 625.

சுத்தவெலநாடு, காசிபகோத்ரம், ஆயில்ய நட்சத்திரம், 21 வயது டைப்ரைட்டிங் பாஸ் செய்து, நர்சரி ஸ்கூல் டீச்சர் டிரெயினிங் முடித்து டீச்சராக வேலை பார்க்கும் பெண்ணுக்குத் தகுந்த வரன் தேவை. ஜாதகங்கள் வரவேற்கப்படுகின்றன. பெட்டி எண் 626.

இரு குடும்பங்களும் சம்மதித்து கணவனால் எழுத்து மூலமாக பரிபூரணமாக மறு மணத்திற்குச் சம்மதம் அளிக்கப்பட்டு திருமணமான வெகு சில நாட்களிலேயே நிரந்தரமாகப் பிரிந்து வாழும், உத்தியோகத்தி லிருக்கும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த நாயுடு பெண்ணுக்கு 36 வயதுக்கு மேல் பரந்த மனப்போக்குடைய நல்ல நிலையில் இருக்கும் வரன் தேவை. மனைவியை இழந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட எல்லாப் பிரிவினரும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண் 627.

பி.யு. சி. படித்து மத்திய அரசில் வேலை. ஸ்ரீவத்ஸ, பரணி, தென்கலை, குழந்தைகள் இல்லாத 29 வயது விதவைக்கு 38 வயதுக்குள்பரந்தமனப்பான்மையுள்ளவரன் தேவை. வடகலையானாலும், குழந்தைகள் இல்லாத அய்யங்கார் வரனாக இருந்தாலும் விண்ணப்பிக்கலாம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும் பெட்டி எண் 628.

சடமர்ஷண கோத்ரம், அய்யங்கார், வடகலை, ஹஸ்த நட்சத்திரம், 29 வயதுள்ள பி. காம் படித்து உத்தியோகத்தில் 1200 ரூ. சம்பாதிக்கும் பையனுக்கு 24 வயதுக்குள் உள்ள பம்பாயில் வேலை பார்க்கும் பட்டதாரி பெண் தேவை. விவரங்களுடன் ஜாதகம் அனுப்பவும். பெட்டி எண் 629.

உத்திராடம், ஹரித கோத்ரம், வடகலை, ஐயங்கார், உயரம் 4'-11'', எஸ்.எஸ்.எல்.சி. டெய்லரிங் ஹையர் பாஸ்செய்த 25 வயது குடும்பப் பாங்கான பெண்ணுக்கு அதே வகுப்பில் நல்ல படிப்பு, வேலை, வருமானம் உள்ள

மணமகன் தேவை. ஜாதகம், குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி 630.

வடகலை, சங்க்ருதி கோத்ரம், முதல் பெண் 28 வயது, உத்திராடம், பட்டதாரி, தில்லியில் பொது நிறுவனம், மாற்றல் இல்லாத வேலை; இரண்டாவது மகள் 24 வயது, பூரம் தில்லி பாங்கில் பணி. தமிழ் நாட்டிலிருந்தோ தில்லியிலிருந்தோ தகுந்த வரன்களிடமிருந்து ஜாதகம் விவரங்களுடன்வரவேற்கப்படுகிறது பெட்டி எண் 631.

பிராமண அய்யர் பெண். வயது 33. பட்டதாரி. ஸ்ரீவத்ஸ கோத்ரம். மத்திய அரசாங்க பள்ளி டீச்சர். சம்பளம் ரூ. 1250 divorcee. குழந்தை இல்லை. தகுந்த பிராமண வரன் (அய்யர்தான் என்பது அவசியமில்லை) தேவை. பெட்டி எண் 632.

காச்யப கோத்ரம், வாத்யமா வயது 36. விசாகம். தமிழ்நாட்டில் சங்கீத ஆசிரியை வேலை பார்க்கும் நல்ல குடும்பத்தில் உள்ள ஐயர் பெண்ணுக்கு வேலையில் உள்ள தகுந்த ஐயர் மணமகன் தேவை. உட் பிரிவுகள் சம்மதம். ஜாதகம் குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் 633.

வயது 35. பாரத்வாஜ வடமாள் ஐயர். திருவோணம். மதுரைக்கு அருகில் உள்ள ஒரு மானேஜ்மெண்ட் பள்ளியில் ஆசிரியர். மாத வருமானம் ரூ. 650. அழகும் தெய்வ சிந்தனையும் உள்ள பெண் தேவை. வேலையில் இருந்தால் நல்லது. ஜாதகம், போட்டோ அனுப்பவும். பெட்டி எண் 634.

அரசுத் துறையில் பணி புரியும் நாயுடு வகுப்பைச் சேர்ந்த 27 வயது தமிழ்ப் பெண்ணுக்கு மணமகன் தேவை. தமிழ்—தெலுங்குப் பிரிவாக இருந்தாலும் பரவாயில்லை. பெங்களூரிலேயே அரசாங்க உத்தியோகமாக இருப்பின் நலம். விருப்பம் எளிய திருமணம். ஜாதி பொருட்டல்ல. பெட்டி எண் 635.

அகமுடையார் வகுப்பைச் சேர்ந்த 36 வயதுடைய ரூ. 700 மாத சம்பளத்தில் முதல் நிலைத் தமிழாசிரியையாகப் பணியாற்றும் பெண்ணுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த நல்ல உத்தியோகத்தில் உள்ள மணமகன் தேவை. தஞ்சை மாவட்டமாக இருப்பது உசிதம். பெட்டி எண் 636.

பாரத்வாஜ, வாத்திமாள், உத்திரட்டாதி (நாலில் செவ்வாய், 9ல் குரு) 23 வயது பி.காம். ஷார்ட் ஹேண்ட், டைப்ரைட்டிங் படித்த. அழகும் கைத்திறனும் கூடிய பூனாவில் வசிக்கும் ஐயர் பெண்ணுக்குத் தகுந்த பட்டதாரி/ இன்ஜினியர் மணமகன் தேவை. உட்பிரிவு எதுவும் சம்மதமே. பெட்டி எண் 637

சடமர்ஷண கோத்ரம், பூராடம், 3ம் பாதம், வடகலை அய்யங்கார், 32 வயது, பி.எஸ்.ஸி. குடும்பப் பாங்கான மாநிறமுள்ள அழகான, வேலையில்லாத பெண்ணுக்கு வடகலை அல்லது தென் கலை அய்யங்கார் வகுப்பைச் சேர்ந்த 36-37 வயது, நல்ல வேலையில் இருக்கும் மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் 638.

காச்யப கோத்ரம், விசாக நட்சத்திரம், பிரகசரணம் — வயது 22. சென்னை டெலிபோன் இலாகாவில் பணிபுரியும் பெண்ணுக்கு சென்னையிலும், அதன் சுற்றுப்புறத்திலும் உத்தியோகத்தில் உள்ள மணமகன் தேவை. ஸ்மார்த்த உட்பிரிவுகள் பாதகமில்லை பெட்டி எண் 639.

தெலுங்கு மூலக நாடு ஐயர் வகுப்பினை சார்ந்த கன்னியமான 27 வயது ரூ. 1500 சம்பளம் வாங்கும் எம். ஏ. பட்டதாரி பையனுக்கு, படித்த, பண்புள்ள நல்ல வேலையில் இருக்கும், எந்த உட்பிரிவினையும் சார்ந்த பெண் தேவை. பெண் மாற்றத் தக்க வேலையில் இருந்தால் நல்லது. பெட்டி எண் 640.

22 வயது. சைவ வேளாளர் பிள்ளை வகுப்பைச் சேர்ந்த எஸ்.எஸ்.எல்.சி.வரை படித்த தாய் தந்தை இல்லாத குடும்பப் பாங்கான பெண்ணுக்கு சைவப் பிள்ளை-முதலியார் - செட்டியார் வகுப்பிலிருந்து நிரந்தரமான வருமானம் உள்ள மணமகன் தேவை. சுமாரான முறையில் திருமணம் செய்து தரப்படும் ஜாதகம் இல்லை. பெட்டி எண் 641.

தெலகாண்யம், தெலுங்கு பிராமணர், கௌதம கோத்ரம், 35 வயது, செகண்டரி கிரேட் ஆசிரியை ரூ. 700 சம்பளம் உள்ள பெண்ணுக்கு உத்தியோகம் செய்யும் தக்க மணமகன் தேவை. தெலுங்கு பிராமணரில் மாற்றுப்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் 642

பெங்களூரில் பொதுத் துறை நிறுவனத்தில் ரூ. 1500 வருமானத்தில் உள்ள 37 வயது உடைய முதலியார் வரனுக்கு வேலையில் உள்ள அல்லது வசதிஉள்ள நல்ல குணமுள்ள பெண் தேவை. இளம் விதவை, சிறு ஊனம் உள்ளவர்களும் எழுதலாம். ஜாதி, மொழி, மதம் பாகுபாடு கிடையாது. பெட்டி எண் 643.

ஹரித கோத்ரம் (வாத்யமன்) வயது 30 பரணி நட்சத்திரம் உயரம் 6 அடி. பாங்கில் ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கும் நல்ல அழகான பையனுக்கு நல்ல வேலையில் உள்ள பெண் தேவை. உட் பிரிவுகள் பரவாயில்லை. பெட்டி எண் 644.

மங்கையர் மலர்

பிப்ரவரி-83

ஆண்டு மலராக மலருகிறது!

ஒவ்வொரு இல்லத்தரசியும் ஆவலுடன் எதிர்பார்க்கும் 'போனஸ்' புத்தகம்!
(இலவச இணைப்பு)

வழக்கமான பகுதிகளுடன்

பல புதிய பகுதிகள்!

வெள்ளிப் பாத்திரங்களைப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்!
கட்டுரைப் போட்டி முடிவுகள்

வேதா

போட்டி... போட்டி... போட்டி... போட்டி...

பேணி வளர்த்தேன்!

கட்டுரைப் போட்டி

ஒரு குழந்தையை வளர்ப்பதில் தாயின் பங்கு மிகப்பெரியது. ஐந்து வயதிற்குள் உங்கள் குழந்தைக்கு ஏற்பட்ட பிரச்னை, அதை நீங்கள் சமாளித்துவிதம் எப்படி? எழுதுங்கள்.

முதல் பரிசு: வெள்ளி அஷ்டலக்ஷ்மி சொம்பு
இரண்டாம் பரிசு: வெள்ளி சலங்கை பேலா
மூன்றாம் பரிசு: வெள்ளி டம்ளர்

கட்டுரை அனுப்ப கடைசி தேதி: 15·1·83

பரிசளிப்பவர்கள்:
ஜி. ஆர். தங்கமாளிகை ஜுவல்லர்ஸ்
104 உஸ்மான் ரோடு, தி. நகர்
சென்னை - 600 017.





இம்மாத இல்லத்தரசி

முதல் பரிசு :

எவர்சில்வர் கங்காளம்

கருணைக்கிழங்கு ஸ்வீட் ஸ்பாஞ்ச்

தேவையான பொருட்கள் :

கருணைக் கிழங்கு அரை கிலோ; சர்க்கரை அரை கிலோ; மைதா முக்கால் கிலோ; டால்டா 500 கிராம்; நெய் 200 கிராம்; தேங்காய் 1, முட்டை 2; சமையல் சோடா ஒரு சிட்டிகை; ரோஸ் பவுடர் கொஞ்சம்; ரோஸ் எஸன்ஸ் 7 சொட்டுக்கள்.

செய்முறை:

கருணைக் கிழங்கை அரிசி களைந்த நீரில் வேகவைக்கவும். வெந்ததும் நீரை வடித்து அதன் தோலை நீக்கவும். கருணைக் கிழங்கை நன்கு மசித்து வைத்துக் கொள்ளவும். பின் தேங்காயைத் துருவிக் கெட்டியாகப் பால் எடுக்கவும். அடுப்பில் ஒரு பாத்திரத்தில் தேங்காய்ப் பாலை ஊற்றி சர்க்கரையில் இரண்டு ஸ்பூன் நிறுத்தி மீதியைக் கொட்டி பாகு காய்ச்சவும். கம்பிப் பதம் பாகு வந்ததும் மசித்து வைத்துள்ள கருணைக் கிழங்கைக் கொட்டி கட்டி படாமல் கிளறவும். இப்போது நெய்யையும் ஊற்றிக் கிளறவும். பாத்திரத்தில் ஒட்டாமல் வரும்போது ரோஸ் எஸ்ஸன்ஸை விட்டு இறக்கி தாம்பாளத்தில் கொட்டிப் பரப்பி விடவும். பிறகு சதுரக் கட்டங்களாக வெட்டி ஆறவைக்கவும்.

ஒரு பாத்திரத்தில் மைதா, இரண்டு ஸ்பூன் சர்க்கரை, ரோஸ் பவுடர், சமையல் சோடா போட்டு முட்டையையும் அடித்துக் கலக்கவும். சிறிது நீரும் சேர்த்துக் கரைத்து (கெட்டியாக) வைத்துக் கொள்க. அடுப்பில் டால்டாவை வாணலியில் ஊற்றி காயவைக்கவும். காய்ந்ததும் வெட்டி வைத்துள்ள ஒவ்வொரு சதுரங்களாக எடுத்து கரைத்து வைத்திருக்கும் மாவில் நனைத்து டால்டாவில் போட்டு வெந்தவுடன் எடுத்துக் கொள்ளவும்.

ஆர், ராஜம்
பண்டாரவடை சேத்தூர்



இரண்டாம் பரிசு :

மில்க் ஸ்ரேபன்

கருணைக் கிழங்கு கார கேக்

தேவையான பொருட்கள் :

வேகவைத்த கருணைக் கிழங்கு 200 கிராம், வெந்த மீன் 200 கிராம், கொத்தமல்லி இலை

ஒரு தேக்கரண்டி, எலுமிச்சை ரசம் ஒரு மேசைக் கரண்டி, நெய் ஒரு தேக்கரண்டி, உலர்ந்த ரொட்டித் தூள் ஒரு கப், முட்டை ஒன்று, மைதா இரண்டு மேசைக் கரண்டி, டால்டா அல்லது எண்ணெய் 200 மில்லி, உப்பு, மிளகுப் பொடி தேவையான அளவு.

செய்முறை:

கருணைக் கிழங்கு வெந்ததும் சூட்டுடன் தோல் உரித்து ஒரு தேக்கரண்டி நெய் விட்டு மிருதுவாகப் பிசையவும். வெந்த மீனில் உள்ள முள், தோல் இவைகளை ஜாக்கிரதையாக நீக்கிவிட்டு மீனைத் தூளாக நசுக்கவும் கருணைக் கிழங்குடன் பொடியாக்கிய மீன் முக்கால் தேக்கரண்டி உப்பு, அரைத் தேக்கரண்டி மிளகுப்பொடி எலுமிச்சம் பழ ரசம் பொடியாக நறுக்கிய கொத்தமல்லி இலை இவற்றைப் போட்டு நன்றாகப் பிசையவும். தேவையானால் முட்டையின் மஞ்சள் கருவை மாத்திரம் எடுத்து அடித்துத் தேவையான அளவு கலக்கவும்.

சப்பாத்தி மணையில் மைதா மாவைத் தூவிப் பிசைந்த கருணைக் கிழங்கு கலவையை வைத்து 2 செ. மீ. கனத்திற்கு நீளமாக வெடிப்பின்றி உருட்டவும். அதைக் கத்தியால் 6 அல்லது 8 வில்லைகளாக்கவும். அதைக் கையால் சமமாகத் தட்டையாகத் தட்டவும்.

ஒரு மேஜை கரண்டி மைதாவில் 3 அல்லது 4 மேஜைக் கரண்டி தண்ணீர் விட்டு அதில் ஒரு சிட்டிகை உப்பு, மிளகுப் பொடி போட்டுக் குழம்பாகக் கரைத்துக்கொள்ளவும். தயாராக உள்ள கருணைக் கிழங்கு கேக்கை மைதாக் கரைசலில் நன்றாகத் தோய்த்து ரொட்டித் தூளில் புரட்டி அழுத்தமாக எல்லாப் பக்கமும் படிந்திருக்கும்படி செய்யவும். எல்லா எண்ணெயையும் வாணலியில் ஊற்றிப் புகை வரும் வரை காயவைத்து கேக்கை பூரி போல் வறுத்து எடுக்கலாம் அல்லது தோசைக் கல்லில் 2 மேசைக் கரண்டி எண்ணெய் விட்டு ஒவ்வொன்றாக வறுத்தெடுக்கலாம்.

எம், சீதாமோகன்
மேட்டூர்



மூன்றாம் பரிசு :

'வாழை' அருக்கு கருணைக்கிழங்கு டைமன்ஸ்

தேவையான பொருட்கள் :

கருணைக்கிழங்கு அரை கிலோ, மைதா மாவு கால் கிலோ, நெய் அல்லது டால்டா 50 கிராம், நைஸான அரிசி மாவு அரை கப்; இஞ்சி சிறு துண்டு, பூண்டு 6 பல், சோம்பு ஒரு ஸ்பூன், பட்டை, லவங்கம் ஏலக்காய் வகைக்கு 2, வெங்காயம் 1, பச்சை மிளகாய் 6 கிழங்கிற்குத் தகுந்த அளவில் உப்பு, மிளகாய்த் தூள், மஞ்சள் முதலியன; பொரித்தெடுக்க ஒ. கே. எண்ணெய் அல்லது டால்டா.

செய்முறை:

முதலில் மைதா மாவை எண்ணெய் அல்லது டால்டா கொஞ்சம் காய்ச்சி ஊற்றி உப்புப் போட்டுப் பிசைந்து வைத்துவிட வேண்டும்.

நெய் அல்லது டால்டாவை சிறு கிண்ணத்தில் போட்டு அதில் அரிசி மாவைக் கொட்டி நுரை வரும்வரை கலக்கித் தனியாக வைத்துவிடவும். கருணைக் கிழங்கை சிறு துண்டுகளாக அரிந்து, உப்பு, மஞ்சள், மிளகாய்த்தூள் போட்டு, நீர் விட்டு நன்கு வேக வைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

இஞ்சி, பூண்டு, இத்யாதிகளை எடுத்து அரைத்து விழுதாக்கிக் கொள்ள வேண்டும். வாணலியில் இரண்டு ஸ்பூன் நெய்யை விட்டு காய்ந்தவுடன் விழுதைப் போட்டு வதக்கி வேகவைத்த கருணைக் கிழங்கு நன்கு பொடித்துப் போட்டுக் கிளறிவிட்டுச் சில நிமிடங்களில் இறக்கி வைத்து ஆறவிடுங்கள்.

பின்னர் மைதா மாவை சிறு உருண்டைகளாக்கி மெல்லிய அப்பளங்களாக இட வேண்டும். ஒவ்வொன்றின் மீதும் குழைத்து வைத்திருக்கும் அரிசி மாவைப் பரவலாக தடவி இரண்டாக மடிக்க வேண்டும். அந்த அரை வட்டத்தின் பாதியில் கிழங்கு பூரணத்தைப் பரவலாக வைத்து மீண்டும் மடித்துவிட்டால் கால் வட்ட வடிவம் கிடைக்கும். அதை அப்படியே அல்லது டைமன் வடிவத்தில் கட் பண்ணி எடுத்து வைத்து நான்கு ஓரங்களையும் மேலும், கீழும் சேர்த்து லேசாக அழுத்தினால் மூடிக் கொள்ளும். இவற்றை 4, 5 ஆக ஒ.கே. எண்ணெயில் பொரித்து எடுத்து வைத்தால் கண்களுக்கும் நாவுக்கும் சுவையான டைமன் கிடைக்கும்.

எஸ். உஷாசுகுமாரன்
கடத்தூர்



ஆறுதல் பரிசு:

டிபன்பாக்ஸ்

கருணைக்கிழங்கு பூரணம்

தேவையான பொருட்கள் :

கருணைக்கிழங்கு ஒரு கிலோ, பொட்டுக் கடலை அரைக் கிலோ, தேங்காய் துருவியது ஒரு கோப்பை, சர்க்கரை அரை கிலோ, ஏலக்காய் 5, அரிசி 2 ஆழாக்கு, உளுத்தம் பருப்பு அரை ஆழாக்கு, கடலை எண்ணெய் அரை லிட்டர்.

செய்முறை:

அரிசி, உளுந்து இரண்டையும் தனித் தனியாக ஊறவைக்கவும். கருணைக் கிழங்கைத் தோல் சீவி துண்டுகளாக நறுக்கி வேக வைக்கவும். பொட்டுக் கடலையை நைஸாக அரைத்துக் கொள்ளவும். வேகவைத்த கருணைக் கிழங்கு, பொட்டுக்கடலை மாவு, தேங்காய்த் துருவல், சர்க்கரை, ஏலப் பொடி அனைத்தையும் ஒன்றாகப் பிசைந்து எலுமிச்சை அளவு உருட்டிக் கொள்ளவும். அரிசியையும் உளுந்தையும் இட்லிக்கு அரைப்பது போல் அரைத்து பஜ்ஜி மாவு பதத்தில் நன்றாகக் கரைத்துக் கொள்ளவும். அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெய் முழுவதும் ஊற்றி காய்ந்ததும் உருண்டைகளை மாவில் தோய்த்துப் போட்டு நன்றாகச் சிவந்த பிறகு எடுக்கவும்.

ஜெயந்தி

பா.நெ. பாளையம் கோபி



ஆறுதல் பரிசு:

டிபன்பாக்ஸ்

கருணைக்கிழங்கு எண்ணெய் ஊறுகாய்

தேவையான பொருட்கள் :

ஒரு கிலோ கருணைக் கிழங்கு, 200 கிராம் புளி, 200 கிராம் பூண்டு, கால் கிலோ உப்பு 150 கிராம் மிளகாய்த் தூள், ஒரு மேசைக் கரண்டி மஞ்சள் தூள், 250 கிராம் நல்லெண்ணெய், ஒரு மேசைக் கரண்டி கடுகு ஒரு மேசைக் கரண்டி வினிகர்.

செய்முறை:


சிறிது சாம்பலிட்டுக் கிழங்கை வேகவைத்துத் தோல் உரித்துப் பிசைந்து கொள்ளவும். பூண்டைத் தோல் நீக்கி அம்மியில் தட்டிக் கொள்ளவும். புளியை வெந்நீரிட்டுக் கரைத்துத் தோல் நீக்கி வைத்துக் கொள்ளவும். எண்ணெய் எல்லாவற்றையும் வாணலியில் ஊற்றிப் புகை வரும்வரையில் காய வைத்து; பாதி எண்ணெயை மீண்டும் அடுப்பில் வைத்துக் கடுகு போட்டுப் பொரிந்ததும் புளிக் கரைசலை ஊற்றவும். பின் வதக்கிய பூண்டு, மிளகாய்த் தூள், உப்பு, வெந்தயத் தூள் முதலியவற்றைச் சேர்த்துப் பொன் னிறமானவுடன் மீதியுள்ள எண்ணெயையும் வினிகரையும் சேர்த்து நன்றாகக் கலக்கி ஆறியவுடன் பாட்டிலில் சேமிக்கவும். இது சாதத்திற்கும், தோசை, சப்பாத்தி முதலானவைகளுக்குத் தொட்டுச் சாப்பிட நன்றாக இருக்கும். மூல நோய் உள்ளவர்களுக்கு நல்ல மருந்து.

ரீட்

ரத்னபுரி கோவை

பலகாரங்கள் செய்யும்போது அடுப்பு அனல் நம்மைத் தாக்கா திருக்க அடுப்பு எதிரில் ஒரு சிறிய இரும்புப் பக்கெட்டில் தண்ணீர் வைத்துக் கொண்டால் சௌகர்யமாக இருக்கும். இப்படி எவ்வளவு நேரம் வேலை செய்தாலும் அலுப்புத் தெரிவதில்லை.

—வசந்தா விஸ்வநாதன்


வாசலில் நிறைவு தரும்
வண்ணக்கோலம்
வளமான இல்லத்தில்
இன்பம் தரும் இதமான
நறுமணம்.
உங்கள் நிலயத்தில் ஒவ்வொரு அறையிலும்
நாள் முழுவதும் நறுமணம் கமழச் செய்து
இல்லத்திற்கு மேலும் பொலிவூட்டுங்கள்.
மனதிற்கு சுகமூட்டுவதுடன் புத்துணர்வு
அளிக்கும் ஊதுபத்தியினை உபயோகியுங்கள்.
சைக்கிள் மல்லிகா
ஊதுபத்திகள்
லட்சக் கணக்கான இல்லங்கள் மீண்டும்
மீண்டும் விரும்பி வாங்குவது.
ஆண்டாண்டு காலமாகத்
தரமானதொரு தயாரிப்பு.
Cycle mallika
N. RANGA RAO & SONS MYSORE
CYCLE BRAND
என். ரங்காராவ்
& சன்ஸ் மைசூர்


அமிர்தாஞ்சன் அறியும்
ஜலதோஷத் தொல்லைகளை
ஜலதோஷம் என்றாலே தாங்க முடியாத தொல்லைதான். அதைப்போக்க சுலபமான வழி, அமிர்தாஞ்சன். சிறிதளவு அமிர்தாஞ்சன் எடுத்து மூக்கிலும், தொல்லைதரும் இடங்களிலும் தேயுங்கள். ஜலதோஷத்திலிருந்து இதமான உடனடி நிவாரணம் கிடைக்கும்.
அமிர்தாஞ்சன் மற்ற மருந்துகளைப் போலல்ல. அமிர்தாஞ்சனில் உள்ள சக்திமிக்க 10 மருந்துப் பொருட்கள் உடனடியாக செயல்புரிந்து ஜலதோஷத்திலிருந்து உங்களுக்கு துரிதமாக நிவாரணம் அளிக்கின்றன. தீங்கு செய்யும் பின் விளைவுகள் எதுவுமில்லை.
85 ஆண்டுகளுக்கும் மேலாக புகழ்வாய்ந்த அமிர்தாஞ்சன் சுளுக்கு, உடல்வலி மற்றும் தலைவலி இவற்றிலிருந்தும் சிறந்த நிவாரணம் அளிக்கிறது.
எப்போதும் அமிர்தாஞ்சன் உங்கள் கைவசம் இருக்கட்டும். ஏனெனில் அது எப்போது தேவைப்படுமென்று சொல்ல முடியாது.
AMRUTANJAN
அமிர்தாஞ்சன்
துரித நிவாரணம் உறுதியுடன் அளிப்பது. தீய பின்விளைவுகள் இல்லாதது.
CBM 7654 TM

மங்கையர் மலர்

இதற்கு என்ன செய்வது?

தொகுப்பு: டி. ஆர். ரமேஷ்



அலர்ஜியால் வரும் கோளாறு!

ஜான்ஸிராணி — கோட்டூர்

எனக்கு வயது 18. ஒரு மாதம் முன்பு உடலில் பூச்சி கடி இருந்தது. இப்பொழுது இல்லை. முகத்தில் இடது பக்கக் கன்னத்திலும் வலது பக்கத் தாடைப் பகுதியிலும் பெரிதாக வீங்கி இப்பொழுது சின்னதாக இருக்கிறது. இதற்கு என்ன செய்வது?

டாக்டரின் பதில்:

பூச்சிகடியின் காரணமாக இது இருக்காது. அலர்ஜியே காரணமாக இருக்கலாம். உங்கள் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாத உணவோ, சோப்போ, பவுடரோ எது என்று கண்டு பிடிக்கவும். அதை நீக்கிவிட்டால் படிப்படியாகக் குணமேற்படும். அலர்ஜியே இது போன்ற பெரும்பாலான நோய்களுக்குக் காரணமாகிறது.

குட்டையாக இருக்கிறேன்!

எஸ். பானுமதி — திருவில்லிபுத்தூர்

எனக்கு வயது 25. நான் இன்னும் குட்டையாகவே இருக்கிறேன். என்னை எல்லோரும் குட்டை என்று கூறிக் கேலி செய்கிறார்கள். நான் வளருவதற்கு ஏதேனும் வழி கூறவும்.

பதில்:

இருபது வயதுக்குப் பின் வளருவது என்பது முடியாது. குட்டையாக இருப்பதற்குப் பரம்பரை, சத்துணவின்மை எனப் பல காரணங்கள் இருக்கலாம். யோகாசனம் ஓரளவு கைகொடுக்கலாம். தகுந்தவர்களை அணுகவும். குட்டையாக இருந்து புகழ் பெற்றவர்கள் எத்தனை பேர் இல்லை?

தூக்கமாக வருகிறது!

லலிதா — சென்னை-1

எனக்கு வயது 30. புத்தகத்தைப் படிக்க எடுத்தாலே தூக்கம் வருகிறது. இரவு 12 மணிவரை அல்லது காலை மூன்று மணியிலிருந்து எழுந்து படிக்கவே முடியவில்லை. பகலிலும் அடிக்கடி தூக்கம் வருகிறது. இதற்கு என்ன செய்வது?

பதில்:

மனிதனுக்கு ஒரு நாளைக்கு ஆறு மணி நேரத் தூக்கம் அவசியம். தூங்க வேண்டிய நேரத்தில் தூங்காததாலேயே மற்ற நேரங்களில் தூக்கம் வருகிறது. மனதை நிம்மதியாக வைத்துக் கொண்டு இரவு தூங்கவும். தானாகவே பகலில் படிப்பும், ஞாபக சக்தியும் ஏற்படும்.

தலை முழுவதும் பொடுகு.

எஸ். ரத்னு — சென்னை-61

என்னுடைய தலை முழுவதும் வெள்ளை நிறமாக தலை முடியின் அடிப்பாகம் முழுவதும் பரவியுள்ளது. அது தலை முடி வாரும்போது உமித் தவிடு போன்று கொட்டுகிறது. அந்த இடம் தலையிலிருந்து பெயரும்போது இரத்தமும் தண்ணீரும் வருகிறது. இது நாளுக்கு நாள் அதிகமாகிறது. குறையவில்லை. தயவு செய்து இதைப் போக்கி தலைமுடி வளரவும் தலை தூய்மையாகவும் ஒரு வழி கூறவும்.

பதில்:

வெள்ளை வால் மிளகைப் பாலில் ஊற வைத்து வெண்ணெயாக அரைத்து தலை முழுவதும் பூசிக்கொண்டு ஊறவும். பிறகு கண்ணில் படாமல் தலைக்குத் தேய்த்துக் குளிக்கவும். விரைவில் பொடுகு அகன்று விடும்.

அதிகமாகப் பெருத்து...

வீரு — மதுரை

நான் குடும்பக்கட்டுப்பாடு செய்துகொண்டு 12 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் மாதா மாதம் ஒழுங்காகமாதவிடாய் போவதுஇல்லை ஆறு மாதத்துக்கு ஒரு முறை. அதுவும் ஒழுங்காகப் போவது இல்லை. அதிகமாகப் பெருத்து வேலைகூடச் செய்ய முடியாத நிலையில் இருக்கிறேன். தயவு செய்து எனக்கு ஒழுங்காக மென்சஸ் போவதற்கும், மெலிவதற்கும் வழி கூறவும்.

பதில்:

இது ஹார்மோன் கோளாறால் ஏற்படுவது

மாதவிலக்கு ஏற்பட்டு 22, 23நாட்களிலிருந்து சாப்பிடும் மாத்திரைகளைச் சாப்பிடவும். இருபத்தியொரு மாத்திரைகள் கொண்ட பாக்கெட் இது. தொடர்ந்து ஆறு மாதங்கள் சாப்பிட்டு வந்தால் சரியாகிவிடும். மற்ற கோளாறுகளும் நிவர்த்தியாகும்.

முதல் பிள்ளையின் கேஸ்!

கே. பி. சிவசங்கரன்பிள்ளை சேலம்-7

எங்கள் குடும்பத்தின் பூர்வீகச் சொத்துக்கள் யாவும் 1945ல் விற்கப்பட்டு எனது பங்குத் தொகையாக ரூ. 1500 பெற்றுக் கொண்டேன். பின்னர் 1947ல் எனது பெயரில் சுத்த கிரயமாக ஒரு நிலம் வாங்கினேன். எனக்கு முதல் மனைவி மூலம் ஒரு மகனும் அவள் நோய்வாய்ப்பட்டு இறந்ததால் இரண்டாவது திருமணத்தின்போது ஒரு மகனும் ஒரு மகளும் உண்டு. இப்போது முதல் மனைவியின் மகன் நான் வாங்கிய நிலத்தைப் பூர்வீக சொத்தின் தொடர்ச்சி என்று வழக்குப் போட்டிருக்கிறான். நான் உண்மையாக எப்படி நிரூபிப்பது?

வழக்கறிஞர் பதில்:

பூர்வீக சொத்தை விற்றுக் கிடைத்த பணத்தை எப்படிச் செலவழித்தீர்கள் என்று நீங்கள் நிரூபிப்பது முக்கியம். பணம் கிடைத்த இரண்டு மூன்று மாதங்களுக்குள் செலவழித்ததற்கான ரசீது வைத்திருந்தால் நிரூபிக்கலாம். அதே போல் நீங்கள் வாங்கிய நிலத்திற்கு எங்கிருந்து பணம் கொடுத்தீர்கள் என்பதையும் நிரூபிக்க வேண்டும். பணத்தை ஆபீசில் வாங்கியது என்பது போல காரணங்களைக் காட்டி ஆதாரத்துடன் நிரூபித்தால் நீங்கள் ஜெயிக்கலாம்.

விரல்கள் துண்டிக்கப்பட்டன!

கே. பாலசுப்ரமணியம் திருவண்ணாமலை

நான் ஆறு வருடங்களுக்கு முன் பஞ்சு ஆலை ஒன்றில் தினக் கூலியாகச் சேர்ந்தேன். ஒரு வாரத்தில் எனது பணியில் கவனக் குறைவால் ஏற்பட்ட விபத்தில் வலது கையின் நான்கு விரல்கள் துண்டிக்கப்பட்டு விட்டன. நான் நிரந்தர வேலையாள் இல்லைதான். என்றாலும் என் வாழ்வுப் பிரச்னை என்பதால் (அரசாங்க பஞ்சு ஆலை) ஏதேனும் நஷ்ட ஈடு பெற முடியுமா?

பதில்:

நிரந்தர வேலையாளாக இல்லை என்பதால் நஷ்ட ஈடு எதுவும் சட்டப்படி கோர முடியாது. அவர்களாகக் கருணை கொண்டு மனிதாபிமானத்தின் அடிப்படையில் தந்தால்தான் உண்டு. அதுவும் இப்போது ஆறு வருடங்கள் ஆன பிறகு என்ன செய்வது?

அப்பா உயிலை மாற்றுவதா?

ஜே. லலிதா வேலூர்

நான் என் அப்பாவுக்கு ஒரே மகள். எனக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளார்கள். என் தந்தையின் பெயரில் அவரே சம்பாதித்த இரண்டு வீடுகள் சென்னையில் வில்லிவாக்கத்தில் உள்ளன. என் அம்மாவின் தொந்தரவால் அந்தவீடுகளை அவர் சாகும் வரை அவருக்கும் அதன்பின்னால் எனக்கும் என் பின்னால் என் குழந்தைகளுக்கும் சொத்துச் சேருவதாக உயில் எழுதிவிட்டார். ஆனால் இப்போது என் தந்தையின் தங்கை வீட்டிலேயே உள்ளார். 2 வருடமாக கடிதப் போக்கு வரத்து எதுவும் கிடையாது. அவர் அந்த வீட்டைத் தன் தங்கைக்கு மாற்றி எழுத முடியுமா?

பதில்:

அவர் சுயமாகச் சம்பாதித்த சொத்து என்பதால் இறப்பதற்கு முன் வரை சுய நினைவுடன் எத்தனை தடவை வேண்டுமானாலும் உயிலை மாற்றலாம். நீங்கள் செய்வதற்கு ஒன்றும் இல்லை. இதற்காக நடவடிக்கை ஒன்றும் எடுக்காமல் இருந்தால் நல்லது. அந்த உயிலை மாற்றாமல் விட்டாலும் விடக் கூடும்.

குழந்தைகளின் இனிஷியல்.


கே. ராணி திருநெல்வேலி


எனக்கு மணமாகி சில வருடங்கள் கழிந்த பின் 2 குழந்தைகளும் பிறந்த பின் எங்கள் வாழ்வில் விவாகரத்து ஏற்பட்டு விட்டது. 2 குழந்தைகளும் என்னுடன்தான் இருப்பதாக முடிவானது. நான் ஜீவனாம்சம் கேட்கவில்லை. நான் மீண்டும் மறு மணம் செய்து கொண்டேன். ஆனால் இவருக்கு ஏற்கனவே மணமாகி மனைவியும் 3குழந்தைகளும் உள்ளனர். என் குழந்தைகளின் இனிஷியல் ஸ்கூலில் பழைய கணவரின் பெயரில் உள்ளது. இதை மாற்ற விரும்புகிறோம். சட்டப்படி இதற்கு என்ன செய்ய வேண்டும்? மேலும் என் குழந்தைகளை (ஒரு பெண் ஒரு ஆண்) இவர் சட்டப்படி தன் குழந்தைகளாக ஏற்று கொள்ள ஏதும் வழி உண்டா?

பதில்:


குழந்தைகள் உங்களிடமே இருக்க வேண்டும் என்று விவாகரத்தின்போது தீர்ப்பு இருப்பதால் அவைகள் உங்களுக்குச் சொந்தம். எனவே உங்களுடைய தற்போதைய கணவருக்கு நீங்கள் குழந்தைகளைத் தத்து கொடுத்தால் சட்டப்படி அவருக்குச் சொந்தமாகி விடும். மாவட்டப் பதிவாளர் முன்பு Adoption deed பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்ய வேண்டும். இதன் அடிப்படையில் நீங்கள் இனிஷியலை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மார்கழி & தை மாதக் கோலங்கள்!






—செல்வி யோகஜா



எஸ். கமலி, 17 புள்ளி, 2வகை.

ஸ்வீட் செய்யும்போது சிலருக்கு பாகு முறுகிவிடும். கவலையே வேண்டாம். ஒரு டம்ளர் பாலை விட்டு அல்லது தேவையான பாலில் ஊறும் அளவுக்கு ஊற வைத்து மறுபடி கிளறவும். இப்போது சரியான பதம் பார்த்துக் கொட்டலாம்.

அடாடா பதம் முன்னாடியே கொட்டி மொழு மொழு என்றாகி விட்டதே என்று யோசிக்காதீர்கள். சர்க்கரையைக் கொஞ்சம் முறுகல் பாகாக வைத்து விஞனை மொழு மொழு கேக்கைப் போட்டுக் கிளறுங்கள். பதம் பதமாக வரும். —ரோஜி



'ஸ்ரீ அரி' கோலம்



அப்புக் குட்டி

ஆர். மீனு

16 புள்ளி 4 வரிசை; பின் இரு பக்கமும் ஒன்று, ஒன்றாகக் குறைத்து 4ல் நிறுத்த வேண்டும்.



செல்வி விஜயலட்சுமி
15 புள்ளி 8 வரை

தமிழக முதல்வரின் சத்துணவுத் திட்டத்துக்கான நன்கொடைகள்
(21-11-82 முதல் 20-11-82 முடிய வரவு)

மார்ஷல் சீசர் (கல்கி சந்தாதாரர்) செயிண்ட் பெர்ரி	ரூ.	300
ராகம் & கம்பெனி, சென்னை-61	ரூ.	51
தாரக்நாத், ஜாம்ஷெட்பூர்-11	ரூ.	50
டி. ரமணி, ஈரோடு-9	ரூ.	25
கே.வி. பழனியப்பன், மூலனூர்	ரூ.	23
என். ரவி, தஞ்சாவூர்-9	ரூ.	15
எம். வி. ஷியாமளா, ஹைதராபாத்	ரூ.	11
வி. சரோஜினி, சென்னை-14	ரூ.	10
ஆர். துளசி நாராயணன், ஜபல்பூர்	ரூ.	10
ஆண்டாள் பிரியதர்சினி, சென்னை-600105	ரூ.	5
ஆர். ஸ்ரீநிவாசன், மதுரை-18	ரூ.	3
எஸ். ஸ்ரீராம், மதுரை-18	ரூ.	2
மொத்தம்	ரூ.	505
முன் வரவு (டிஸம்பர் மாத ம. மலரில் பிரசுரித்தபடி)	ரூ.	20,470–50
	ரூ.	20,975–50

வாசல்படி ஏறும்போதே தலை சுற்றியது ராம சர்மாவுக்கு. சட்டென்று நிலையைப் பிடித்துக் கொண்டார். இதை மருமகள் வனஜா பார்த்து விட்டாள். சுரீரென்று வார்த்தைகள் வீச்சுக்களாய்ச் சுழன்றன.

"இப்ப வாக்கிங் போகாட்டா என்ன? ரிடையர் ஆனா பேசாம வீட்டிலே இருக்கணும். சும்மா இருக்கிறதில்லே. மலைச் சுத்தறது- அப்புறமா தலையைச் சுத்தறது... வயத்தைப் பிரட்டறதுன்னு சொல்றது. டாக்டர் கிட்டப் போறதுக்குக் கொட்டியா கெடக்கு?"

பதில் பேசாமல் வராந்தா ஈஸிச் சேரில் சாய்ந்து கொண்டார். 'சீ... என்ன வாழ்க்கைடா.' வனஜா உள்ளே போய் என்ன சொன்னாளோ என்னமோ பிள்ளை ஸ்ரீதர் வந்து தன் பங்கிற்குச் சொல்லிவிட்டுப் போனான். இந்தக் களேபரத்தில் குழந்தைகள் இரண்டு போய் 'டாட்டா' காட்டாமல் கான்வென்டிற்கு நகர்ந்ததுகள்.

"எல்லாம் டைனிங் டேபிளில் எடுத்து வச்சிருக்கேன். போட்டுக் கொண்டு சாப்பிடுங்க. வெளியே போக வேண்டாம். எங்கேயாவது விழுந்து கிடந்தா எங்க் மண்டை உருளும்" என்று கூறிய வனஜா அலுவலகத்திற்குக் கிளம்பினாள்.

நீ கொடுத்த பொம்மை கணக்காக ஸ்கூட்டர் சாவியைச் சுழற்றியபடி ஸ்ரீதர் அவள்

அக்கரைப்பச்சை



லட்சுமி ராஜரத்னம்

பின்னால் போனான். சீ... இவனெல்லாம் பிள்ளைகள்?

''அப்பா, டேபிள்லே டிபன் வச்சிருக்கேன். பிளாஸ்கிலே காப்பி இருக்கு. பச்சை தண்ணீரைக் குடிக்காதீங்கோ. ஆறின வெந்நீர் இருக்கு...ம்.... மாத்திரைகளும் வச்சிருக்கேன். சாப்பிட்டானதும் மறக்காம போட்டுக்கோங்கோ'' என்று பின்கட்டிலிருந்து வந்த குரலைக் கேட்டுத் தன்னையறியாமல் ஜன்னல் வழியே பார்த்தார்.

பின் பக்கத்துப் போர்ஷன் மாலதிதான் மாமனாருக்கு எல்லாவற்றையும் சொல்லிக்-கொண்டிருந்தாள்.

''நீ கவலைப்படாமப் போம்மா மாலு. நான் என்ன சின்னக் குழந்தையா? நல்ல பெண்ணம்மா'' என்று சிரித்த வெங்கட்ராமன் தள்ளாடியபடி கதவருகில் வந்தார்.

''நீங்க இப்ப எதுக்கு வெளியே வரேள். பச்சைக் குழந்தைதாம்ப்பா. உள்ளே போங்கோ. மழைக் காத்து அடிக்கிறது. மார்ச் சளி கட்டிக்கும். என்னப்பா நீங்க? அப்பறம் உங்க பிள்ளைக்கு யார் பதில் சொல்றது?'' என்று கடிந்து கொண்ட மாலதி கிழவரைப் பிடித்துப் படுக்கையில் படுக்க வைக்கிறாள்.

''முரளி இன்னிக்கு வந்துடுவான் இல்லே மாலு?''

''வந்துடுவார். நான் வரட்டுமா?''

புடவை மடிப்பு கால்களைத் தழுவ, மாலதி கைப் பையுடன் நடக்கிறாள். அவள் கணவன் முரளிக்கு டூர் போகும் உத்தியோகம். கல்யாணமாகிப் பத்து ஆண்டுகள் ஆகியும் குழந்தை பாக்கியம் இன்னும் இல்லை. இந்தப் போர்ஷனுக்குக் குடி வந்து இரண்டு வாரங்கள்தான் ஆகின்றன.

தன் மருமகள் வனஜாவையும், மாலதியையும் எடை போட்டுப் பார்த்த ராமசர்மாவுக்கு சாப்பாடு இறங்கவில்லை. அவருக்குப் பிடிக்காத குழம்பு வேறு. இப்படி மருமகள் கிட்ட அல்லாடக் கூடாது. பின் போர்ஷன் கிழவரைக் கண்டு பொறாமையாக இருந்தது. நாலு பிள்ளைகள் இருந்தும் கிழவர் மாலதியிடம் இருக்கிறார். இதை வெங்கட்ராமனிடம் பேசியதில் தெரிந்து கொண்டார்.



''எனக்கு ஒன்னுன்னு முரளிக்குத் தாங்காது. மாலதி ரொம்ப நல்ல பொண்ணு. கொஞ்ச நாளாப் பாருங்கோ உடம்பு படுத்தறது. அதுவோ ஆபீஸ் போற பெண்'' என்றார் வெங்கட்ராமன்.

''நீங்க ஏன் மத்த பிள்ளைகள் கிட்டப் போய் இருக்கக் கூடாது?'' என்று யதார்த்தமாய் ராம சர்மா கேட்பார்.

வெங்கட்ராமன் சிரிப்பாரே தவிர பேச மாட்டார். இரவு பூராவும் வாய் ஓயாத இருமல் ராம சர்மாவுக்கு. மகன், மருமகள் தூக்கம் கெடக் கூடாது என்று எண்ணினாலும் முடியவில்லை.

''ஸ்பிரிட்ஜ் வாட்டாரக் குடிக்காதீங்கன்னு கேட்கிறதில்லே. குழந்தைகள் கூடச் சொன்னாக் கேட்கிறதுகள். உங்கப்பா இருக்காரே....'' என்று பொரிந்தாள் வனஜா.

''ஏம்பா இப்படி? நாங்க ஆபீஸ் போறதா வேண்டாமா? நீங்க படுத்துண்டா லீவு கூடப் போட முடியாது'' என்று ஸ்ரீதர் முனகினான்.

அடை இன்ற தாகம் நீர ஸ்பிரிட்ஜ் வாட்டரைக் குடித்து விட்டார். அது தன் வேலையைக் காட்டுகிறது. இறந்துபோன தன் மனைவியை நினைத்துக் கண்ணீர் முட்டுகிறது.

> குழந்தைகளின் பூட்ஸ்களின் ஓரங்களில் தேய்ந்து வெண்மையாக இருக்கும். அந்த இடங்களில் எவ்வளவுதான் பாலிஷ் போட்டாலும் ஏறாது. முட்டையின் வெள்ளைக் கருவைச் சிறிது எடுத்து அந்த இடங்களில் தேய்த்து உலர்ந்த பின் பாலிஷ் செய்யவும். பூட்ஸ்கள் புதியன போன்று மின்னும்.
>
> —தோபஞ்சு

''இந்தாங்க பிளாஸ்கிலே வெந்நீர் இருக்கு குடியுங்க'' என்று வைத்து விட்டுப் போனாள் வனஜா.

ஒரு வாரம் ஓடியது. மருமகளின் வாய்க்குப் பயந்து கொண்டு ராம் சர்மா வெளியே போகவில்லை. நடுப் பகல் டிபனை முடித்துக் கொண்டு ஈஸிச் சேரில் புத்தகம் ஒன்றுடன் சாய்ந்தபொழுது பின் பக்கம் பலப் பல குரல்கள் ஒலித்தன.

''ஒரு மணி நேரமா மூச்சு விட முடியல்லே. நல்ல காலம் பக்கத்து வீட்டுப் பையனை அனுப்பி என்னைக் கூப்பிட்டு விட்டார்.'' என்று மாலதி கூறிக் கொண்டிருந்தாள்.

முரளி ஸ்கூட்டரில் வர டாக்டர் காரில் வந்து விட்டார் பின்னாலேயே. இதை எல்லாம் பார்த்த ராம சர்மா வெங்கடராமனுக்கு ஏதோ என்று ஓடினார். வெங்கட்ராமன் உயரமாக அடுக்கிய தலையணைகள் மீது முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு திணறிக் கொண்டிருந்தார்.

''முரளி, முரளி, என் பக்கத்திலேயே இருப்பா. என்னவோ பண்றதே. அம்மா, பரதேவதை என்னைக் கஷ்டப்படுத்தாம எடுத்துக்கோம்மா. நான் வரத் தயார் ஆகிட்டேன்.'' என்ற புலம்பல் சுற்றி நின்றவர்களின் கண்களில் நீரை வரவழைத்தன.

இப்படி முரளியும், மாலதியும் கிழவருக்குப் பண்ணுகிறார்களே. தான் படுத்தால் வனஜாவும் ஸ்ரீதரும் இப்படிப் பண்ணுவார்களா என்று எண்ணித் தனக்குள் கலங்கினார் ராம் சர்மா.

''வயது ஆகிவிட்டது. எந்த நேரமும் எதுவும் ஆகலாம். யாருக்காவது தந்தி கொடுக்கலாம் என்றால் கொடுத்துவிடலாம்'' என்று டாக்டர் கூறிவிட்டார்.

முரளி பறந்தடித்துக் கொண்டு தந்தி அலுவலகத்துக்கு ஓடினான். மாலதி கண்ணீர் விட்டுக் கொண்டு கிழவரின் அருகில் உட்கார்ந்திருந்தாள். தந்தியைக் கண்டு மகள்களும், மகன்களும் பறந்து வந்தனர். அப்பா, அப்பா என்ற கூப்பாடு வீட்டை நிறைத்தன.

''முரளி, அப்பாவுக்கு அல்வா பிடிக்கும். வாங்கிக் கொடுத்தியோ?'' என்று பெரியண்ணா நாராயணன் கேட்டான்.

''அவியல்னு அப்பாவுக்கு உயிராச்சே. மாலதி நீ பண்ணிப் போடுவியோ?'' என்று பெரிய பெண் விமலா கேட்டாள்.

''நீ நல்ல டாக்டர் கிட்டக் காட்டியிருக்கலாம் முரளி. இப்ப எல்லாம் தாண்டியாச்சு. எனக்கு ஒரு கால் போட்டிருக்கக் கூடாதோ?'' என்று கேட்டான் சின்னண்ணா ரமணி.

இதையெல்லாம் வெங்கட்ராமன் காதுகளில் போட்டுக் கொள்ளாமல் போய்ச் சேர்ந்து விட்டார். வீடு அமர்க்களப்பட்டது. கல்யாணச் சாவு. தலைக்குத் தலைபேசிவிட்டு அமர்க்களமான சமையலும், சாப்பாடும், பேச்சுமாக....

''மாலதி, குழந்தைகள் ராத்திரி பால் குடிக்கும். ரெண்டு லிட்டர் பசும் பால் கூட வாங்கு'' இரண்டாவது நாத்தி மீனு உத்தரவிட்டாள்.

''முரளி, பசுமாடு தானம் பண்ணணும். நல்ல மாடா வாங்கு. விலையைப் பத்திக் கவலைப்படாதே.''

பெரியவரின் காரியங்கள் ஜாம் ஜாம் என்று நடந்தேறியது. அப்பாடா! இத்தனை பிள்ளைகள் பெண்கள் ... வெங்கட்ராமன் கொடுத்து வைத்தவர். பத்துக்கும் இரேக்கியத்துக்கும் சாப்பாடுன்னு சாப்பாடா அது! கல்யாணத்தில் கூட இப்படிப் போட மாட்டார்கள்.

ராம சர்மா பின் பக்க அறையில் அமர்ந்து ஜன்னல் வழியே முரளியின் குடும்பத்

தையே கவனித்துக் கொண்டு ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தார். அன்று அனைவரும் கிளம்பப் போகிறார்கள். ஒரே பேச்சும் சப்தமுமாக வீடே அமர்க்களப்பட்டது. இந்தக் கூட்டம் நகர்ந்து விட்டால் வீடு வெறிச்சிட்டுப் போய்விடும். பாவம், முரளியும் மாலதியும்... வெங்கட்ராமன் கொடுத்து வைத்தவர். தன்னைப் போல் ஒரு பிள்ளையைப் பெற்று அவர்களிடம் இப்படிப் பிடுங்கல் பட்டுக் கொண்டு...

''எல்லாவற்றையும் இங்கேயே பிரித்துக் கொண்டு விடலாம்'' என்றபெரியண்ணாவின் குரல் ராம சர்மாவை நிமிர வைத்தது.

முரளிக்கு அதிகப் பங்கு இருக்கும் அல்லவா? பெரியவரை முகம் சுளிக்காமல் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக்-கொண்டு வந்தவனாச்சே!

''அம்மா நகைகளை லாக்கரிலிருந்து எடுத்துண்டு வந்தியேண்ணா, அதையும் பிரிச்சுடு. என் பெண் கல்யாணத்துக்கு வசதியாயிருக்கும். இத்தனை நாள்தான் கிழம் பூதம் காக்கற மாதிரி காத்தது'' என்றாள் விமலா.

''சரியா இருக்கா இல்லே முரளி கிட்ட தூக்கிக் கொடுத்துடுதோ!'' என்று எரிச்சல் பட்டான் ரமணி.

''எனக்கு ஒரு பைசா கூட வாண்டாம். பைசாவுக்காக நான் அப்பாவுக்குச் செய்யலே. நீங்க கொடுத்தாக் கூட எனக்கு வேண்டாம்.'' என்ற முரளியின் குரல், இவனல்லவா பிள்ளை! வெங்கட்ராமன், நீங்கள் ரொம்பக் கொடுத்து வைத்தவர். — தசரதனுக்கு ஸ்ரீராமன் கிடைத்தது போல! என்று ராம சர்மாவைப் பாராட்ட வைத்தது.

அவர்களுக்குள் பங்கு வைத்துக்கொண்டிருக்க வேண்டும். கசமுசவென்று பேச்சு வார்த்தைகள் ராம சர்மாவின் காதுகள் வரை எட்டவில்லை. அவர்கள் கட்டாயப்படுத்தி முரளியைப் பெற்றுக் கொள்ளச் செய்திருப்பார்கள் என்று நம்பினார்.

அனைவரும் கிளம்பிப்போய்விட்டார்கள். ஞாயிற்றுக் கிழமை என்பதால் வனஜாவும் ஸ்ரீதரும் குழந்தைகளுடன் சினிமாவுக்குப் போய்விட்டார்கள். முரளியுடன் பேசும் ஆவல் ஏற்பட்டது ராம சர்மாவுக்கு. கதவைச் சாத்திக் கொண்டு பின்பக்க வீட்டுக்கு நடந்தார்.

''மாலு, அப்பா ஹார்ட் அட்டாக்கில் படுத்த அன்றிலிருந்து கணக்கு எழுதிட்டேன். ஒரு பைசா விடலே. கிட்டத்தட்ட பதினைந்தாயிரம். மாடே இரண்டாயிரத்து ஐந்நூறு. பெரியண்ணா கடைக்குப் போய் வர எல்லாம் காருக்கு என் கணக்கில் பெட்ரோல் போட்டது அது ஒரு ஐந்நூறு...''

ராம சர்மாவால் பேசாமல் இருக்க முடியவில்லை. ''உன் பங்கிற்கு வந்தது எவ்வளவு முரளி?''

முரளி திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

''வாங்க ஸார், வாங்க!''

''அப்பா காரியத்தை ஜம்முன்னு நடத்திட்டே. நீ ஒருத்தனாவா செலவழிச்சே? அண்ணாக்கள் பங்கு போட்டுக்கல்லே? உன் பங்குப் பணம், நகை எல்லாம் எவ்வளவு வந்தது?''

ஆவலை அடக்க மாட்டாமல் கேட்டார் ராம சர்மா. முரளியின் பார்வை பெரியவர் படுத்துக் கிடந்த கட்டிலின் அடியில் சென்றது. கிழவர் உபயோகித்த செருப்பு.

''பரதனுக்கு ராம பாதுகை போல எனக்கு இதுதான் அப்பா விட்ட சொத்து.''

''என்ன அநியாயம்? நீ ஏன் சும்மாவிட்டே நீயும் உன் அப்பா வயிற்றில் பிறந்த பிள்ளை தானே?'' என்று சீறினார் ராம சர்மா.

''இல்லே சார். நான் வளர்ப்புப் பிள்ளை தான். பெற்ற பிள்ளைகள் அவரை பாரம்னு நினைச்சு ஒதுக்கினார்கள். என்னை ரெண்டு வயசிலிருந்து எடுத்து வளர்த்தார். அந்த நன்றியைத் தெரிவிச்சுக்க இதை விட வேற வழி எனக்குத் தெரியல்லே. இன்னும் கொஞ்ச நாள் அவர் இருந்திருக்கலாம். அவரைக் கேட்காம நான் ஒண்ணும் பண்ணினதில்லே'' என்ற முரளி சிறு குழந்தையாக மாறி அழுதான்.

> அரைக் கீரை சமைத்த பிறகு மிஞ்சும் தண்டுகளை இடித்துச் சாறு பிழியவும். ஒரு டம்ளர் சாற்றுக்குஅரை டம்ளர் தேங்காய் எண்ணெய், தூய பசும்பால் கால் டம்ளருடன் நிழல்போல் அடுப்பு எரியவிட்டுக் காய்ச்சவும். வண்டல் அடியில் தங்கி கரும் பச்சையாகத் தைலம் கிடைக்கும். தலைமயிருக்கு இது நல்லது. —ரோஜி

தான் வளர்த்ததற்குப் பலன் இவன் தன்னை வைத்துப் போஷிக்கட்டும் என்றுதான் வெங்கட்ராமன் தன் அந்திமச் செலவுக்காக கூட ஒன்றும் தராமல் இறந்து போனாரா? ராம சர்மாவால் பேச முடியவில்லை.

''ஏண்டா ஸ்ரீதரா இவ்வளவு நாழி?'' என்ற அவரது குரலைக் கேட்க விடாமல் வனஜா அதட்டிக் கொண்டே வந்தாள்.

''நாங்க என்ன சின்னக் குழந்தைகளா வாசல்லே பனியிலே எதுக்காக வந்து நிக்கிறீங்க? உங்களுக்குச் சொன்னாலே புரியாது அப்பா. நாலு பேர் எங்களை என்ன சொல்லுவாங்க?உங்கப்பா குழந்தைகளைவிட மோசம்'' என்று வனஜா கத்தியபோது—

வெங்கட்ராமனின் மகன்களை விட அவர் மகன் மேலானவன். அன்பைக் கொடுத்து, கண்டிப்பைப் பெறும் அவரல்லவா அதிர்ஷ்டசாலி! ராம சர்மாவுக்குப் பெருத்த நிம்மதி ஏற்பட்டது முதன் முதலாக.

சொல்ல விரும்புகிறோம்

● கண்டாமணியின் ஓங்கார ஒலியைப் போல தி. ஜானகிராமனின் இலக்கியப் பணியும் மிக மிகச் சிறப்பானது என்பதற்காகத் தான் இக்கதையை வெளியிட்டு அவருக்கு அஞ்சலி செலுத்தி விட்டீர்களோ?
வடலூர் வெ. லட்சுமிநாராயணன்

● இம்மாத மலரில் மூன்று சிறுகதைகளும் முக்கனிகளாகச் சுவைத்தன. ஏராளமான துணுக்குகளும், சமையல் பகுதியும், டாக்டர் கா.மகேஸ்வரன் அவர்களின் கட்டுரையும்... வந்தது சிறப்பு மலரோ என எண்ணச் செய்தது என்னை. பாராட்டுக்கள்.
நங்கவரம் எம். சாந்தி

● 'எப்போதும் பெண்' தொடர்கதையில் ஒரு பெண்ணுக்கு 'அடாலஸண்ட்' பீரியடில் ஏற்படும் மாற்றங்களை அழகாகச் சொல்லியிருக்கிறார் சுஜாதா.
சென்னை-45 கே. எஸ். கணபதி

● ஆதர்ஷ வித்யாலயா மாணவிகளின் கண்ணகி நாடகம் ஏ ஒன்.எழு படங்களிலேயே எங்கள் கண் முன் சிலப்பதிகாரத்தைக் கொண்டு வந்து நிறுத்திய புகைப்படக்காரருக்கும் நன்றி.
வேலூர் (சேலம்) லட்சுமி செங்குட்டுவன்

● இம்மாத இதழில் ''சேய் நலம்'' பற்றி மிகச் சிறப்பாக விளக்கியுள்ளீர்கள். நாங்களும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கிறோம்.
சென்னை-600102 எஸ். வனஜா

● டிசம்பர் மங்கையர் மலரில் வெளிவந்துள்ள 'இவரைச் சந்தியுங்கள்' கட்டுரை மிகவும் உபயோகமுள்ளது. அருமையாகப் பெண்கள் போற்றக்கூடிய பொன்மொழிகளாக அமைந்துள்ளன.
திருச்சி-14 எஸ். மஞ்சுளா

● கேட்டரிங் டெக்னலஜி கல்லூரி மாணவிகள் சுதா சுவாமிநாதன், ஜ்யோதி தவே இருவரும்(அட்டையில்)என்ன படிக்கிறார்கள் என்பதனையும் வெளியிட்டிருந்தால் புதுமைப் பகுதியை இன்னும் 'சப்'புக்கொட்டிச் சுவைத்திருப்போம்.
வியாசர் காலனி திருமதி நாராயணராவ்

● ''இம்மை மாறி மறுமையாயினும்'' படித்தவுடன் என் கண்ணிலிருந்து என்னையுமறியாமல் இரண்டு சொட்டுக் கண்ணீர் வந்தது. கல் ஆயினும் கணவன், புல் ஆயினும் புருஷன் என்ற நீதிக்கேற்ப வாழும் பல லட்சோப லட்சக் கணக்கான பெண்கள் இந்தப் பாரத தேசத்திலே அதுவும்—திருமதி சுசீலா கூறியபடி — தமிழ் நாட்டிலே உண்மையை வெளிப்படையாக ஒத்துக்கிற தைரியம் இல்லாம... கல்யாணமான எத்தனையோ தம்பதிகள் உள்ளக் குமுறலுக்கு உள்ளுக்குள் எரிமலையாய் கனிந்து கொண்டிருக்கும் புகைச்சலுக்கு ஒரு வடிகாலாய் எழுதியிருக்கும் முறையைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.
கல்கத்தா-26 ஆராவமுதன்

● மழலை மலரில் வெளியான ''புத்திசாலிப் பேரன்'' கடைசிப் பாராவைப் படிக்கிறவரை அது கனவென்றே நினைக்க முடியவில்லை. நாமே மெரினா பீச்சில் அமர்வது போலவும் நம்மைச் சுற்றி இரு கழுகுக் கண்கள் வட்டமிடுவது போலவும் ஒரு பிரமையை உண்டாக்குகிறது. என் குழந்தைகள் மூவரும், மழலைப் பருவத்தைத் தாண்டி பால்யத்தின் படிக்கட்டில் நின்றபோதும்கூட இக்கதையை வெகுவாக ரசித்துப் பாராட்டினர்.
நாகர்கோவில் —எஸ். ஞானம்பாள்



யோகாசனம்

யோகாலயா சுப்ரமணியம்

ஹலாசனம்: ஹலா என்றால் கலப்பை. உழவர்களின் கையில் உள்ள கலப்பையைப் போன்ற அமைப்பைப் பெறுவதினால் இவ்வாசனத்துக்கு இப்பெயர்.

(சென்ற இதழில் படம்)

செய்முறை: முதலில் மூச்சை உள் இழுத்துக்கொண்டு பாத உத்தான ஆசனம் செய்ய வேண்டும். பின்பு மூச்சுக் காற்றை வெளியே செலுத்திவிட்டுவயிற்றைஉள்ளிழுத்துக்கொண்டு இரண்டு கால்களையும் மடக்காமல், தலையை நோக்கி எடுத்துச் செல்ல வேண்டும். இவ்வாறு செல்லும் பொழுது இடுப்புப் பகுதியும் முதுகுப் பகுதியும் தரையிலிருந்து தூக்கப்பட வேண்டும். அப்பொழுது கைகளைத் தரையில் நன்றாகப் பதிய வைத்துக் கொண்டு கால்களைத் தரைக்கு எடுத்துச் செல்லவேண்டும். இரண்டு கால்களும் தரையில் பட்ட பிறகு வயிற்றை உள்ளிழுத்துச் சாதாரணமாக சுவாசிக்கவும். அந்நிலையில் இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் இருந்த பிறகு மீண்டும் காற்றை உள்ளிழுத்துக் கொண்டு பாத உத்தான ஆசனத்துக்கு வரவும். பின்பு காற்றை வெளியில் விட்டுக் கொண்டு சம நிலைக்கு வரவும். ஹலா ஆசனத்தைச் செய்யும்பொழுது முதுகிலோ கழுத்திலோ வலி ஏற்படலாம். அப்படிப்பட்டவர்கள் சர்வாங்காசனத்திற்கு சென்ற பிறகு மெள்ள ஒரு காலை மட்டும் காற்றை வெளியே விட்டுக் கொண்டுதலையை நோக்கித் தரைக்குக் கொண்டு வரவும். மீண்டும் காற்றை உள்ளுக்கிழுத்துக் கொண்டு காலை மேலே தூக்கி பின்பு இப்பயிற்சியை அடுத்த காலிலும் செய்த பிறகு சர்வாங்காசனத்துக்கு வரவும். பிறகு மெள்ளஹலாசனத்துக்கு வந்தால் இவ்வாசனம் சுலபமாக வரும். காலையில் செய்ய இவ்வாசனம் கடினமாக இருந்தால் மாலையில் பயிற்சிக்கலாம்.


பலன்: ஹலா ஆசனமும் சர்வ அங்க ஆசனத்தைப்போல நல்ல பலன் கொடுக்கும். முதலில் இவ்வாசனம் முதுகு வலியைக் கொடுத்தாலும் பிற்காலத்தில் வரக்கூடிய முதுகு வலியைத் தவிர்க்கும். கை கால்கள் மரத்துப்போவதும் தவிர்க்கப்படும். வயிற்று வலியை அகற்றும். இவ்வாசனத்தைச் சென்ற இதழில் கூறிய பச்சி மோத்தான ஆசனத்துக்குப் பிறகு செய்தால்நல்ல பலன் உண்டு.


சவாசனம் (படம் 1): 'சவம்' என்றால் பிணம் என்று பொருள். இந்நிலையில் ஒரு மாணவி உடலில் எந்த வித அசைவுமின்றி ஒரு பிணத்தைப் போல் இருப்பதனால் இவ்வாசனத்துக்கு இப்பெயர்.

செய்முறை: முதலில் முதுகு நன்றாகத் தரையில் படுமாறு படுக்கவும். முகம் வானத்தை நோக்கியும், முதுகெலும்பு நேராகவும் இருக்க வேண்டும். கால்களை அகற்றி வைக்கவும். பின்பு உள்ளங்கைகள் மேல் நோக்கி வானத்தைப் பார்க்க, விரல்கள் லேசாக மடக்கப்பட்டிருக்க வேண்டும். பிறகு கண்களை மெல்ல மூடிக் கொண்டு மனத்தை சுவாசத்தின் மீது செலுத்தவும். பிறகு கீழே கூறியபடி மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு செய்யவும். (படம் 1)

முதலில் உங்கள் மனத்தைப் பாதங்களுக்கு எடுத்துச் செல்லவும். பிறகு உங்கள் பாதங்களை மென்மையாக (Relax) ஆக்கும்படி மனத்துக்குக் கட்டளையிடுங்கள். பின்பு மெள்ள உங்கள் கால்கள், கால்முட்டிகள், தொடைகள் ஆகியவற்றையும் அவ்வாறேசெய்யவும். பிறகு உங்கள் மனத்தை வயிற்றுக்கு எடுத்துச் செல்லவும். பின்பு

சவாசனம்





2 புஜங்காசனம்

வயிற்றைப் பிசைவது போல மனதுக்குக் கட்டளையிடுங்கள். பின்பு மெள்ள உங்கள் மனத்தை நுரையீரலுக்கு எடுத்துச் செல்லுங்கள். இப்பொழுது மூச்சை நன்றாக உள்ளிழுத்து மெதுவாக வெளியே விடவும். அப்படி மூச்சை வெளியே விடும்போது உங்கள் உடம்பில் உள்ள வலி, கவலைகள், உங்கள் மனத்தைப் பாதிக்கும் விஷயங்கள் ஆகியவை வெளியேறுவதாக எண்ணிக் கொள்ளுங்கள்

மீண்டும் மூச்சை உள்ளிழுக்கும்போது களைப்பு நீங்கிப் புத்துணர்ச்சி பெறுவதாக எண்ணிக்கொள்ளுங்கள். பிறகு உங்கள் மனத்தை உங்கள் தோள்பட்டைக்கு எடுத்துச் சென்று அதையும் ரிலாக்ஸ் செய்யவும். பிறகு உங்கள் கைகள், உள்ளங்கைகள், விரல்கள் ஆகியவற்றையும் ரிலாக்ஸ் செய்யவும். இப்பொழுது உங்கள் கவலைகள், டென்ஷன் போன்றவை உங்கள் உடம்பிலிருந்து விரல்கள் வழியாக வெளியேறுவதாக எண்ணி கொள்ளுங்கள். மேலும் அவை நீங்கிய பிறகு உங்கள் உடம்பிற்கு புது சக்தியும், புத்துணர்ச்சியும் பெறுவதாக எண்ணிக் கொள்ளுங்கள்.

பிறகு மெள்ள உங்கள் மனத்தை முதுகெலும்பின் கீழ்ப் பகுதிக்கு எடுத்துச் செல்லுங்கள். மெதுவாக உங்கள் மனத்தை முதுகெலும்பு முழுவதையும் ரிலாக்ஸ் செய்யுமாறு கட்டளையிடவும். பின்பு உங்கள் மனதைப் புருவங்களுக்கு நடுவே கொண்டு வாருங்கள்.


இந்நிலையில் சிறிது நேரம் படுத்துவிட்டு உங்களது இடப்பக்கமாக மெதுவாக உருண்டு எழுந்து தியானத்தில் அமரவும். சிறிது நேரம் கழித்து மெல்ல உங்கள் கண்களைத் திறந்து சம நிலைக்கு வரவும்.

பலன்கள்: சர்வாசனம் உங்கள் உடம்பில் உள்ள வலி, சோர்வு, டென்ஷன் ஆகியவற்றை நீக்க உதவும். பல மணி நேர தூக்கம் சாதிக்க முடியாததைச் சவாசனம் சில நிமிஷங்களிலேயே சாதிக்கும். பரீட்சைக்காக இரவு பகலென்று கண் விழித்துப் படிப்பவர்கள் இவ்வாசனத்தைச் செய்தால் சோர்வடையாமல் இருக்கலாம். மேலும் இரத்தக் கொதிப்பு உள்ளவர்கள் இவ்வாசனத்தைச் செய்தால் நல்ல பலன் பெறலாம்.

இனி மூல வியாதி, வயிற்றுப் பருமன் போன்றவற்றை நீக்கும் சில ஆசனங்களை நாம் பார்ப்போம். இவ்வாசனங்கள் மார்பகங்களை அழகாகவும் சீராகவும் ஆக்க உதவும். முதுகில் அடிக்கடி வலி வரும் பெண்களுக்கு இவ்வாசனம் நல்ல பலனைத் தரும்.

புஜங்காசனம் (படம் 2): 'புஜங்கம்' என்றால் சர்ப்பம் என்று பொருள். இந்நிலையில் படமெடுத்து ஆடும் ஒரு நாகத்தைப் போல ஒருத்தி காட்சி யளிப்பதால் இவ்வாசனத்திற்கு இப்பெயர்.

செய்முறை: முதலில் தரையில் குப்புறப் படுக்கவும். இந்நிலையில் முகத்தைத் தரையில் வைத்து கால் கட்டை விரல்களையும் முட்டிகளையும் சேர்த்து வைக்கவும். பின்பு கைகளை மடக்கி இரண்டு உள்ளங் கைகளையும் இடுப்புப் பகுதிக்குப் பக்க வாட்டில் பதிய வைக்கவும். இந்நிலையில் உங்கள் கையின் முட்டிகள் விண்ணை நோக்கி இருக்க வேண்டும். பின்பு உங்கள் உள்ளங்கைகளை தரையில் நன்றாக அழுத்தி, காற்றை உள்ளிழுத்தவாறு அதன் கருதிக்கு ஏற்ப தலையைத் தூக்கவும். பின்பு மீண்டும் காற்றை உள்ளிழுத்துக் கொண்டு தோள்களை பின்னே தள்ளி உடலை மார்பகங்கள் வரையில் தூக்கவும். பிறகு மேலும் காற்றை உட்கொண்டு உடலைத் தொப்புள் வரை தூக்கவும். இவ்வாறு தூக்கும்பொழுது முதுகை நன்றாக வளைக்கவும். இந்நிலைக்கு உங்கள் கைகள் உடம்பை ஒட்டியும், தோள்கள் பின் தள்ளியும் இருக்க வேண்டும். சக்கார




ஊர்துவ முகசவாசனம்

வீராங்கனைகள் இவ்வாசனத்தைச் செய்தால் நல்ல வேகத்துடன் ஓடலாம். ஏனெனில் இவ்வாசனம் நம் கால்களை வலிமையாக்க உதவும். இவ்வாசனம் கால் மணிக்கட்டு களிலும், குதிகால்களிலும் தோன்றும் வலி களை நீக்கிக் காலுக்கு ஓர் அழகிய வடி வமைப்பையும் கொடுக்கும். தோள்களில் தோன்றும் arthritis ஐக் குணப்படுத்தும். வயிற்றிலுள்ள தசைகளையும் இடுப்புத் தசை களையும் வலுப்படுத்தும். சிரசாஸனம் செய்ய முடியாதவர்கள் இவ்வாசனத்தைச் செய்து ஓரளவுக்குப் பலன் பெறலாம். இரத்தக் கொதிப்பு உள்ளவர்களும் இவ்வாசனத்தைச் செய்து பலன் பெறலாம். ஏனெனில் இவ்வாசனத்தைச் செய்யும்போது மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டம் அதிகரிக்கப்படு கிறது. இது மூளைக்குப் புத்துணர்ச்சியைக் கொடுத்து மனத்தில் உள்ள களைப்பைப் போக்கும்.

சலபாசனம் (படம் 5): 'சலபா' என்றால் வெட்டுக்கிளி. இவ்வாசனம் பார்ப்பதற்கு வெட்டுக்கிளியைப் போன்ற ஓர் அமைப்பை பெறுவதினால் இவ்வாசனத்திற்கு இப்பெயர்

செய்முறை: தரையில் குப்புறப் படுத்துக் கொண்டு கைகளை உடலுக்குப் பக்கவாட்டில் நேராக வைக்கவும். உள்ளங்கை வானத்தை நோக்கி இருக்க வேண்டும். பின்பு இரண்டு

அட்ஹ முக்க சவனாசனம்



ணத்தைக் கொண்டும் இரண்டு கால்களும் பிரியக் கூடாது. (படம் 2)

இந்நிலையில் இருபது விநாடிகள் இருந்த பிறகு மெள்ளக் காற்றை வெளியே விட்டுக் கொண்டு சம நிலைக்கு வரவும். இவ்வாறு இந்த ஆசனத்தை இரண்டு மூன்று தடவை செய்த பிறகு சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொள்ளவும்.

பலன்கள்: இவ்வாசனம் அடிபட்ட முதுகெலும்பைக் குணப்படுத்தும். Displacement of spinal disc ஆல் அவதிப்படுபவர்கள் இவ்வாசனத்தைச் செய்தால், Spinal disc ஆனது ஒழுங்காக அமையும். மேலும் இவ்வாசனத்தைச் செய்தால் மார்பகங்கள் அழகாக ஆகும்.

'ஊர்த்துவ முக சவாசனம் (படம் 3:)

'ஊர்துவ முகா' என்றால் மேல் நோக்கி பார்க்கும் முகம் என்று பொருள். 'சவுனு' என்றால் நாய் என்று பொருள். இந்நிலையில் ஒரு மாணவி வானத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டு உடலை மட்டும் நாயைப் போல இருப்பதால் இவ்வாசனத்திற்கு இப்பெயர்.

செய்முறை: முதலில் குப்புறப் படுத்துக் கொண்டு முகத்தைத் தரையில் நன்றாகப் பதிய வைக்கவும். பின்பு கால் விரல்களை வெளி நோக்கி நீட்டிய பின் புஜங்காசனத்திற்குச் செல்லவும். (படம் 2) புஜங்காசனத்திற்குச் சென்ற பிறகு முதுகை நன்றாக வளைத்து அதை சமனம் இடுப்புப் பகுதியையும் கால் முட்டிகளையும் தரையிலிருந்து தூக்கவும். (படம் 3) இந்நிலையில் அரை நிமிடம் முதல் ஒரு நிமிடம் வரை இருந்து விட்டு காற்றை வெளியே விட்டுக் கொண்டு சம நிலைக்கு வரவும்.

பலன்கள்: இவ்வாசனத்தை முதுகு வலி யாதவர்கள் செய்தால் நல்ல பலனுண்டு.

இவ்வாசனம் முதுகெலும்பில் உள்ள பல வியாதிகளைக் குணப்படுத்தும். மேலும் முதுகு வலியை அகற்றும். இவ்வாசனம் இடுப்புப் பகுதிக்கு இரத்த ஓட்டத்தை அதிகரித்து அப்பகுதியை ஆரோக்கியமாகவும் வலுவுள்ளதாகவும் ஆக்கும்.


அட்ஹ முக்க சவாசனம் (படம் 4): 'அட்ஹ முக்கா' என்றால் கீழ் நோக்கிப் பார்த்தல் என்று பொருள். இந்நிலையில் ஒரு மாணவி கீழ் நோக்கிப் பார்த்துக் கொண்டு உடலை நீட்டும் நாயைப் போல் காட்சியளிப்பதினால் இவ்வாசனத்துக்கு இப் பெயர்.


செய்முறை: முதலில் குப்புறப் படுத்துக் கொண்டு கால்களை நீட்டி நேராக வைக்கவும். பின்பு உள்ளங்கைகளை நெஞ்சுக்கு அருகில் நன்றாகப் பதிய வைக்கவும். அந்நிலையில் விரல்கள் நேராகத் தலையை நோக்கி நீட்டப் பட்டிருக்க வேண்டும். பிறகு காற்றை வெளியே விட்டுக் கொண்டு உடலைத் தரையிலிருந்து தூக்கவும். இரண்டு கைகளையும் நேராக்கித் தலையைக் கால்களை நோக்கி எடுத்துச் செல்லவும். இந்நிலையில் முதுகை நன்றாக நேராக்கி கால் முட்டிகளை மடக்காமல் பாதங்களைத் தரையில் நன்றாக அழுத்தவும். பிறகு வயிற்றுப் பகுதியை நன்றாக உள்ளிழுத்துக் கொண்டு தலையை தரையை நோக்கி எடுத்துச் செல்லவும். (படம் 4)

இந்நிலையில் சமமாகச் சுவாசித்தபடி ஒரு நிமிடம் இருக்கவும். பின்பு காற்றை வெளியே விட்டுக் கொண்டு தலையை மேலே தூக்கி உடலை முன் நோக்கித் தள்ளிச் சம நிலைக்கு வரவும்.

பலன்கள்: கடினமான வேலைகள் செய்து சோர்ந்துபோன ஒரு மாணவி இவ்வாசனத்தைச் செய்தால் களைப்பு நீங்கிப் புத்துணர்ச்சி பெறலாம். ஓட்டப் பந்தய

சவபாசனம்





● தனுராசனம்

கைகளையும் உடலுக்கு அடியில் எடுத்துச் செல்லவும். பிறகு மெள்ளக் காற்றை உள்ளே இழுத்துக் கொண்டு மூச்சைப் பிடித்த படியே இரண்டு கால்களையும் தரையிலிருந்து ஒரே சமயத்தில் முடிந்த வரையில் மேலே தூக்கவும். அப்படிக் கால்களைத் தூக்கும் பொழுது உங்கள் தோள்களும் தலையும் தரையில் பதிந்தபடியே இருக்க வேண்டும் (படம் 5) சம நிலையில் சுவாசித்தபடியே இவ்வாசன நிலையில் எவ்வளவு நேரம் இருக்க முடியுமோ அவ்வளவு நேரம் இருந்துவிட்டு மெள்ளக் காற்றை வெளியே விட்டுக் கொண்டு அதன் சுருதிக்கு ஏற்ப கால்களையும் மெள்ள சம நிலைக்குக் கொண்டு வரவும்.

பலன்கள்: இவ்வாசனம் ஜீரண சக்தியை அதிகரித்து வாய்வுத் தொல்லைகளை அகற்றும். மூலவியாதி, மலச் சிக்கல் போன்ற வியாதிகள் உள்ளவர்கள் இவ்வாசனத்தைச் செய்து நல்ல பலன் பெற முடியும். இவ்வாசனம் முதுகு வலிகளையும் அகற்றும்.

தனுராசனம் (படம் 6): 'தனுர்' என்றால் வில் என்று பொருள். இவ்வாசனம் ஒரு வில்லைப் போன்ற அமைப்பைப் பெறுவதினால் இவ்வாசனத்திற்கு இப்பெயர்.

செய்முறை: முதலில் தரையில் குப்புறப் படுத்துக் கொண்டு கால்களை ஒரு அடி முதல் இரண்டு அடிகள் வரை அகற்றி வைக்கவும். கைகள் உடம்புக்குப் பக்கவாட்டில் இருக்க வேண்டும். பிறகு காற்றை மெள்ள வெளியே விட்டுக் கொண்டு இரண்டு கால்களையும்மடக் கவும். பின்பு உங்கள் கையை நீட்டி கணுக் காலைப் பிடிக்கவும். இந்நிலையில் சமமாக சுவாசிக்கவும். பிறகு காற்றை வெளியே விட்டுக் கொண்டு கால்களையும், உடலையும் தரையிலிருந்து ஒரே சமயத்தில் மெதுவாக தூக்கவும். இந்நிலையில் வயிற்றுப் பகுதி மட்டும்தான் தரையில் பதிந்திருக்கவேண்டும். பிறகு தலையை முடிந்தவரையில் பின் நோக்கித் தள்ளி இந்நிலையிலேயே இருபது விநாடிகள் முதல் ஒரு நிமிடம் வரையில் இருங்கள். (படம் 6) பிறகு மெள்ளக் காற்றை வெளியே விட்டுக் கொண்டு கால்களையும் உடலையும் தரைக்குக் கொண்டு வந்து மீண்டும் சம நிலைக்கு வரவும்.

பலன்கள்: இவ்வாசனத்தைச் செய்வதன் மூலம் நம் முதுகெலும்பு நன்றாக வளைக்கப்படுவதனால் நம் முதுகெலும்பு வளைந்து கொடுக்கக் கூடிய தன்மையைப் பெறுகிறது. இவ்வாசனம் தொப்பையைக் குறைத்து வயிற்றுப் பகுதிக்கு நல்ல வலுவைக் கொடுக்கும். Slipped disc-ால் அவ திப்படுபவர்கள் இவ்வாசனத்தைச் செய்தால் குணம் பெறலாம்.

படங்கள்: பி. ஈ. ரமணன்

படங்களில்: பத்மா, ரம்பா





இவரைச் சந்தியுங்கள்

மஞ்சுளா ரமேஷ்

கோலம்!

புள்ளி புள்ளியாக வைத்து, இழை இழையாக இழைத்து, பெரிய பெரிய கோலங்களைப் போட்டு... ஓரத்தில் செம்மண்ணையும் இட்டால்... அந்த அழகை நாளெல்லாம் பார்த்துக்கொண்டு இருக்கலாம். பண்டிகை நாளானால் மனசே அழகு மயமாகி விடுகிறதே!

ஆனால் அதன் பின்னணியில்....

''கோலமாவ்... கோலமாவ்.....!''

வெயிலோ, மழையோ பாராமல், பஞ்சடைந்த கண்களும், மேலெல்லாம் கோலமாவின் துகள்களும், அழுக்கடைந்த உடையுமாக.... நாம் அழகூட்ட, இவர்கள் அழகிழக்கும் இந்தக் கோலமாவுக்காரிகள்...

இவர்களின் துயரக் கதைகள்! இந்தப் பவுனம்மாவின் கதை ஒன்று போதும்! ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கையுமே ஒரு சரித்திரம்தான். ஒவ்வொரு மங்கையுமே காவியத் தலைவிதான். அவர்களிலே இந்த ஏழ்மை நாயகியும் ஒருத்தி!

''காஞ்சிபுரத்துக்கு அந்தாண்டை நாட்டுபுறத்துல இருந்தோம். ரொம்ப ஏழ்மை. அப்பா ஆடு மாடெல்லாம் மேய்ச்சிக்கிட்டு கிடந்தாரு. ஒரே கஷ்டம். அது தாங்காம கிறிஸ்துவக் கோயில்ல எங்களைச் சேர்த்துட்டாரு அப்பாரு. அங்கதான் பவுனம்மாங்கறத மாத்தி ரோஸ் மேரின்னு வச்சிட்டாங்க. நாலு புள்ளைங்க நாங்க. அம்மா கொஞ்ச காலம் சும்மா இருந்தாங்க. அப்புறமா நா கஞ்சியோ கூழோ ஊத்தி எம்புள்ளைங்கள காப்பாத்திடறேன்னு இட்டு வந்துட்டாங்க.

''அப்புறம்தான் ஆடு மேய்க்க ஆரம்பிச்சோம். மாசம் நாலு ரூபா அஞ்சு ரூபா கொடுப்பாங்க. ஆடு குட்டிங்க போட்டுச்சுன்னு ஒரு குட்டி குடுப்பாங்க. கொஞ்ச கொஞ்ச நாளைக்கிச் சோறு தண்ணி இல்லாம இருந்தோம். ரெண்டு நாளைக்கு ஒரு தபா கால் வயித்துக் கஞ்சி கிடைக்கும். அந்தக் குடிச்சிக்கிட்டுக் கிடந்தோம்.

''அப்பத்தான் பட்டணத்திலேருந்து எங்க சித்தப்பா வந்தாரு. இங்க ஏன் இப்படிக் கஷ்டப்பட்டறீங்க? பட்டணத்துக்கு வந்தா கட்டிட வேலை செஞ்சாவது பொழச்சுக்கலாம்னாரு. அம்மாவுக்கும் அது சரியாப் பட்டுச்சு......''

இந்த வறுமையினூடேதான் இவர்கள் வீட்டில் சிறு சந்தோஷமும், குடிசையினூடே நுழையும் ஒளிக்கீற்றாய் நுழைந்ததாம் அதுதான் அக்காவின் கல்யாணம். கைவசம் இருந்த ஆடுகளுள் பாதியை விற்று பெரிய பெண்ணுக்குக் கல்யாணம் செய்திருக்கிறார் பவுனம்மாவின் அம்மா. பக்கத்தில் கோவிலூரில் மாப்பிள்ளை. எத்தனை சந்தோஷம் அந்த எளிய உள்ளங்களில். அதற்கு மகுடம் வைத்தாற் போல பெண் 'முழுகாமல்' இருக்கிறாள் என்று தெரியும்போது ஒரே கொண்டாட்டம்தான். ஆனால் இந்தச் சந்தோஷத்தின் தலையில் பெரிய இடிதான் விழுந்தது.

ஆமாம், தாயும் அப்போது 'முழுகாமல்' இருந்து விட்டாள். கூனிக் குறுகிப் போய் விட்டது தாயின் மனம். இரண்டாம் பேருக்குத் தெரியாமல் கலைத்துவிட அது என்ன நாகரிகம் மிகுந்த நகரமா? உள்ளுக்குள்ளேயே மறுகிப் போனாள் அந்தத் தாய். மாப்பிள்ளைக்கு அந்தச் செய்தி தெரிந்து கடிதமும் எழுதிவிட்டாராம், 'எனக்கு மாமியாரைப் பார்க்கவே வெட்கமாக இருக்கிறது' என்று. அந்த நிகழ்ச்சியைச் சொல்லும் போதே பவுனம்மாளின் கண்கள் கண்ணீரில் நீராடுகிறது.

''அந்தத் தாயோட மனசுல என்னென்ன இருந்துச்சோ தெரியலம்மா. அந்தக் கடிதாசியை வெச்சிக்கிட்டு அப்படியே ஒக்காந்திருப்பாங்க. கண்லேந்து தண்ணி தண்ணியா ஊத்தும். ஏம்மா அழுவுறேன்னு கேப்பேன். எனக்கும் சின்ன வயது. புரியல. அம்மா என்னையும் கட்டிக்கிட்டு அழுவாங்களே தவுர என்னன்னு சொல்ல மாட்டாங்க.

''ஆச்சு. அக்காளும் புள்ள பெத்தாங்க, அம்மாவுக்கும் ஒரு பொண்ணு பொறந்திச்சு. அப்புறமாத்தான் நாங்க பட்டணத்துக்கு வந்து கோட்டூர்ல குடிசை போட்டோம். கட்டட வேலைக்குப் போக ஒடம்புல தெம்பில்ல. அப்பா செருப்பு தைக்கற வேலைக்குப் போனாரு. நானு கோல மாவு விக்க ஆரம்பிச்சேன்....''

''ஏன் கோல மாவு விக்க ஆரம்பிச்சே... இந்த வேலையை ஏன் தேர்ந்தெடுத்தே?''

''ஆங்... அதைச் சொல்ல மறந்துட்டனா? நாட்டுப்புறத்திலேயே கொஞ்ச நாளைக்குக் கோலமாவு வித்தேன். ஆட்ட மேச்சு கட்டுப்படியாவல. பன மரத்துப் பூவ தொரட்டு போட்டு எடுத்துக்கிட்டு வருவோம். கண்ணாம்பு பூமியில ஒரு ஆள் ஆழத்துக்கு மண்ணை வெட்டி உள்ளார இந்தப் பனம் பூவப் போட்டுக் கலந்து வேக வைப்போம்.

''சாயங்காலம் வேக வைக்க ஆரம்பிச்சம்னா மறு நா காலையில அஞ்சு மணிக்கு கண்ணாம்புக் கல்லு கிடைக்கும். கருக்கால இதெல்லாம் அள்ளிக்கிட்டு விக்கப் போயிட்டம்னா மறுபடியும் சாயந்திரம் ஆறு மணி ஆயிடும் வர்றதுக்கு.

''பட்டணத்துக்கு வந்தப்புறம் அந்த வேல இல்லே. இங்கே மாவாவே விக்குது. அத வாங்கிட்டுப் போய் வீடு வீடா வித்தா ஒரு நாளைக்கு நாலு ரூபா கிடைக்கும். அதுதான் எங்க சம்பாத்தியம்....''

திருப்பியும் அவளைக் கதைக்குத் திருப்புகிறேன். ''ம்... அப்புறம் உன் தம்பிங்க, தங்கைங்களெல்லாம் என்ன பண்ணுறாங்க மெட்ராசுக்கு வந்தப்புறம்?''

''ஹங்... என்ன பண்ணுவாங்க... ஏதாச்சும் வேல செய்வாங்க. தங்கச்சி சின்னக் குழந்தை. அப்பா காலையில போயிடுவாரு. செருப்பு வேலைக்கு. நானும் கோல மாவு விக்கப் போயிடுவேன். வீட்ல இருக்கப்ப அம்மா என்னையே பார்த்துக்கிட்டு இருக்கும். 'வயசுப்புள்ள நீ இப்படி ஒழைக்கிறயே'ன்னு அழும். நா கொண்டு வர்ற ரெண்டு மூணு பணத்துல குடும்பமே ஓடிக்கிட்டு இருந்துச்சு.''

அந்தக் குடும்பம் கொஞ்சம் நிலைபெற ஆரம்பித்ததா? ஏதோ ஓரளவாவது நிம்மதியாக வாழ ஆரம்பித்து விட்டார்களா? விதிக்குப் பொறுக்குமா? மீண்டும் அந்தச் சின்னக் குடும்பத்தின் தலையில் இடி விழுந்தது.

''அக்கா இரும்ப முழுகாமப் போச்சு. அதென்னவோ சொல்லி வச்சா மாதிரி அம்மாவும் முழுகல. நா அப்பத்தான் வயசுக்கு வந்து நாலு மாசம் ஆயிருந்தது. அம்மா ரொம்ப மானி. அவளால தாங்க முடியலே.

பக்கத்து வூட்ல ஒரு அம்மா கிட்டக் கேட்டிருக்கு. சொல்லுனாளாம், 'நீ காளி மேலே



சத்தியம் பண்ணிக் குடு. யார் கிட்டயும் சொல்ல மாட்டேன்னு நா இத்தக் கலேச் சுடறேன்னுளாம்.

''சரின்னு அம்மா மஞ்சக் கயிறு மேலே சத்தியம் பண்ணிச்சு. நாட்டுப்புறத்துல ஆடு வித்துக் கொண்டு வந்த இருநூறு ரூபாயையும் அந்தம்மா கிட்டக் கொடுத்திட்டு அழுதிச்சாம்.

'எங் கடைசிப் பொண்ண உண்டாயிருக்கப்பவே நான் பட்ட பேச்சு வார்த்தை அவமானம் கொஞ்சமில்லடி. 'இந்த' விஷயம் மருமவனுக்குத் தெரிஞ்சா நான் தூக்கு மாட்டிக்குவேன். நீதான் இந்தத் தலேகுனிவு லேந்து என்னக் காப்பாத்தனும்....' ''

பவுனம்மா கொஞ்ச நேரம் மௌனமா இருந்தாள். அந்த மனதில் என்னென்ன எண்ணங்கள் ஓடிற்றோ? ஆணும், பெண்ணும் சேர்ந்த இந்த உலகில் பழி பாவங்களெல்லாம் ஏன் பெண்ணுக்கே வருகிறது என்று நினைத்திருப்பாளோ? ஆசைப்பட்டது இருவரின் குற்றமானாலும் அவஸ்தைப்படுவது பெண் மட்டுமா?

''மருந்து சாப்பிட்ட மறுநாளே அம்மாவுக்கு இழுக்க ஆரம்பிச்சுடுச்சு. எங்களுக்கெல்லாம் இந்த விவரமெல்லாம் தெரியாது. கிட்டக்க இருந்த ஆஸ்பத்திருக்கு போனோம். நிலேமை ரொம்ப முத்திப் போச்சு, கவுருமெண்ட் ஆஸ்பத்திரிக்கு இட்டுப் போயிருங்கன்னுங்க. வாயிலேயும் வவுத்துலயும் அடிச்சுக்கிட்டு கூட்டிக்கிட்டுப் போனோம். டாக்டருங்க பாத்துக்கிட்டு இருக்கச் சொல்லவே மூச்சு நின்னு போச்சு. வாரி மடியில போட்டுக்கிட்டு வூடு வந்து சேர்ந்தோம்.

''ஆச்சு. அம்மாவ கரேதேத்திட்டேன். இனிமே இந்த மக்களுக்கு நாமதான ஆதரவுன்னு கோல மாவு வித்துச் சோறு போட்டேன். இரண்டு தம்பிகளுக்கு கல்யாணம் பண்ணனும். தங்கச்சிய என் கொழுந்தயாவளுக்கனுமின்னு நெனேச்சேன். அம்மா போன ஏக்கத்துல அதுவும் போயிடுச்சு. தம்பிங்க எம் பேச்சக் கேக்கல. அப்பாவுக்கு கவனம் வேற மாதிரி போயிடுச்சு.

''ரவிக்க கிழிஞ்சு போச்சு வேற வேணும்னுக்கூட அடி உதைதான். இப்ப இருக்கிற வனவாசம் கணக்காத்தான் அப்பவும் இருந்தேன். கிழிஞ்ச புடவை. நல்ல சோறு கிடையாது. அம்மா செத்தப்ப வாரிப் போட வந்த தூரத்து உறவுக்கார மனுஷன் கிரிச்சுச் சிரிச்சுப் பேசினன். எனக்கும் மனசு விட்டுப் போச்சு. இங்கதான் நாம்ப வேண்டாதவளாயிட்டோம். இவனக் கட்டிக்கிட்டாலாவது சோறு, துணியாச்சும் கிடைக்கும்னு முடிவு பண்ணினேன். அப்பா சம்மதிக்கலே. ஒன் ஒறவே வேண்டாம்னு அவனோட வந்துட்டேன்.

''இப்ப மாத்தரம் என்னுச்சு? அஞ்சு பெத்தேன். இரண்டு போச்சு. மூணு பிள்ளேங்க மிச்சம். இவரு செருப்பு வேலேக்குப் போனு கிடைக்கிற காசல குடிச்சுட்டு ராத்திரியெல்லாம் சண்டை போடுவாரு. என் கைச் சாப்பாடுதான் எனக்கு.

''அறியாத பொண்ணு, பெத்தவனுக்கும் உடன் பொறந்தவங்களுக்கும் அன்னிக்கு கோல மாவுக் கூடையச் சொமந்தேன். இன்னிக்குப் பெத்ததுங்களுக்காகச் சுமக்கிறேன். காலேயில அதுங்கள வுட்டுட்டு வந்துட்டா சாயந்திரம்தான் போவேன். வெய்யல்லேயே ஒக்காந்துக்குனு அம்மா வருமான்னு மூணும் பாத்துக்கிட்டு இருக்கும்....''

''ஏன் கொழந்தைங்கள ஸ்கூல்ல சேக்கறதுதானே? இப்பல்லாம் காசு கூட கிடையாதே....'' என்று கேட்டேன்.

''எங்கம்மா அதுங்களுக்குப் படிப்பு வருது? பெரியவனேச் சேர்த்தேன். ஒஸ்கோலுக்குப் போறதே இல்லே. எம் பேர் கூட எழுத மாட்டேங்கறான்...''

> இரண்டு மூன்று தடவை மலம் போனால் பயமாகி விடுகிறதல்லவா? ஜீரகத்தைப் பொடிசெய்து ஒரு சிட்டிகை உப்புடன் இரண்டு வேளை சாப்பிடவும். போக்கு நின்றுவிடும். —ஜெயலட்சுமி

ஓ....! அந்தப் பெண்ணின் மனதில் அந்தச் சின்ன ஆசை மகத்துவமாகப் படிந்து கிடக்கிறது. தன் மகன் படித்துத் தன் பெயரை எழுத வேண்டுமாம். ஆனால் அந்தச் சின்ன ஆசைகூட அவளுக்கு நிறைவேறவில்லையே... இதுதான் வாழ்வு தரும் கொடுமையா? அம்மாவின் பக்கம்தான் சண்டை போட்டுக் கொண்டு வந்து விட்டாள். கணவனின் பக்கம் கூட யாரும் இல்லையா?

''இருக்காங்கம்மா. என்னேத் தூரத்தறதுக்கு. நா யார் கிட்டயும் போய் ஒரு வேளே கஞ்சிக்கு நிக்கறதில்லே. என் புள்ளேங்களுக்கு இவங்க சோறு போடறதில்லே. ஆனு பழியா பேசுவாங்க. நா வூட்ல இருக்கிற கொஞ்ச நேரமும் சாக்கிட்டுச் சாக்கிட்டுப் பேசுவாங்க. 'கோல மாவு விக்கப் போறேன்னு புருஷனே சம்பாதிக்கப் போறேனும்' இப்படியெல்லாம் பேசறாங்கம்மா.

''அம்மாவைப் போல மாளியாப் போயிடணும்னு ஆசையாத்தான் இருக்கு. ஆனு அப்புறமா எம் புள்ளேங்க கதி? அவங்களுக்கோசரம் இந்த வேகாத வெயில்ல சுத்திக்கிட்டு இருக்கேன்.

கைகளேத் தட்டிக் கொண்டு கிளம்பி விட்டாள் பவுனம்மா. வாழ்வின் ஒவ்வொரு அம்சமும் கைவிட்ட பிறகும், மனிதர்களெல்லாம் இவளேக் கண்ணீர்சிந்த வைத்தபோதும் இவள் இன்னும் வாழ்கிறாள்...

''கோல மாவ்.... கோல மாவ்....!''

அழகுக்கு அழகூட்ட





நம் அனைவருக்கும் கூந்தல் ஒரே சீராக அமையா விட்டாலும் பலருக்குப் பிறப்பில் ஆரோக்கியமான நல்ல கூந்தல் இருக்கிறது. ஆனால் கவனக் குறைவாலும் புறக்கணிப்பாலும் மேலும் சத்தற்ற உணவு வகைகளினாலும் கூந்தல் உதிர ஆரம்பிக்கிறது. கூந்தலுக்கு கவனமும் பராமரிப்பும் மிகவும் அத்தியாவசியமானது. ஒருவருடைய கூந்தல் மற்றவரிடமிருந்து மாறுபடுவதால் ஒவ்வொருவருக்கும் வேறு வேறு பராமரிப்பு அவசியம்.

வாரத்தில் மூன்று நாட்களாவது கூந்தலை எண்ணெய் தடவி மஸாஜ் செய்து கொள்ளவும் (படம் 1) மஸாஜ் என்றால் எண்ணெயைத் தலையில் தடவி நன்றாக வேரில் இறங்குமாறு விரலால் அழுத்தித் தேய்த்துக்கொள்ளவும். பத்து நிமிடம் மஸாஜ் செய்தால் போதுமானது. தேங்காய் எண்ணெய், ஆலிவ் நீலிப்ருங்காவி, ஆர்னிகா (ஹோமியோபதி) தைலம் முதலியவை உபயோகப்படுத்தலாம்.

தேங்காய்ப் பாலைத் தலையில் ஊறவைத்துப் பிறகு தலையை அலசுவதால் கூந்தலின் எண்ணெய்ப் பசை அதிகரிக்கிறது. கருமையாகவும் நீளமாகவும் கூந்தல் வளர்கிறது. தேங்காய்ப் பால் பராமரிப்பில் வாரம் இரண்டு முறை அலசுவதால் இரண்டு மாதத்துக்குள் கட்டாயமாகக் கூந்தல் நீளமாவதைப் பார்க்கலாம். சொர சொரப்பாகவும் உலர்ந்த கூந்தலும் உடையவர்கள் இந்தப் பராமரிப்பினால் பயன் பெறலாம்.

சாதாரணமாக ஏதாவது ஒரு எண்ணெயை பல வருடங்களாக உபயோகித்து வந்தால் அதையே உபயோகிப்பது நல்லது. அடிக்கடி ஹேர் ஆயிலை மாற்றக் கூடாது.

கூந்தலில் சேரும் பிசுக்கையும் அழுக்கையும் அகற்றுவதற்கே நாம் ஷாம்பூ உபயோகப்படுத்துகிறோம். ஷாம்பூவில் ஹேர்பல் அல்லது ஆல்மண்டு வகைகள் கூந்தலுக்குச் சிறந்தவை.

(படம் 2) முட்டையின் மஞ்சள் கருவை வாரம் ஒரு முறை உபயோகிப்பது சிறந்த பலனைத் தரும். ஷாம்பூவைப் போல இரண்டு முட்டைகளின் மஞ்சள் கருவை ஒரு கப்பில் விட்டு வெது வெதுப்பான வெந்நீரில் கலந்து கொண்டு பிறகு கூந்தலை அலச வேண்டும். முட்டையினால் கூந்தலை அலசுவதால் கூந்தலில் 'பிசுக்' கென்று சுரு சில இடங்களில் ஒட்டிக் கொண்டு இருக்கும். ஆகையால் சுத்தாமை, சீயக்காய், பூந்திக் கொட்டை ஏதாவது உபயோகித்து ஒரு முறை அலசலாம்.

தினமும் உச்சந்தலையில் ஆலிவ் அல்லது விளக்கெண்ணெய் தடவிக்கொண்டு குளிர்ந்த நீரில் குளித்தால் உஷ்ணம் குறையும். ஆலிவ் எண்ணெய் கூந்தல் உதிர்வதைத் தடுக்கிறது. முட்டையின் வெள்ளைக் கருவை கூந்தல் நுனியில் தடவிக் கொண்டு சிறிது நேரம் ஊறி, பிறகு தலை அலசுவதாலும் கூந்தல் உதிர்வதைத் தவிர்க்கலாம்.

சீயக்காய், அல்லது சீயக்காய் சோப்பை உபயோகிப்பவர்கள் பூந்திக்கொட்டையை உபயோகிக்கலாம். இரவு பூந்திக் கொட்டையை சிறிது நேரம் வெந்நீரில் கொதிக்க வைத்து விட்டுப் பிறகு காலையில் அதை உபயோகப் படுத்தினால் நுரை அதிகமாக வரும். பொடுகு இருப்பவர்களுக்கு மிகவும் ஏற்றது. எலுமிச்சைப் பழச் சாறும் கலந்து அலசலாம். பொடுகு மிகவும் அதிகமாக இருந்தால் ஸெடவ்லான் கான்ஸன்ட்ரேட் (Cetavlon concentrate) என்ற மருந்து உபயோகிக்கலாம். ஒரு டீஸ்பூன் மருந்து ஸொல்யூஷனில் இரண்டு டீஸ்பூன் தண்ணீரைக் கலந்து தலையில் ஷாம்பூவைப் போல் நுரைத்துக் கொள்ளவும். பத்து நிமிடம் ஊறிய பிறகு குளித்தால் பொடுகு உதிர்ந்து விடும். அதிகப் பொடுகு இருப்பவர்கள் ஒரு நாள் விட்டு ஒரு நாள் குளிக்கலாம். கண்களில் படாமல்

உபயோகிக்க வேண்டும். துண்டும் சீப்பும் தனியாக வைத்துக் கொள்வது அவசியம்.

பூண்டைச் சிறு சிறு துண்டங்களாக ஆக்கி இரும்புச் சட்டியில் வதக்கி அதை எண்ணெயுடன் கலந்து கூந்தலில் தடவிக் கொண்டால் நரை விழுவதைத் தவிர்க்கலாம் செம்பருத்திப் பூ, மருக்கொழுந்து, தவனம் முதலியவற்றைக் காயவைத்து எண்ணெயுடன் சேர்த்துக் கொண்டால் மணமும் புஷ்டியும் உண்டாகும். மருதாணிஅரைத்துக் காய்ச்சலாம். எண்ணெயை வேர்களில் படுமாறு அழுத்தித் தேய்க்க வேண்டும்.

கூந்தலை மிகவும் இறுக்கமாகக் கட்டக் கூடாது. இறுக்கமாகக் கட்டுவதாலும், பின்னுவதாலும் வேர்கள் பலவீனமடைகின்றன. கேரளாவிலும் பெங்காலிலும் பெண்டிர் கூந்தல் நிறைய எண்ணெய் தடவி குளிர்ந்த நீரில் தினமும் ஸ்நானம் செய்யும் பழக்கமுடையவர்கள். கூந்தலை இறுக்கக் கட்டாமல் தளர விட்டிருப்பார்கள். அவர்களுக்குக் கருகருவென்று கூந்தல் நீளமாகவும் இருப்பதைப் பார்க்கலாம். உணவில் அவர்கள் மீன் சேர்த்துக் கொள்வதால் மீன் எண்ணெயின் சத்தும் கிடைக்கிறது.

கூந்தல் வளர்வதற்குத் தேவையான ஊட்டச் சத்து, விட்டமின்கள், பழம், காய்கறி மீன், முட்டை முதலியவற்றில் கிடைக்கிறது. கால்ஷியம் விட்டமின் ப்ரோடீன் பாலில் அதிகம் இருப்பதால் தினசரி பால் உட்கொள்வது சாலச் சிறந்தது.

கூந்தலைப் பாதுகாக்க அதிகமாக வெயிலில் காய்வது, அடிக்கடி ஷாம்பூ உபயோகிப்பது சத்தில்லாத உணவை உட்கொள்வது தேவையில்லாமல் கவலைப்படுவது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.

எண்ணெய்ப் பசையுடைய கூந்தலையுடையவர்கள், நெய், எண்ணெய் பதார்த்தங்களைத் தவிர்க்க வேண்டும். அதே போல் உலர்ந்த கூந்தலை உடையவர்கள் நெய், எண்ணெய் முதலியவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

முளைக்கீரையில் விட்டமின் 'ஏ' சுண்ணாம்பு, புரதம், இரும்பு முதலிய சத்துப் பொருட்கள் இருப்பதால் வாரம் இரு முறையாவது உணவில் சேர்த்துக் கொண்டால் இளநரை ஏற்படாது.

கூந்தலை அடிக்கடி வெட்டக் கூடாது. ஆறு வயது வரை அடிக்கடி பாப் செய்யலாம். பிறகு பதினாறு வயது வரை ஆறு மாதத்திற்கு ஒரு முறை நுனி பிளவுபட்டிருந்தால் கத்தரிக்கலாம். மற்றபடி அதிகமாக வெட்டக் கூடாது.

'பேக் கோம்ப்' (back comb) செய்து கொண்டை அணிந்து கொண்டால் பொதுவாக சிக்கைப் பிரிக்கவும். ஹேர் ஸ்ப்ரே (Hair Spray) அதிகமாக உபயோகிக்கக் கூடாது. இதனால் கூந்தல் நரைத்துவிடும்.

ஒவ்வொருவரும் தனிச் சீப்பு உபயோகிப்பது மிகவும் அவசியம். சீப்பிலும் மழுங்கினதோ கூரானதோ உபயோகிக்காமல் நடுத்தரமானதையேஉபயோகப்படுத்தவேண்டும். ப்ரஷ் உபயோகித்தால் ஒரே சீராக ப்ரஷ் செய்ய வேண்டும். நல்ல நீளமாக உடையவர்கள் கூந்தலின் நடுவில் கையால் பிடித்துக் கொண்டு அடித் தலையிலிருந்து நடுவரையிலும், பிறகு நடுவிலிருந்து நுனி வரையிலும் வாரிக் கொள்ள வேண்டும். இதனால் வேர்கள் பலவீனமடையாமல் இருக்கும்.

கூந்தலில் 'டை (Dye) உபயோகிப்பவர்கள் மூலிகைகளின் சத்து சேர்ந்த ஹெர்பல் (Herbel) சாயங்களை உபயோகிப்பது நல்லது. கெமிகல் சாயங்களினால் (Chemical dye) சில நேரங்களில் அலர்ஜி உண்டாகும்.


-சரஸ்வதி சுந்தரேசன்



ராசிபலன்


ஜனவரி-83

மேஷம்



இரண்டு மூன்று மாதமாக நீங்கள் உழைத்து வருவதன் பலனை இந்த மாதம் காண்பீர்கள். முடிவும் வெற்றியும் உங்களுக்குச் சாதகமாகவே அமையும். சமீப காலமாக இருந்து வந்த மனசஞ்சலங்களும், தயக்கங்களும் நீங்கி சந்தோஷமான வருடத்தின் ஆரம்பமாக இருக்கும். நலிவுற்ற உடல் நிலையும் தேறும். குடும்பத்தில் அமைதியும் கலகலப்பும் உண்டாகும். குழந்தைகளினால் கீர்த்தி உண்டாகும்.

ரிஷபம்



நீங்கள் இட்டமிட்டபடி காரியங்கள் முடியாமல் நீடித்துக்கொண்டே இருந்தது. அரசாங்க சம்பந்தப்பட்ட வேலைகளும் முடியாமல் தாமதமாகி இருக்கலாம். இம்மாதத்தின் இரண்டாவது வாரத்தில் நிலைமையில் மாறுதல் இருக்கும். குழந்தைகளின் மூலமாக ஏற்படும் புதிய நண்பர்களினால் பல நன்மைகள் உண்டாகும். உடலின் சக்திக்கும் மேலாகக் காரியங்களைச் செய்வதால் உடல் நலம் பாதிக்கக் கூடும். எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

மிதுனம்




வழக்கு, வியாஜ்ஜியங்கள் எனத் தொல்லைகள் மிகுந்த மாதமாக இருக்கும். கோர்ட் விவகாரங்களிலும் நிலைமை பழையபடியேதான் இருக்கும். எனினும் எடுத்த காரியத்தை முடிக்க வேண்டும் என்ற உங்களுடைய தைரியமும், மனோ பலமும், தெய்வ நம்பிக்கையும் வீண்போகாது. நியாயமான உங்களுடைய கோரிக்கைகள் தப்பாமல் நிறைவேறும். பண முடை அதிகமாக இருக்காது. வரவுக்கேற்ற செலவு இருக்கும்.

கடகம்



உங்களுடைய சொந்தக் காலிலேயே நிற்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. கூட்டாளிகளுடன் சேர்ந்து செய்யும் தொழிலில் வரும் லாபத்தைவிட சுயமுயற்சியே உங்களைப் பொறுத்தவரை நல்லது. அளவுக்கு அதிகமாக ஆசைப்பட்டுப் பெரிய செலவுகளை வரவழைத்துக் கொள்வதை விட இட்டமிட்டுச் சிறிது சிறிதாக முன்னேறுவது நல்லது. குடும்பத்தாரின் அன்பும், ஒற்றுமையும் உங்கள் பக்கமே இருக்கும்.

சிம்மம்



உங்களுடைய நண்பர்களின் ஒத்துழைப்பால் நீங்கள் இட்டமிட்டபடி காரியங்கள் நிறைவேறும். வீட்டில் சுப நிகழ்ச்சி யொன்றும் நடைபெறும். மனதுக்கு அந்தரங்கமான புதிய நட்பு ஒன்று ஏற்படுவதற்கு எல்லா சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன. வெளிநாடு அல்லது வெளியூர்ப் பிரயாணங்களும் ஏற்படும். அதனால் ஏற்படும் பணச் செலவுகளுக்கு ஏற்ற வருமானம் உண்டாகும்.

கன்னி



குடும்பத்தாரிடையே நீண்ட காலமாக இருந்து வந்த நம்பிக்கையின்மையும், சச்சரவும், பகைமையும் இந்த மாதம் ஓரளவு அமைதிப்படும். இதனால் தொழிலில் அதிக அளவு கவனமும், அதனால் வருமானமும் உண்டாகும். பொழுது போக்கு அம்சங்களும் கைகூடும். குழந்தைகளினால் சந்


தோஷம் உண்டாகும். புதிய நண்பர்களின் எதிர்காலத் திட்டங்களை வகுத்துக் கொள்ள ஏற்ற மாதமிது. பண வரவும் சகஜமாக இருக்கும்.

துலாம்



நீங்கள் நீண்ட காலமாக எதிர்பார்த்து வந்த செய்தி யொன்று இம் மாதம் கிடைக்கும். அலுவலகத்தில் பதவி உயர்வும், உயர் அதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். வியாபார சம்பந்தமாக வெளியூர்ப் பிரயாணங்களும் உண்டாகலாம். விருந்தினர்களின் வரவும் அதனால் இல்லத்தில் மகிழ்ச்சியும் இருக்கும். அன்பான கணவரின் ஆதரவோடு பல செயல்களை நீங்கள் சாதிக்கப்போகும் மாதமிது.

விருச்சிகம்




இம்மாதத்தின் இறுதியில் புதிய பொறுப்புக்களும் கடமைகளும் வரவிருப்பதால் இப்பொழுது ஓரளவு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நிறைவேற்றிக் கொள்வது நல்லது. எனினும் பண வரவு அதிகமாக இல்லாத காரணத்தினால் ஓரளவு ஜாக்கிரதையாகவே திட்டமிட்டுச் செயல்படவேண்டும். மாதக் கடைசியில் வரவிருக்கும் கடமைகளை முழு மனத்துடன் செயல்படுத்த ஆரம்பித்தால் திட்டமிட்டபடி பிரகாசமான எதிர்காலம் அமையும்.

தனுசு




விளையாட்டு வீரர்களுக்கும், கலைத் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் பிரகாசமான மாதமாக இம்மாதம் இருக்கும். பொதுமக்களிடையே புகழும் ஆதரவும் பெருகும். பண வரவும் சரளமாக இருக்கும். குடும்பத்தில் இருந்த மனஸ்தாபங்களும் நீங்கும். வேலையை எதிர்பார்த்து இருப்பவர்களுக்கு மகிழ்ச்சிகரமான செய்தி கிட்டும். தனியார் துறைகளில் இருப்பவர்களுக்கும் புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும்.

மகரம்




சிறு பிரச்னைகளில் ஆழ்ந்து பெரிய விவகாரங்களைக் கோட்டை விட்டுவிடாதீர்கள். பிரகாசமான எதிர்காலமும், புகழ் பெறுவதற்கு வாய்ப்புக்களும் இருப்பதால், ஒருமித்த சிந்தனையும், கடின உழைப்பும் அதிகமாக தேவையாக இருக்கும். மேலதிகாரிகளின் ஆதரவும் பார்வையும் உங்கள் பக்கம் இருக்கும்போது அதைச் செம்மையாகப் பயன்படுத்திக்கொள்வது உங்கள் கையிலேயே இருக்கிறது.

கும்பம்



குடும்ப விவகாரங்களில் நீங்கள் அதிகமாகத் தலையிடாமல் இருப்பது நல்லது. சண்டைகளும் சச்சரவுகளும் தானாகக் குறைந்துவிடும். சமீபத்தில் கிடைத்த வெற்றிகளைப் பயன்படுத்திக் கொண்டு மேன்மேலும் முன்னேறுவது நல்லது. வியாபாரத் துறையில் இருப்பவர்களுக்குப் புதிய வாய்ப்புக்கள் உண்டாகும். பண விவகாரங்களில் அதிகத் தட்டுப்பாடிருக்காது. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் உங்களுக்கு அனுகூலமாக இருப்பார்கள். அதனால் நினைத்த காரியம் கைகூடும்.

மீனம்



நீண்ட நாட்களாக மண வாழ்க்கை தடைப்பட்டுக்கொண்டு இருப்பவர்களுக்கு உளம் பூரிக்கும் செய்தி யொன்று கிடைக்கும். எதிர்காலத் திட்டங்களை அமைத்துக் கொள்ளவும், அதற்கான அஸ்திவாரம் போடவும் நல்ல மாதமிது. வீட்டில் தடை சொல்லிக் கொண்டிருந்த காரணங்களும் நீங்கி, உங்கள் மனதுப்படியே காரியங்கள் நிறைவேறும். நண்பர்களிடம் இருந்து எதிர்பார்த்திருந்த செய்தி யொன்றும் கிட்டும்.

எங்கு பணத்தைச் சேமிக்க வேண்டும்

நாம் சேமிக்க நினைக்கும் பணத்தை எங்கு போட வேண்டும்? எங்கு கட்டினால் பத்திரமாக இருக்கும்? நாம் ஏமாறாமல் இருக்க வழி என்ன?

பணத்தைச் சேமிப்பது எப்படி?

சேமிக்க நூறு வழிகள்.

இப்படியெல்லாம் ஏராளமான புத்தகங்கள் வந்து விட்டன. புத்தகங்களோ, விலைவாசி ஏற்றமோ பெண்கள் நன்கு படிக்க ஆரம்பித்து விட்டதன் விளைவோ... ஆக மொத்தம் சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லத்தரசிகளுக்கு நிறைய வந்துவிட்டது. கணவர் கொண்டு வந்து கொடுக்கும்சம்பளம் அல்லது இருவரும் சம்பாதிக்கும் பணம் இவற்றுள் மிச்சம் பிடித்து எதிர்காலத்துக்குச் சேமிக்க வேண்டும் என்று திட்டமிடுகிறார்கள்.

ஒருசிலர் அருகில் இருக்கும் சீட்டு போடும் கோஷ்டிகளில் சேருகிறார்கள். இது ஆங்காங்கே வீடுகளிலேயே நடைபெறுகிறது. அல்லது அந்த ஏரியாவில் இருக்கும் சிட்ஃபண்டில் சேருகிறார்கள்.

இப்பொழுதெல்லாம் நாங்கள் இவ்வளவு வட்டி தருகிறோம். அவ்வளவு தருகிறோம் என்று கவர்ச்சிகரமாக விளம்பரம் செய்கிறார்கள். வட்டி விகிதங்களை ஒப்பிட்டுப் பார்த்துவிட்டு அதிகவட்டி தரும் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷனில் பணத்தைக் கட்டுபவர்களும் உண்டு. அப்புறம்...?

இங்கேதான் பலரும் ஏமாந்து போகிறார்கள். முதல் இரண்டு மூன்று தவணை ஒழுங்காக வட்டி தரும் சில ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன்கள் பிறகு தருவதில்லை. சீட்டுக் கம்பெனியை முன்னறிவிப்பின்றி மூடிவிட்டுப் பணத்தைச் சுருட்டிக் கொண்டு ஓடிவிடும் நபர்களைப் பற்றியும் பேப்பர்களில் படிக்கிறோம்.

ஆக, இதைச் சேமித்து இப்படிச் செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்புக் கனவுகளுடன் சேமிக்கிறோம். குருவி போலச் சேர்த்த நிலையைத் தவிர்க்க என்ன செய்யலாம்?

முதலில் நாம் பணத்தை எந்த இடத்தில் போட வேண்டும் என்று பார்ப்போம். இப்பொழுதெல்லாம் பாங்குகள் ஃபிக்சட் டெபாசிட்டை வரவேற்கின்றன. அநேகமாக எல்லா வங்கிகளும் தேசிய மயமாக்கப்பட்டவை. எனவே ஏமாற்றிவிட்டு ஓடிவிட முடியாது. ஓரளவு வட்டி விகிதம் குறைவாக இருந்தாலும், எல்லாவற்றையும் விட்டுவிட்டு நிற்க வேண்டிய நிலைமை ஏற்படாது.

வங்கிகளிலேயே சேவிங்ஸ் கணக்கு, ரெகரிங் டெபாசிட் எனப் பல அம்சங்கள் உண்டு. மாதம் கொஞ்சம் கொஞ்சமாகச் சேமிக்க நினைக்கும் இல்லத்தரசிகள் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றிலே கொஞ்சம் கொஞ்சமாகச் சேரும் பணம் ஒரு குறிப்பிட்ட தொகையாக மாறியவுடன் ஃபிக்சட் டெபாசிட்டாக மாற்றலாம். இதனால் ஒவ்வொரு நிலையிலும் வட்டி பெறும் சாத்தியக் கூறு உண்டாகிறது. உங்கள் வீட்டுக்கு அருகே இருக்கும் பேங்க் மானேஜரை அணுகுங்கள். அவர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.

அடுத்தது, சிட்ஃபண்டிலோ, ஃபைனான்ஸ் கார்ப்பரேஷனிலோ பணத்தைச் சேமிப்பதும் தவறல்ல. பலர் அதிக வட்டி விதம் கொடுக்கவும் செய்கிறார்கள். ஆனால் எந்த மாதிரியான கம்பெனியை நீங்கள் தேர்ந்தெடுக்கிறீர்கள் என்பதில்தான் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

சிலா பத்திரிகைகளில் உங்களைக் கவரும் அதிக வட்டி தருவோம் என்று விளம்பரம் செய்வார்கள். ஏற்கனவே பிரபலமாகி இருக்கும் மற்றொரு கம்பெனிக்காரரின் பெயரில் ஓரிரு எழுத்துக்களை மாற்றி அல்லது அவர்களுடைய ஊர்ப் பெயரைப் போட்டுக்கொண்டு விளம்பரப்படுத்துவார்கள். இதனால் 'சட்'டென்று பார்ப்பவர்களுக்கு அந்தப் புகழ் பெற்ற கம்பெனியின் ஒரு கிளை என்றே நினைக்கும்படி தோன்றும்.



தவிரவும் அருகிலேயே இருக்கிறது என்றோ, வீட்டிற்கு வந்து கான்வாஸ் செய்தார் என்றோ இது போன்ற விஷயங்களில் முடிவு எடுக்க வேண்டாம்.

நீங்கள் எந்தக் கம்பெனியில் பணத்தைக் கட்ட விரும்புகிறீர்களோ அங்கு சென்றவுடன் அவர்களிடம் Information Broucher தருமாறு கேளுங்கள். அதிலே அவர்களுடைய கம்பெனியின் வரலாறு இருக்கும். அந்தக் கம்பெனிக்கு யார் யார் டைரக்டர்கள், யார் சார்ட்டட் அக்கௌண்டண்ட், யார் லீகல் அட்வைசர், அவர்கள் இப்பணத்தை எந்தத் தொழிலுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பது போன்ற அத்தனை விவரங்களும் இருக்கும்.

அந்தக் கம்பெனி, 'கம்பெனி நிறுவனச் சட்ட'த்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதா என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டியதும் அவசியம். இதன் பின் நிற்கும் வங்கி எது என்பதையும் கேட்க வேண்டும்.

டப்பாக்களில் உள்ள கறுப்பு பூட் பாலிஷ் கட்டியாகி விட்டால் அவற்றைத் தூர எறிந்துவிட வேண்டாம். டப்பாவினுள் சிறிதளவு டர்பன்டைனை ஊற்றி இரவு முழுவதும் அப்படியே வைத்திருக்கவும். காலையில் பார்த்தால் டர்பன்டைன் முழுவதையும் பாலிஷ் உறிஞ்சி இருக்கும். பின்னர் அப்பாலிஷைப் பயன்படுத்தினால் புதிய பாலிஷைப் போல பூட்ஸ்கள் பளபளக்கும்.

—கீதா பஞ்சு

Information Broucher இல்லையென்றால் அவர்களிடம் மேற்கண்ட இந்த விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். ஏனெனில் மேற்கண்ட இந்த அம்சங்களே உங்களுடைய பணத்தை அவர்கள் ஏமாற்ற முடியாமல் செய்கிறது.

கம்பெனி நிறுவனச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது எனில் அந்தக் கம்பெனியின் கணக்கு வழக்குகள் ஒவ்வொரு வருடமும் தணிக்கை செய்யப்படும். இவர்கள் சரியாக பணத்தைப் போட்டிருப்பவர்களுக்கு வட்டி தருகிறார்களா, முதலீட்டைச் சரியான முறையில் பயன்படுத்துகிறார்களா என்றெல்லாம் பார்ப்பார்கள். இவற்றிலே பெரும்பாலும் பொய்க் கணக்கு எழுத முடியாது. ஏனெனில் தணிக்கை செய்யும் ஆடிட்டர்கள் அவர்களுடைய கவுன்சிலுக்குக் கட்டுப்பட்டவர்கள். எனவே ஏதேனும் தவறு நிகழுமானால் கேள்வி கேட்கவும் முடியும்.

அதே போல அந்தக் கம்பெனியின் டைரக்டர்கள் பொறுப்பானவர்களாக இருக்கும் பட்சத்தில் பொதுமக்களின் பணத்தை மோசடி செய்யவும் முடியாது. செய்தாலும் எளிதில் நீதிமன்றத்தின் மூலம் நியாயம் கேட்க முடியும்.

இன்னொரு அம்சத்தையும் நீங்கள் பார்க்க வேண்டும். இவர்கள் வாங்கும் டெபாசிட்டை எந்தத் தொழிலில் முடக்குகிறார்கள் என்று கவனிக்க வேண்டும். அந்தக் குறிப்பிட்ட தொழிலுக்குத் தற்போதைய மார்க்கெட் எப்படி, எதிர்காலத்தில் அந்தத் தொழில் பெருகுமா என்ற விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம்.

'இத்தனையும் தெரிந்து கொண்டு நான் இன்வெஸ்ட் செய்கிறேன். அப்பொழுது மட்டும் அந்தச் சிட்டுக் கம்பெனியை மூட மாட்டார்களா?' என்று கேட்கலாம். நஷ்ட மேற்பட்டு மூடும் கம்பெனிகள் மிகச் சிலவே. மேலும் ஏராளமான நஷ்டம் ஏற்பட்டு விட்டது என்று சொல்லி மூட முடியும். ஆனால் அத்தனை பணத்தையும் சுருட்டிக் கொண்டு ஓடிவிட முடியாது. எப்படி?

பதிவு செய்யப்பட்ட கம்பெனிகளில் நஷ்டம் ஏற்பட்டால் அவர்கள் உடனே பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். மூன்று மாதத்துக்கு முன் நோட்டீஸும் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யும் பட்சத்தில் நீதிமன்றம் பொது மக்களின் சார்பில் ஒரு தணிக்கை அதிகாரியை(official liquidator)நியமிக்கும். அந்த அதிகாரியும் கம்பெனியுடன் சேர்ந்து கணக்கு வழக்குகளைப் பார்ப்பார். 'இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது: எனவே பணம் கட்டியவர்களுக்கு இத்தனை சதவீதம் திருப்பித் தரவேண்டும்' என்று முறைப்படுத்திக் கொடுப்பார்கள். அடியோடு ஏமாற்றுதல், வட்டி தராமல் ஏமாற்றுதல் போன்ற பிரச்னைகள் ஏற்படவே இங்கு வழியில்லை.

நாம் கையில் வைத்திருப்பது ஐம்பதானாலும் ஐயாயிரம் ஆனாலும் அதை முறையாகச் சேமிப்போம். இந்தச் சிறிய தொகைக்கு இவ்வளவு பார்க்க வேண்டுமா என்று யோசிக்காதீர்கள். ஐம்பது பைசாவானாலும் அதைச் சம்பாதிப்பது எளிதல்ல. சம்பாதிப்பதை வீணடிக்காமல் ஓரளவு சேமித்து வைப்பது என்பது மிகவும் சிறப்பு. சேமிப்பதையும் கோட்டை விடாமல் ஜாக்கிரதையாகச் சேமித்துக் கோட்டையே கட்டலாம் — முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டால் — கட்டுவோம்.

- டி. ஆர். ரமேஷ்

சிங்காரவனம் என்ற காட்டைத் திறம்பட ஆண்டு வந்த விலங்கரசன் சிங்கம் மற்ற விலங்குகளால் பெரிதும் போற்றப்பட்டு வந்தது. அச்சிங்கம் பலசாலியாகவும் இருந்தது; அறிவாற்றலும் பெற்றிருந்தது. சிறு மிருகங்களைக்கூட அலட்சியம் செய்யாமல், மதிப்புக் கொடுத்து மதிப்பைப் பெற்றது. ஆண்டுதோறும் காட்டில் நடைபெற்று வந்த விழாக்களை மேற்பார்வையிட்டுத்தலைமை தாங்கிகாட்டில்மகிழ்ச்சி பரவச் செய்தது.

இவ்விதம் குதூகலமாக நாட்கள் கழிந்து கொண்டிருந்த சமயத்தில் புது வருடம் பிறக்கப் போகும் தறுவாயில் இந்த அமைதியைக் குலைக்கும் வகையில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அது- பிரும்மாண்டமான யானைக்கும், பலம் பொருந்திய புலிக்கும் திடீரென மூண்டுவிட்ட பகையேயாகும். தன்னை மிஞ்சிய பலசாலி இடையாது என யானை கர்வத்துடன் கூற தன்னை வெல்லக் கூடியவன் இடையாது எனப் புலி சீறியது.

இவற்றிடையே ஏற்பட்ட பகையில் இவை முட்டி மோதிய நேரங்களில் உறுமிப் பிளிறிய சமயங்களில் காடே இடுகிடுத்தது. காட்டிலிருந்த சிறு பிராணிகள் அச்சம் கொண்டு இவ் விஷயத்தைச் சிங்கத்திடம் கூறின.

சிங்கம் கவலை கொண்டது. உண்மையில் புலி, யானை இரண்டுமே பலசாலிகள்தான். ஆனால் பகை வெறியில் அவை காட்டை அதிரச் செய்தால் சிறு பிராணிகளின் கதி என்னவாகும்? காட்டில் நிம்மதி இராது. வேறொரு முக்கியமான விஷயமும் சிங்கத்தைக் கவலை கொள்ளச் செய்தது.

மழலை மலர்

யார் பலசாலி

ஜெயலட்சுமி ஸ்ரீதரன்



அதென்னவென்றால் புது வருடம் பிறக்கும் தறுவாயில், அன்றைய முன்னிரவில் சிங்கம் காட்டுப் பிராணிகள் யாவற்றையும் அழைத்துப் பிரமாதமான விருந்து அளிப்பதுண்டு. நடு நிசி கடந்ததும் சிங்கம் பலமாகக் கர்ஜனை செய்து தன் புது வருட வாழ்த்துக்களைக் கூற, பதிலுக்கு ஆர்ப்பரித்து மிருகங்கள் யாவும் ஒரே குரலில் சிங்கத்தை வாழ்த்த இவ்விதமே சிங்கார வனத்தில் புது வருடம் பிறப்பது வழக்கம். அழைப்பின் பேரில் விருந்துக்கு வந்த புலியும் யானையும் சந்திக்க நேர்ந்தால் விபரீதம் விளையுமே! சிங்கம் ஆழ்ந்து சிந்தித்தது.

மறுநாள் சிங்கம் யானையையும் புலியையும் தன் அவைக்கு அழைத்தது. அவை இரண்டும் வணங்கி நின்ற பின், சிங்கம், ''புது வருடம் பிறக்க இன்னும் ஒரு நாள்தான் உள்ளது'' என்றது.

''ஆம் அரசே! எந்த உதவியானாலும் நான் செய்யத்தயார்'' என வணங்கியது யானை. புலியும் அவ்வாறே கூறியது. ஏறிட்டு அவற்றை நோக்கிய சிங்கம் ''நீங்கள் இருவரும் சேர்ந்து ஓர் உதவி செய்ய வேண்டும். அதாவது நீங்கள் இருவரும் காட்டினுள் புகுந்து துவம்சம் செய்து பிராணிகளையும் மிருகங்களையும் கூடியவரை அழிக்க வேண்டும்'' என்றது.

புலியும் யானையும் அதிர்ச்சியுடன் திடுக்கிட்டு சிங்கத்தை நோக்கின. பின்னர் யானை, ''அரசே! நீங்கள் கூறிய தன் பொருள் விளங்கவில்லை'' என்றது.

''இந்த விபரீத எண்ணத்தின் காரணம் யாதோ?'' என்றது புலி.

''உங்களுக்குப் புரியாத காரணம் எதுவும் இல்லை. உங்களிடையே உள்ள பகை மறையவில்லை. பகை என்பது என்றுமே அழிவைத் தரக்கூடியதுதான். இன்றில்லாது போனால் நாளை இப்பகையின் காரணமாய் நீங்கள் சண்டையிட்டுக்கொள்ளும்போது எவ்வளவோ சிறு பிராணிகள் உங்கள் காலிடையே அகப்பட்டு நசுக்கப்படுவது திண்ணம். அந்தக் காரியத்தைப் புதுவருடமாகிய நாளையே செய்துவிடுங்களேன் என்றேன்'' என்றது சிங்கம்.

யானையும் புலியும் தலை குனிந்து நின்றன.

''உங்கள் பகையின் காரணம் வீணான அகம்பாவம்தான். பலசாலியாக இருந்து விட்டால் எல்லாக் காரியமும் செய்துவிட முடியுமா என்ன? உங்களாலும் முடியாத காரியங்கள் உண்டு. அப்படியிருக்க அகம்பாவம் ஏன்?இதோ பார்'' என்ற சிங்கம் ஒரு பிடி சர்க்கரையை வீசி எறிந்தது.

''நீங்கள் இருவரும் பலசாலிகள் தானே? எங்கே, இந்தச் சர்க்கரைத் துகள்களை இந்தே நொடியில் ஒன்று விடாமல் பொறுக்கி எடுத்து வாருங்கள் பார்ப்போம்'' என்றது.

யானை அயர்ந்து விட்டது. பிரும்மாண்டமான மரங்களை வேரோடு பிடுங்கி, காட்டுத்தனமாய்க் கரும்புக் கொல்லையில் கரும்பு தின்னும் யானை, கண்ணுக்கே சரியாகத் தெரியாத சர்க்கரைத் துகளைப் பொறுக்குவதா? முடிகிற காரியமா?

அப்படியும் விடாது அது முயன்ற போது முதுகெலும்பு ஒடிவதுபோன்ற வேதனைதான் மிஞ்சியது. கண்டெடுத்த ஓரிரு சர்க்கரைத் துகளும் துதிக்கையிலேயே ஒட்டிக் கொண்டுவிட்டன. தன் தோல்வியை ஒப்புக் கொண்டு யானை திரும்பியதும் புலியின் முறை வந்தது. மிருகங்களை அடித்து மாமிசத்தைத் தின்று பழகிய புலி சர்க்கரைத் துகள்களைத் தேடிச் சென்றதில் அதற்கு மயக்கமே வந்து விட்டது.

அது கண்டு சிரித்த சிங்கம், ''இப்போதாவது புரிகிறதா? ஒரு சிறு எறும்பு நொடியில் செய்துவிடக் கூடியதைப் பலசாலிகளான உங்கள் இருவராலும் முடியவில்லையே'' என்றது. யானையும் புலியும் வெட்கி நின்றன.

''புதுவருட விருந்தை நல்ல முறையில் நடத்தி வைக்கும் பொறுப்பை உங்கள் இருவரிடமுமே ஒப்படைக்கிறேன்.'' என்றது புத்திசாலி சிங்கம்.

யானை, புலியினிடையே இருந்த பகை நீங்கி அவற்றின் அகம்பாவம் ஒழிந்தது. சிங்கார வனத்தில் புது வருடம் களிப்பும் மகிழ்ச்சியுமாய் இனிது பிறந்தது.

வெந்தயக் குழம்பு

சாம்பார் செய்வதற்கு 2 மணி முன்னால் வெந்தயத்தை ஊற விடவும். பருப்புடன் சேர்த்து குக்கரில் வேகவைத்துச் சாம்பார் செய்யவும். இந்தப் பருப்புக் குழம்பு கசக்குமா என்று சந்தேகம் வேண்டாம். துளிக்கூடக் கசக்காது.

—ரோஜி

மறக்க முடியாத நிகழ்ச்சி

சமீபத்தில் சங்கீத தூதராக அமெரிக்காவுக்கு நடனமணி திருமதி லட்சுமி விஸ்வநாதனும், இசைக் கலைஞர் திருமதி சாருமதி ராமச்சந்திரனும் போய் வந்தார்கள். 'உங்களால் மறக்க முடியாத அனுபவம் எது?' என்று இருவரையும் கேட்டபோது—



சாருமதி ராமச்சந்திரன்

''பிட்ஸ்பர்க் கோயிலில் நடந்த பூணூல் கல்யாணத்தை என்றால் மறக்கவேமுடியாது. அமெரிக்காவில்தான் நான் இருக்கிறேனா என்று சந்தேகம் வந்து விட்டது. ஒரு சீர் வரிசைக்குக் குறைச்சல் இல்லை. லட்டு, முறுக்கிலிருந்து சுமங்கலிகளுக்கு ரவிக்கைத் துண்டு வரை... ஜமாய்த்து விட்டார்கள். சாவியின் வாஷிங்டன் திருமணம்தான் ஞாபகத்துக்கு வந்தது.

அதே போல் நான் கச்சேரி செய்து கொண்டிருந்தபோது பல அன்பர்கள் சீட்டு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். ஒரு சீட்டைப் பார்த்தவுடன் தூக்கி வாரிப் போட்டது. இருபது டாலருக்கான செக்! அதில் 'நிதிசால சுகமா' பாடும்படி இருந்தது. பழைய நாள் சமஸ்தானத்தில் சன்மானம் கொடுத்துப் பாடச் சொல்வார்களாம். அது போல இருக்கிறதே என்று சிரித்துக்கொண்டேன். இவ்வளவு கலை உணர்வு மிக்க ரசிகர்களிடையே வெளி நாட்டில் கச்சேரி செய்தபோது எனக்கு ஏற்பட்ட ஆத்ம திருப்தி இவ்வளவு அவ்வளவு என்றில்லை.''



லக்ஷ்மி விஸ்வநாதன்

''கலிபோர்னியா பல்கலை கழகத்தில் என்னுடைய நடனம் ஏற்பாடாகி இருந்தது. அங்கே போய் மேக்-அப் எல்லாம் முடித்துக் கொண்டு தலைக்கு வைத்துக் கொள்ள பூவைத் தேடுகிறேன், தேடுகிறேன்... என்னுடைய 'நெட்டி'யைக் காணோம். இந்த ஊரில் என்ன உடனே போய் ஏதாவது ஒரு பூ வாங்கி வர? நிகழ்ச்சி ஆரம்பிக்க ஐந்து நிமிஷமே இருந்தது.

என் தடுமாற்றத்தைப் பார்த்து அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களுள் ஒருவரான பேராசிரியர் என்னவென்று கேட்டார். என் பிரச்னையைச் சொன்னவுடன் தன் மகளை அனுப்பி யுனிவர்சிடி கேம்பஸில் இருக்கும் பூக்களைப் பறித்து வரச் சொன்னார். என்னுடன் வந்திருந்த பெண்களின் உதவியோடு அந்த வெளி நாட்டுப் பூக்களை மடமடவென்று தொடுத்துத் தலையில் வைத்துக்கொண்டு சரியான நேரத்துக்கு மேடைக்குப் போய் விட்டேன்.

நடனம் முடிந்த பிறகு வழக்கம் போல பலரும் வந்து பாராட்டினார்கள். அதில் ஒரு வெளி நாட்டு மாது என் தலையில் சூடியிருந்த பூவைப் பற்றிப் புகழோ புகழென்று புகழ்ந்து தள்ளி விட்டார். அப்புறம் அதை எப்படித் தொடுப்பது என்றெல்லாம் விவரமாகக் கேட்டுக் கொண்டார். நிகழ்ச்சி ஆரம்பிக்க ஐந்து நிமிடங்களுக்கு முன்னால் தொடுத்த சரம் என்று அவரிடம் எப்படிச் சொல்வது?''

- பிரசன்னா



நான் ஒரு சிறந்த மகள்

என் வலது கையை இழந்து விட்டேன்!

அப்போது எனக்கு ஏழு வயது. எங்கள் தெருவில் நடைபெற்ற ஒரு இருக்குறள் கூட்டத்திற்கு என் தந்தையார் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் புறப்பட்டார். ''நானும் அப்பா கூடப் போறேன்'' என்று அழுது அடம் பிடித்தவுடன் கூட்டத்திற்கு அழைக்க வந்தவர்கள் பரிந்துரை செய்து என்னையும் உடன் அழைத்துச் சென்றனர்.

அன்று முதல் என்னை அறியாமலேயே என் தந்தையாருடன் நானும் தொடர்ந்து எல்லா வித இலக்கியக் கூட்டங்களுக்கும் விழாக்களுக்கும் சென்று வர ஆரம்பித்தேன். எனது ஒன்பதாம் வயதில் நூறு திருக்குறளை அவதானமாகச் சொல்லவும், திருக்குறளைப் படிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிப் பேசியும், இந்தி எதிர்ப்புப் பாடல்களை மேடைகளில் பாடியும் முழங்கியும் வந்தேன்.

வயதுக்கு வந்த பெண்கள் வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது என்பதில் என் பாட்டி கண்ணும் கருத்துமாக இருந்ததால் எனது 15வது வயதில் 10ம் வகுப்போடு என் பள்ளி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இருந்தாலும் நான் தினந்தோறும் என் தந்தைக்கு வரும் பலதரப்பட்ட கடிதங்களுக்குப் பதில் எழுதியும், கட்டுரைகள் எழுதியும், கோப்புகள்பார்த்துக் கொடுத்தும், அவர்கள் நூல்கள் பல வெளிவர உதவியும் அந்தரங்கச் செயலாளராக எந்நேரமும் அவர்கள் அருகில் இருந்து பணியாற்றுவதை என் பெரும் பேறாக எண்ணிச் செய்து வந்தேன்.

எனது பத்தொன்பதாம் வயதில் என்னைத் திருமணம் செய்து கொடுத்தபோது ''என் வலது கையை நான் இழந்து விட்டேன்'' என்று சொல்லி என் தந்தை வருந்தியபோது நான் ஒரு நல்ல மகளாக இருந்து வந்ததை எண்ணி எண்ணி இறுமாந்தேன். பிறகு.

மூன்றாவது பெண் குழந்தை எனக்குப் பிறந்து ஓராண்டு ஆகியிருந்தது. போத்தனூரில் நடைபெற்ற சோழிய வேளாளர் மகாநாட்டுக்குத் தலைமை வகித்து எனதருமைத் தந்தையார் அவர்கள் பேசும்போது, ''பெண்களுக்கு என்று தனியாக ஒரு மாதர் சங்கம் அமைத்து நல்ல முறையில் செயல்படுத்தப் பெண்கள் முன்வர வேண்டும் என்பது எனது நெடுநாளைய ஆசை. இதுவரை மூன்று மாநாடுகளில் சொல்லியும் இன்னும் யாரும் முன்வரவில்லையே'' என்று மிகவும் மனம் வருந்திப் பேசினார்கள்.

இந்தப் பேச்சைக் கேட்ட உடனேயே என் தந்தையின் கனவை நானே நனவாக்குவது என்று எனக்குள்ளே முடிவு செய்து கொண்டேன். முற்போக்கு எண்ணம் கொண்ட என் கணவரும் என் கருத்துக்கு முழு ஆதரவு கொடுத்துத் தன் ஒத்துழைப்பையும் தர முன்வந்தார்கள்.

இந்த முடிவை என் தந்தையாரிடம் கூறிய போது, ''நாங்கள் பொதுத் தொண்டு செய்த காலம் வேறு. இப்போது பொதுத் தொண்டு செய்வதில் பல இன்னல்களும், தடைகளும் வரும். நாலு பேர் வாழ்த்துவார்கள், நாலு பேர் வைவார்கள். இதையெல்லாம் தாங்கும் மனப் பக்குவம் உனக்கு உண்டா?'' என்று கேட்டார்கள்.

''வாழ்த்துபவர்களைக் கண்டு மயங்காமல், வைபவர்களைக் கண்டு வருந்தாமல் எனது கடமைகளைச் செவ்வனே செய்து முடிப்பேன் எனக்கு ஆசி கூறுங்கள் அப்பா'' என்று நான் உறுதியாகக் கூறியதும் உள்ளம் மகிழ்ந்து எனக்கு நல் வாழ்த்துக் கூறி ''நல்லதையே எண்ணு, நல்லதையே சொல்லு, நல்லதையே செய்'' என்று அறிவுரையும் கூறினார். அதன் படியே,

1975 ஆகஸ்ட் 3ம் நாள் ஆடிப் பெருக்கு அன்று திருச்சி மாவட்ட சோழிய வேளாளர் மாதர் சங்கத்தை ஆரம்பித்து அதன் செயலாளராகப் பொறுப்பு ஏற்று, பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த எங்கள் சமூகத்து பெண்களுக்கெல்லாம் மாவட்ட அளவில் ''பின்தங்கிய வகுப்புச் சான்றிதழ்'' வழங்கி அதிலிருந்து தையல் பயிற்சிப் பள்ளியும், நூல் நிலையமும் நடத்தி வந்தோம்.

இயற்கையிலேயே பேச்சுத் திறன் பெற்ற நான் பேசிய கூட்டங்கள் பல.

இவை யாவும் பெயரும் புகழும் பெற்ற ஒரு தமிழ் அறிஞருக்கு மகளாகப் பிறந்ததால் அன்றோ எனக்குக் கிடைத்தது.


- மணிமேகலை கண்ணன்

நான் ஒரு சிறந்த மனைவி

அடுத்த பிறவியிலும் இவரே என் கணவர்.

ஆறு சகோதரிகளின் ஒரே சகோதரர். அதுவும் மூத்த சகோதரர் என் கணவர். பிறகு வாழ்க்கையில் பிரச்னைகளுக்குக் குறைவேது? ஐந்து சகோதரிகளுக்கும் (ஒருத்திக்கு என் திருமணம் முன்பே திருமணம் ஆகியிருந்தது) திருமணம் செய்ய நாங்கள் மனமுவந்து உதவியதன் பலன், பதினைந்து வருடங்கள் முழுச் சம்பளம் என்பதை என்கணவர் கொண்டு வந்து நான் அறியவில்லை.

மணமான புதிதில் இருக்கும் மிக உல்லாசமான வாழ்க்கையைக் கூட நாங்கள் ஓரளவுமிருந்த கட்டுப்பாடுடன் அனுபவிக்க வேண்டியதாயிற்று. இதனால் ஏற்படும் சச்சரவுகள், வாதப் பிரதிவாதங்கள், கோப தாபங்கள் இருப்பினும் அதனுடனேயேசேர்ந்து பிணைந்து வரும் நூலிழை போன்ற சின்னஞ் சிறிய உல்லாசங்கள், சந்தோஷங்கள், மகிழ்ச்சிகள், எங்களைக் களைப்படையச் செய்யாதிருந்தன.



எத்தனை பணக் கஷ்டமிருந்தாலும் என் கணவர் என் பிறந்த நாளுக்கும் திருமண நாளுக்கும் அப்போது அவரால் முடிந்த பரிசை வாங்கித் தரத் தவறியதேயில்லை. பணத்தினால் எடை போட்டால் அது மிகவும் சிறிய பொருளாயிருக்கலாம். ஆனால் அதனால் பெறும் மகிழ்ச்சிக்கு ஈடு இணை ஏது?

என்னை எந்த நேரத்திலும் எதற்காகவும் அவர் வாய் திறந்து பாராட்டாதபோதிலும் அவருடைய பார்வையிலிருந்தும் முகத்தின் மலர்ச்சியிலிருந்தும் நான் அறிந்து கொள்வேன். மனது சந்தோஷப்படும்.

எங்கள் வாழ்க்கையில் மேடு பள்ளங்களே அதிகம். எதிர் நீச்சல் போட்டுத்தான் ஒவ்வொரு கஷ்டத்தையும் தாண்டிக் கொண்டிருந்தோம். ஆனால் அத்தனைக்கும் மேலாக வந்தது.....

குதூகலமே குடும்பமாய் இருந்த என் மகன் குமார் ஐந்து வருட மண வாழ்வின் போது ஒரு சிறிய விபத்தில் மறைந்தான். எங்களைத் தாக்கிய இந்த இடி, என் கணவரைப் பேரிடியாய்த் தாக்கியது. அவருடைய மூளையே பாதிக்குமளவுக்கு ஆயிற்று இந்தச் சம்பவம்.

என் மகனைப் புதைத்தது போன்று, என் ஈடு காண முடியாத துக்கத்தை என் வயிற்றிலேயே புதைத்துக்கொண்டு, அவர் எதிரில் அவனைப் பற்றிய பேச்சைத் தவிர்த்து, கண்ணீர் விடாமல், அவர் காணாத நேரத்தில் நான் குலுங்கி... அப்பப்பா! எந்தப் பெண்ணுக்கும் இத்தகைய துன்பம் கூடாது. கூடவே கூடாது.

அந்த ஒன்றரை வருடத்துக்குப் பிறகு இனி வேறு வழியில்லை. இந்தத் துன்பத்தைப் பொறுத்தே ஆக வேண்டும் என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்ட என் கணவர், என்னையும் என் மனோ நிலைமையையும் உணர்ந்தவராக,

''ஷ்யாமளா! உன்னை மாதிரி சிறந்தமனைவி கிடைக்க நான் கொடுத்துவைத்திருக்கவேண்டும்'' என்று குரல் தழதழக்கக் கூறியபோது, இத்தனை நாள் அடைபட்டிருந்த கண்ணீர் கண்களிலிருந்து அருவியாய்ப் பொழிய நான் உடைந்து போனேன். 'இறைவா, அடுத்த பிறவியிலும் எனக்கு இவரையே கணவராகக் கொடு' என்றே வேண்டுகிறேன்.

- திருமதி ஷ்யாமளாராவ்

நான் ஒரு சிறந்த தாய்

கல்வி என்ற மூன்றெழுத்தைத் தந்தேன்!

அன்றைக்கு நல்ல மழை. இரவு மணி பன்னிரண்டு. அன்றைக்கென்று கொல்லைப்புறம் மண் சுவர் எடுத்திருந்தார் என் கண

வர். இரவு மழையை எதிர்பார்க்கவில்லை. நடு இரவில் கொல்லைப்புறம் போய் சுவர் எப்படி இருக்கிறதென்று பார்க்கப் போனவர் சுவர் சரிந்து அடியில் அகப்பட்டுக்கொண்டு இறந்து போனார். நான்கு குழந்தைகள். பெரிய பிள்ளையின் படிப்பு இரண்டு வருடம் தடைப்பட்டது. கடைசிக்குழந்தையின் வயது பதினொரு மாதம். என் தந்தைதான் எனக்குத் தெய்வமாகத் துணை நின்றார். ஒரு பெண். இந்த நிலையைக் கற்பனை செய்து பார்க்கக் கூட முடியாது.

எனக்கு சம்ஸ்கிருதத்தில் ஈடுபாடு உண்டு. எத்தனையோ பாடங்கள். தேசிகரின் சுலோகங்கள் எல்லாம் பாடம். என் பெரிய பையனை அருகில் வைத்துக் கொண்டு என் கவலைகளையும் துக்கங்களையும் மறந்து அவ



னுக்குச் சொல்லிக் கொடுப்பேன். இள வயதில் ஊன்றப்படும் விதைகள் யாவும் அப்போது பலன் கொடுக்கா விட்டாலும் எத்தனையோ காலம் கழித்துப் பலன் கொடுக்கிறது. அதன் பலனை நம் கண்ணாலேயே பார்க்கும்பொழுது அடையும் சந்தோஷத்துக்கு ஈடு இல்லை.

கஷ்டங்கள் வரும்போது சமாளிப்பது என்பது எளிதான காரியமில்லை. குழந்தைகள் அதுவும் புருஷக் குழந்தைகள் வளரும் போது. ஒரு சிகரெட். இன்னும் எத்தனையோ கெட்ட பழக்கங்கள் இல்லாமல் இருக்க வேண்டுமானால் அதற்குச் சிறந்த சாதனம் குழந்தைகளைச் சிறு வயதிலேயே பக்தி விஷயத்தில் ஈடுபடுத்துவதுதான்.

கையிலே சாதத்தைப் பிசைந்து போட்டுக் கொண்டே ராமாயணம் மகாபாரதக் கதைகளைச் சொல்வேன். என் இரண்டாவது மகன் வெகு சூடிகை. என் கணவர் ராமாயண ஸ்லோகங்கள் சொல்லிச் சொல்லி எனக்கே நாலாயிரப் பிரபந்தம் ராமாயண ஸ்லோகம் எல்லாம் வரும். அவற்றைச் சொல்லிக் கொடுக்கும்போது உன்னிப்பாகக் கேட்பான்; எல்லோரும் நான் சொன்னதை திருப்பிச் சொல்லுவார்கள். ஒரு கைம்பெண் அதுவும் இள வயதில் ஆனால் அந்தக் காலக் கொடுமைகளைப் பற்றிச் சொல்ல வேண்டாம். இத்தனைக்கும் நடுவில் என் குழந்தைகளுக்காக உயிர் வாழ்ந்தேன்.

அந்தக் காலத்தில் என்னிடம் சொல்லிக் கொண்ட ஸ்தோத்திரப் பாடங்களை வைத்துக் கொண்டு என் பெரிய பிள்ளை நிம.ரென்று உபந்நியாசம் செய்யத் தொடங்கி விட்டான். யாருமே குரு இல்லை. தனக்குத் தானே வழி வகுத்துக் கொண்டு என்னை குரு மாதிரி நினைத்துக் கொண்டு உபந்நியாசம் செய்கிறான். இன்றைக்கு பி.எச்.இ.எல்.லில் நல்ல ஆபீசர் உத்தியோகம் வேறு செய்து கொண்டு உபந்யாசத்தையும் விடாமல் ஆசைப்பட்டுச் செய்கிறான். அதைக் கேட்கும்போது என் உள்ளம் புளகிதம் அடைகிறது. இருபது வருடம் வடக்கே எங்கெல்லாமோ இருந்து விட்டு எப்போதோ படித்த ஸம்ஸ்கிருதத்தை வைத்துக்கொண்டு ஆயிரக் கணக்கில் மனிதக் கூட்டத்தின் மத்தியில் என் பிள்ளை உபந்நியாசம் செய்யும் போது எனக்கு என்னுடைய முயற்சிகளை கனவுகளை என் குழந்தைகள் வீணாக்கவில்லை என்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

அடுத்தவன் பெரிய பதவியில் டில்லியில் இருக்கிறான். இன்னும் மற்ற இருவரும் உன்னதமாக இருக்கிறார்கள்.

எந்தக் காரியம் ஆனாலும் எதுவானாலும் என்னைக் கேட்காமல் செய்ய மாட்டார்கள். அவர்களுக்குக் குழந்தைகள் தலைக்கு மேல் இருக்கிறார்கள். இருந்தாலும் அம்மாதான் தெய்வம் என்ற எண்ணம் அவர்களுக்குஇருக்கிறது.

இது மட்டுமல்ல. அந்தச் சின்னஞ் சிறிய கிராமத்துக்கே என் பிள்ளை பெரிய பெயரைத் தேடிக் கொடுத்து விட்டான். ''உன் குழந்தைகள் எல்லாம் பெயரும் புகழுமாக இருக்கிறார்கள். அந்தக் காலத்தில் நீ இவர்களை வளர்க்க எத்தனை பாடு பட்டிருப்பாய்'' என்று யாராவது சொன்னால் எனக்கு அந்த நாளில் பட்ட கஷ்டங்கள் நினைவுக்கே வருவதில்லை. குழந்தைகளோடு குழந்தையாய் மழலைப் போதில் அன்னையாக, வளரும்போது ஆசிரியர் மாதிரி இருந்த நிலையே நினைவு வருகிறது. பணம் என்ற மூன்றெழுத்தை விட கல்வி என்ற மூன்றெழுத்தைத்தான் குழந்தைகளுக்குக் கொடுத்தேன். என் குழந்தைகளைப் பார்க்கும்போது ''நானா இவர்களை வளர்த்தேன்? படிப்பு வாசனையே இல்லாத என்னால் எப்படி இவர்களுக்கு இத்தனை அறிவை ஊட்ட முடிந்தது. பகவத் சங்கல்பம்'' என்று பகவானைத்தான் வேண்டுகிறேன்.

- லட்சுமி அம்மாள்


ரசிப்புகள் பல விதம்... ஆனால்...
அ...அ...அ!
ஆ...ஆ...ஆ..!
இ...இ...இ..!
ஈ...ஈ..ஈ..ஈ...!
உ..உ..உ!
ஊ...ஊ...ஊ!
எ..எ...எ...!
ஏ...ஏ...ஏ..!
ஐ..ஐ...ஐ..!
ஒ...ஒ...ஒ..!
ஓ...ஓ...ஓ...ஓ..!
ஔ...ஔ...!
எல்லோரும் ஒரே விதமாய் ரசிப்பது
நரசூஸ் காபி!
ஜீவனுள்ள ஒரே காபி!
நரசூஸ்
"தெர்மலோ" காபி!
நரசூஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.
ADWAVE/NCC/2166


புலரும் இன்றைய
என் பொழுது
மகிழ்வாய்
மலருமே
பொங்கும்
மகிழ்வைக் கூட்டுமே
ம:பத்லால்
துணிகள்
மட்டுமே
ம:பத்லால்
:பேப்ரிக்ஸ்
MF-123 TAM

ஊமை என்று ஒன்று இல்லை!

டாக்டர் காமேஸ்வரன்

இன்றைக்கு வளரும் நாடுகளில் வாழ்கின்ற குழந்தைகளில் நூற்றுக்குப் பத்து சதவீதம் குழந்தைகள் காது கேளாத தன்மையைப் பெற்றிருக்கின்றன.
அதில் நமக்கு அதிர்ச்சி தரத் தக்க ஒரு செய்தி உண்டு. இந்தியாவில் ஏறத் தாழ 6 மில்லியன் குழந்தைகள் இக்காது கேளாத் தன்மையால் அவதிப்படுகின்றன என்பது தான் அந்தச் செய்தி.

காது கேட்காத நிலை பற்றிப் பேசும்போது ஊமை என்று கூட்டப்படும் உடல் ஊனத்தைக் குறிக்கும் சொல்லும் அடிபடுகிறது. ஆனால் அப்படி ஊமை என்று குறிக்கத்தக்க ஒரு பிரிவே இல்லை. ஒரு குழந்தைக்குக் காது கேட்காமல் போகும்போது, பேசும் மொழியைக் கேட்காத காரணத்தினால் தானும் பேச முடியாமல் அவதிப்படுகிறது.
இதையே ஊமை என்று முடிவுகட்டி விடுகிறோம்.

குழந்தைக்குக் காது அறவே கேட்காது என்ற முடிவுக்கு வருவது சரியானதன்று. அப்படிப்பட்ட காதுகளில் சில பகுதிகள் பாதிக்கப்படுவதாலேயே காது கேட்பதில்லை. அவற்றை மட்டும் சரி செய்து விட்டால் குழந்தைக்குக் கேட்கும் தன்மையைத் தரலாம்.

அப்படிச் சில பகுதிகளில் கேட்கின்ற தன்மையைக் கொண்டு நாம் அந்த ஒலித் தன்மையை அதிகரிக்கச் செய்து, அதைக் குணப்படுத்த முடியும். ஒலியை மிகுதிப் படுத்துகின்ற ஒலிக் கருவிகளைக் கொண்டு 'ஒலித்தன்மை அதிகரிப்புப் பயிற்சியை' குழந்தைகளுக்கு அளித்தால் 'ஊமை' என்ற உடல் ஊனத்தைக் குறிக்கும் ஒரு பெயரையே அகற்றிவிடலாம். ஒரு சமுதாயத்தில் ஊமைக் குழந்தைகள் இருக்கின்றன என்னும்போதே அந்தச் சமுதாயம் காது கேளாத குழந்தைகளைப் பற்றிக் கவலைப்படவில்லை என்பதுதான் அர்த்தமாகிறது.

குழந்தைகளின் காது கேளாப் பண்பினை இரண்டு வகையில் விளக்க முடியும்.

காதடைப்பால் ஏற்படும் கேளாமை

இந்த முதல் வகைக் காது கேளாமைக்கு பல காரணங்கள் உண்டு. வெளிக் காதில் இருக்கின்ற அடைப்பு, காதில் அழுக்கின் வழி ஏற்படுகின்ற காது குரும்பி: காதில் அறியாமல் போட்டு விடுகின்ற விதைகள் போன்ற பொருள்கள், வெளிக் காதில் அமைந்துள்ள துவாரம் பிறவியிலேயே சுருங்கிவிடுதல், செவிப்பறையில் துவாரம் ஏற்படுதல்: நடுக் காதில் நீர் வைத்திருத்தல்: சீழ் கோத்திருத்தல் என்று அதற்கான காரணங்கள் பட்டியல் பெரிதாக நீண்டு கொண்டே செல்லும். இப்படிப்பட்ட காரணங்களினால் காது கேளாதவர்களுக்குச் சில கருவிகள் மூலம் குணப்படுத்த முடியும். இவ்வகைக் கருவிகள் ஒலியைப் பெருக்கி உட்காதுகளுக்குஒலியைத் தருவதால் காது கேட்க இயலுகிறது.

நரம்புத் தளர்ச்சியால் ஏற்படும் காது கேளாமை

இது காது கேளாமையின் இரண்டாம் வகையைச் சேர்ந்தது. கருத்தரித்த மூன்று மாதங்களுக்குள் ஏற்படும் வியாதிகளால் கருவில் உள்ள சிசு பாதிக்கப்படலாம். சான்றாகக் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படும் தட்டம்மை பொன்னுக்கு வீங்கி போன்ற நோய்களால் இந்தப் பாதிப்பு ஏற்படலாம். இவ்வகையின் நோயின் காரணங்கள் மட்டுமின்றி தாய் தகாத மருந்துகளை உட்கொள்வது கூட சிசுவுக்கு ஆபத்தை உண்டாக்கலாம்.

குழந்தைப் பருவத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும் சில நோய்கள் காரணமாகவும் இந்த நரம்புத் தளர்ச்சியின் பாதிப்பு நேரக்கூடும். குழந்தைக்கு ஏற்படும் மூளைக் காய்ச்சல் அந்த மூளைக் காய்ச்சலுடன் வரும் இழுப்பு,



தலையில் ஏற்படும் அடியால் உருவாகும் மூளை அதிர்ச்சி போன்ற காரணங்களால் நரம்புத் தளர்ச்சி காது கேளாமை ஏற்படலாம்.

பிறவிக் கோளாறாக உண்டாகும் வம்ச வாரியாகத் தொடர்ந்து வருகின்ற கேடுகளும் இவ்வகையில் சில உண்டு. சில குடும்பங்களில் பல குறைபாடுகள் மறைமுகமாக 'ஜீன்ஸ்' எனப்படும் நுண்ணிய சரீர அணுக்களில் பதுங்கி இருக்கின்றன. இந்தக் குறைபாடுகள் உள்ள ஒரு குடும்பம் மற்றொரு குடும்பத்துடன் இணைந்தாலும் அல்லது நெருங்கிய உறவினர்களுக்குள் திருமணம் நிகழ்ந்தாலும் இவ்வகையிலான குறைபாடுகள் வெளிப்படலாம். அத்தகைய வியாதிகளில் காது கேளாமையும் ஒன்று.

குழந்தையின் காது கேட்கும் தன்மை அறிய

குழந்தைக்குக் காது கேட்கிறதா என்று எப்படி அறிவது? இதைச் சாதாரணமாகக் கண்டுபிடிப்பது கஷ்டம். குறைந்தது குழந்தை பிறந்து ஆறு மாத காலமாவது ஆனால்தான் அந்தத் தன்மையை உறுதியாகச் சொல்ல முடியும். Crib Audiometer என்னும் ஒலியியல் கருவி ஒன்று இருக்கிறது. இது குழந்தையின் செவி சோதனைக் கருவியாகும். குழந்தையை அக்கருவியில் படுக்க வைத்துவிட்டு, சப்தம் எழுப்பினால் அவ்வொலி கேட்கும். குழந்தை திரும்புவதையும், கேட்காத குழந்தை வாளாவிருப்பதையும் கண்டு நாம் ஒருவகையாகக் காண முடியும்.

சிலர் ''என் குழந்தைக்குக் காது நன்றாகக் கேட்கின்றது. கவனம்தான் இல்லை'' என்று சொல்வார்கள். உதாரணமாகக் கதவைப் பலமாகச் சாத்தும்போது பட்டாசு வெடிக்கும்போது குழந்தை திடுக்கிடும். இவற்றைக் கொண்டே காது கேட்கிறது என்று முடிவெடுத்துவிட முடியாது. காதுக்குள் செல்லும் பெரும் அதிர்ச்சி செவிப் பறையைத் தாக்குவதால் உடல் இயற்கையாக அதிர்கிறது. சிறிய ஒலிக்கும் திரும்புகிறதா என்றுதான் கவனிக்க வேண்டும். பொதுவாக இப்படிப்பட்ட ஐயங்களை ஏற்படுத்தும் குழந்தைக்கு ஒரு வயது ஆகும்வரை ஐயமின்றி நிரூபிப்பது கஷ்டம். குழந்தைக்கு வயது ஒன்றுக்கும் மேற்பட்டால் கருவிகள் கொண்டு காது கேட்கிறதா இல்லையா என்பதைச் சுலபமாகக் கண்டுபிடித்து விடலாம்.

ஒரு வயதுக்கு மேற்பட்டு உள்ள குழந்தைகளைச் சோதனை செய்வதற்குப் பலவகைப்பட்ட கருவிகள் உள்ளன. இவை யெல்லாம் விளையாட்டுடன் கலந்த கருவிகள். விளையாட்டு இருப்புப் பாதை ஒன்று இருக்கும். இன்ஜினும் நின்று கொண்டு இருக்கும். குழந்தை ஒரு பட்டனை அமிழ்த்தினால் இன்ஜின் ஓடும். அதுவரை சரி. ஆனால் குழந்தை எப்போது பட்டனை அழுத்த வேண்டும் என்பதற்கு உதவியாகக் காதிலே ஒலி உண்டாக்கக் கூடிய கருவி பூட்டப்பட்டிருக்கும். ஒலி காதில் கேட்டவுடன் குழந்தைபட்டனை அழுக்கும். இன்ஜின் ஓடும். இந்த விளையாட்டு பாவனையாலே இரு காதுகளையும் சோதிக்கக் கூடும். வேறு எந்த முறைகளை நாம் கைக்கொண்டாலும் நம்மால் குழந்தைகளைச் சோதனை செய்ய இயலாது. பயந்துபோய் நம்முடன் ஒத்துழைக்காது.

பெற்றோர்களுக்கு....

தம் குழந்தைக்குக் காது கேட்கவில்லை என்று பெற்றோருக்கு எப்போதாகிலும் சந்தேகம் தோன்றுமானால் அதைக் கேவலமாக எண்ணி மறைத்து வைக்காமல் அது சம்பந்தப்பட்ட தக்க நிபுணரிடம் செல்ல


> கணவரின் வருமானத்தை அறிந்துகொண்டு அதற்குள் அடங்குமாறு குடும்பத்தின் செலவுகளைச் சிக்கனப்படுத்தும் குடும்பத் தலைவியே மிகவும் போற்றத் தக்கவள்.
>
> பாலிய நண்பர்களாகிய கிருஷ்ண பரமாத்மாவும், குசேலரும் பல ஆண்டுகளுக்குப் பிறகு சந்தித்தபோது, கிருஷ்ணர் குசேலரிடம் கேட்ட முதல் கேள்வியே, ''வரவு அறிந்து செலவு செய்யும் மனையாளோ உம் மனைவி?'' என்பது தான். இக்கருத்து குசேலோபாக்கியானத்தில் காணப்படுகிறது.
>
> அந்தக் காலத்திலேயே குசேலரைப் பார்த்து கிருஷ்ணர் இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறார் என்றால் இக்காலத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. கணவர் வரவு அறிந்து செலவு செய்யும் மனைவி அமைந்து விட்டால் அதைவிட மகிழ்ச்சியான குடும்பம் வேறில்லை.
>
> -வாரியார் அவர்கள் கூறக்கேட்டது வி. உஷா

வேண்டும். தக்க நிபுணர் என்று சொல்வதற்குக் காரணம் இருக்கிறது. சில பெற்றோர்கள் காது கேளாத குழந்தைகளை முழுமையாகக் காது வைத்தியம் பயிலாத டாக்டரிடம் கொண்டு செல்வார்கள். அவர் சொல்வார், 'இது சிறு குழந்தை. எட்டு வயது ஆன பின் பேச ஆரம்பிக்கலாம். ஆகையால் இப்போது ஒன்றும் செய்ய வேண்டாம். சும்மா இருங்கள் கவலை வேண்டாம்' என்று. அப்படிக் கூறுபவர் பாதி வைத்தியர்தான். தற்கால முறைகளை அறியாதவர் மட்டுமல்ல—அறிந்து கொள்ள விரும்பாதவரும் கூட. அவர்களைப் போன்ற சகாக்களால் ஏற்பட்டுள்ளகெடுதல் எண்ணற்றவை.

காது கேட்கவில்லை என்று கண்டு பிடிக்கப்பட்ட உடனேயே பயிற்சி ஆரம்பிக்கப்பட வேண்டும். இரண்டு காதுக்கும் பொருத்தக் கூடிய காது கேட்கும் கருவிகள் பூட்டி சாதாரண குழந்தைகளை வளர்ப்பது போல்

எங்களது புதுமையான
"முக்கனி" "LOHT"
சேமிப்பில் முதலீடு
செய்வது என்பது நீங்கள்
கணக்கிட்டதை விடவும்,
கவலையற்ற பாதுகாப்
பான ஒய்வு காலத்திற்கு
பொறுப்பான
முன்யோசனை
என்றே
பொருள்.

இத் திட்டத்தின் கீழ் 120
மாதங்களுக்கு தொடர்
ந்து ரூ. 100/- செலுத்தி
வந்தால், அடுத்த 120
மாதங்களுக்கு
மாதா மாதம் ரூ. 268.50
(ஒய்வூதியம் போல்)
பெறலாம்.



விவரங்களுக்கு :
தமிழகம் முழுவதிலுமுள்ள, மற்றும்
திருவனந்தபுரம், ஹைதராபாத்
கிளைகளை அணுகுங்கள்.

பாங்க் ஆப் தமிழ்நாடு லிட்.,
(ஒரு ஷெட்யூல்ட் பாங்க், ஸ்தாபிதம் 1903)
62, கீழரத வீதி, திருநெல்வேலி டவுன்.

பாரம்பரியம் மிகுந்த அணுகுமுறைகளும்
முகம் சிணுங்காத சேவையும்
அபூர்வமான முறையில் இணைந்தது.

EP-BT-105-82

உங்களுக்காகவே நாங்கள்


வளர்க்க ஆரம்பிக்க வேண்டும். அதனுடன் பேசுவது பழகுவது எல்லாம் சாதாரணக் குழந்தையிடம் பயில்வது போல செய்ய வேண்டும். சென்னையைப் பொறுத்த வரை இரண்டரை வயதில் இருந்த பயிற்சி அளிக்கக்கூடிய பள்ளிகள் உள்ளன.

சில காது கேளாத குழந்தைகளின் பெற்றோர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம். வைத்தியர்களை அணுகிப் பார்க்க வரும்போதே கண் கலங்கி ஏதோ பாவம் செய்தவர்கள் போல வருவார்கள். இந்த நிலைமை குழந்தைகளின் முன்னேற்றத்துக்கு உகந்தது அல்ல. பெற்றோர்களே குழந்தைக்குத் தன்னம்பிக்கையை ஊட்டி வெற்றிகரமான மனிதனாகத் தன் குழந்தையை வளர்க்க வேண்டும். இவர்கள் கலங்குவதால் குழந்தைக்கும் தாழ்வு மனப்பான்மை ஏற்படும்.

இப்படிப்பட்ட பெற்றோர்களிடம் பல எண்ணங்கள் உண்டு. 'காதுக்கு ஆபரேஷன் செய்து குணப்படுத்த முடியுமா' என்று கேட்பார்கள். காது கேட்க வைக்கும் ஆபரேஷன் சிறுவர்களுக்குச் செய்வதில்லை. ''உன்நாக்கில் ஆபரேஷன் செய்து கேட்க வையுங்கள்'' என்பார்கள். முன்னர் சொன்னது போல் குழந்தை பேசாமல் இருப்பது காது கேளாததால்தான் என்பது அவர்களுக்குத் தெரியாது. இன்னும் சிலர், ''டாக்டர், காதில் சிலர் ஊதிக் காது கேட்க வைக்கிறார்களாமே அதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன'' என்று கேட்பதுண்டு.

காது கேட்கும் தன்மை இழந்த குழந்தைகளை முன்னேற்ற பெற்றோர்கள் குறுக்கு வழி தேடக் கூடாது. தமது விடாமுயற்சியால் நவீன கல்விப் பயிற்சி முறைகளைப் பெற்று மற்ற குழந்தைகளின் நிலைமைக்குக் கொண்டு வர முயல வேண்டும். மற்றவர்களை நம்பியோ மந்திரம், தந்திரத்தை அணுகியோ, தக்க நேரத்தில் தமது கடமைகளை மறந்தவர்கள் ஆனால் வாழ்வு முடியும்வரை மனக் கவலை அடைவது நிச்சயம். தம் குழந்தையின் வாழ்க்கையை இவர்கள் கெடுத்தவர்கள் ஆவார்கள்.

பிறவியிலேயே காது கேளாதவர்களை விட்டு விட்டு, காது கேட்டுச் சில ஆண்டுகளுக்குப் பின் கேட்காமல் போனவர்களைக் கவனிப்போம். இவர்களைக் கேட்க வைப்பது சுலபம். எந்த அளவுக்குக் காது கேட்கவில்லை என்பதை Audio meter என்ற கருவியின் மூலம் கண்டு பிடித்து அந்த அளவுக்கு ஏற்ற காது கேட்கும் கருவியை அணிவித்தால் நன்றாகக் காது கேட்கும். இரண சிகிச்சை மூலம் சிலர் பயனடைய கூடும். ஆக மொத்தம் பிறவியில் கேளாதவர்களைவிட இவர்களைக் கேட்க வைப்பது சுலபம். (தொடரும்)



வேண்டுமடி எப்போதும் விடுதலை...

வையவன்

"ரோஜா என்ன சொல்கிறது?''

மைசூர் சென்ட்ரல் இன்ஸ்டிடியூட் ஆஃப் இண்டியன் லாங்வேஜஸ் கட்டிடத்தின் வெளியில் சிவப்பு மஞ்சள் ஊதா என்று வாரி இறைத்தாற்போல் பூத்திருந்த ரோஜாக்களில் கீர்த்தி நின்றிருந்தாள். அவள் முகத்தைப் பார்த்ததும் அதை ஒரு சிவப்பு ரோஜாவாக கிரீஷுக்குக் கற்பனை செய்யத் தோன்றியது.

''குட் மார்னிங்'' என்றான்.

அதற்குக் கீர்த்தி பதிலளித்தாள்.

''குட் மார்னிங்.''

''நான் ரோஜா சொன்னதைச் சொன்னேன்'' என்று விளக்கினான் கிரீஷ்.

''நானும் ரோஜாவுக்குத்தான் சொன்னேன்.''

கீர்த்தியின் புத்திகூர்மைக்காக அவன் சிரித்தான். அவன் சொன்ன பதிலுக்காக அவள் சிரித்தாள்.

''கவிஞர் இல்லையா... ரோஜா ஒங்க ளண்டே. வேறு என்ன சொல்லும்?''

''கவிஞன் காலையிலிருந்து பட்டினி.''

''ஸாரி... காலை கொஞ்சம் லேட்டாப் போச்சு. ஒரு ஃபோர்ட்டீன் பி பஸ்ஸை மிஸ் பண்ணிட்டேன். எதுக்காக நீங்கள் எனக்காக வெயிட் பண்ணணும்? போகட்டும்னு நினைச்சு நீங்க டிபன் பண்ண வேண்டியது தானே!''

கீர்த்தி படபடவென்று பொரிகிற மாதிரி வேகமாகப் பேசினாள். அவள் வேகமாகப் பேசும்போது கண்களும் உதடும் துடிப்பதை அவன் சுவாரஸ்யமாக வேடிக்கை பார்த்துவிட்டு நிதானமாகச் சொன்னான்.

''யுனிவர்ஸிடி கேண்டீன்லே ஒங்களோடு சாப்பிடற காலை டிபன் கூட ஒரு குட் மார்னிங்.''

அவள் முகம் பளிச்சிட்டது.

''நீங்க வெயிட் பண்ணிட்டிருப்பீங்கன்னு தெரிஞ்சுதான் நானும் சாப்பிடாம வந்திருக்கேன். வாங்க போகலாம்.''

அவர்கள் இருவரும் மெதுவாக நடக்கத் தொடங்கினார்கள்.

பரவியிருந்த மைசூர் வெயில் இன்னும் உறைக்க ஆரம்பிக்கவில்லை. ரோஜாவின் மீது நின்ற மாதிரி சுற்றிலும் வழி நெடுக விருந்த செடிகளின் மீது வைர மணி போன்று பனித் துளிகள் பிரகாசித்தன.

''இன்னிக்கு ஏன் லேட்னு நீங்க கேட்கவே இல்லியே?''

''சொல்லத் தோணினாச் சொல்லப் போறீங்க'' என்றான் கிரீஷ்.

காந்தி சென்டர் கடந்து மைசூர் யூனிவர்ஸிடி லைப்ரரி ரோடில் மெதுவாக இருவரும் நடந்தனர்.

''காலேல ரெண்டு அழகான விஷயம் நடந்தது.''

கீர்த்தி நிறுத்தினாள்.

''என்னென்ன?''

''தம்பி முரளியோட ரிசல்ட் பேப்பர்லே வந்தது. அடுத்து அப்பா என் டிவோர்ஸ் ஸூட் ஃபைல் பண்ண சாமராஜபுரத்தி லிருந்து வந்திருந்தார். ஏதோ கையெழுத்து வேணுமாம்.''

எலுமிச்சம்தோல் ஊறுகாய்

எலுமிச்சம்பழத்தைப் பிழிந்த பிறகு அதைநாலாகநறுக்கி உப்பை தூவி இட்லித் தட்டில் வைத்து குக்கரில் 10 நிமிடம் ஆவியில் (இட்லி மாதிரி) வைக்கவும். பிறகு எடுத்து காரப்பொடி பெருங் காயம் கடுகு தாளிக்கவும். திடீர் ஊறுகாய் இது. தோல் வெந்து விடுவதால் ருசியாக இருக்கும். உலர்த்தியும் வைத்துக் கொள்ள லாம்.

—ரோஜி

கிரீஷ் நடக்காது நின்றான்.

இரண்டடி முன்னே போன கீர்த்தி அவன் பின் தங்கியதைக் கண்டு நின்றாள்.

''ரிஸல்ட் என்ன ஆச்சு?''

''பெயில்.''

அவன் முகம் சாந்தமாக இருந்தது.

கீர்த்தி தன் தம்பி கோகுலின் என்ஜினீரிங் படிப்புக்காக மைசூரில் மூன்று ஆண்டுக ளாகத் தங்கியிருந்தாள். நஞ்சன்கூட்டிலிருக் கும் ஹோலி கிராஸ் பப்ளிக் ஸ்கூலில் அவள் ஓர் ஆசிரியை. அங்கே பணியாற்றும் ஆசிரி யர்கள் அங்கேயே பள்ளி ஹாஸ்டலில் தங்கி யாக வேண்டும். மதர் சுபீரியரிடம் கெஞ்சாக் குறையாக வேண்டி அந்த விதிக்கு விலக்கு வாங்கி ரயிலிலும் பஸ்ஸிலும் இத்தனை காலம் மூட்டையாக நசுங்கி போய் வந்து கொண்டிருந்தாள். அந்தச் சிரமம், கவலே அக்கறை எல்லாம் அந்த ரிசல்டைக் கேட்டு எப்படி நொறுங்கியிருக்கும்!

''ஸாரி டு ஹியர் இட்.''

''ஒய் ஷுட் யூ... கோகுலே அதனாலே பாதிக்கப்படலியே.'' அவள் மெல்லிய புன் னகையில் ஒரு தாரிகை சோகம் இழை யோடிற்று. சட்டென்று மறைந்தது.

''ஈவிட்... எப்படி எடுத்துக்கிட்டார்?''

''கொஞ்ச நேரம் பேசாம உட்கார்ந் திருந்தான். மொகம் வெளுத்துப் போச்சு. காப்பி சாப்பிடறியான்னு கேட்டேன். ஊம் னான். காப்பி குடிச்சுட்டு கிரிக்கெட் பிராக் டிஸ்இருக்குன்னு வெளியே கிளம்பிட்டான்.''

கிரீஷ் ஒரு கோபத்தை அடக்கிக் கொள் வது அவன் புருவங்கள் நெறிந்து துடிப் பதில் தெரிந்தது. கீர்த்தி குறுகுறுவென்று ஒரு சுவாரஸ்யத்தோடு அதை வேடிக்கை பார்த்தான்.

''ஒங்களுக்குக் கோபம் வர்றது இல்லே?''

''கோபப்படாம என்ன பண்றது?''

''கோபப்பட்டு என்ன பண்றது?''

அவள் எவ்வளவு அமைதியாக அதை ஜீர ணித்துக் கொண்டாள் என்று கிரீஷ் புரிந்து கொண்டான்.

''டிவோர்ஸ் விஷயம்?'' என்று இழுத் தான்.

''அவரை நான் டிவோர்ஸ் பண்ண முடி யாது. அவர் வேணும்னு என்னை டிவோர்ஸ் பண்ணிக்கட்டும்னு அழுத்தம் திருத்தமாச் சொல்லி அனுப்பிச்சுட்டேன்.''

கிரீஷின் மனசில் தன்னை மீறி ஒரு சபாஷ் ஓசையின்றி எழுந்து மறைந்தது.

அறுகோண வடிவமான யூனிவர்ஸிடி கான்டீனுக்கு வெளியே வண்ண வண்ண உடைகளில் மேனி நிறங்களில் இளமையின் வசந்தோற்சவம் போன்று ஆண்களும் பெண் களும் சிரித்துப் பேசி, கைகோர்த்து கேண் டீன் வாசலில் கூடி நின்றனர்.

''இந்த மரம் எனக்கு ரொம்பப் பிடித் திருக்கிறது.''

''ம்ம்ம்...''

''இட்ஸ் எ ஸிம்பல் ஆஃப் லைஃப். இதை ரெண்டாவது முறை சொல்றேன்னு நினைக் கிறேன்.''

எத்தனை சுலபமாகத் தன் சொந்தத் துயர் களை மறந்துவிட்டு இவளுக்கு ஓர் அரச மரத்தை ரசிக்கத் தோன்றுகிறது!

கிரீஷ் அவளை ஒரு தனி மரியாதையோடு பார்த்தான்.

''ஐ அட்மையர் யூ.''

'சச்' என்று நாக்கில் ஒரு சிறு ஓசை எழுப்பி கீர்த்தி அதை ஆட்சேபித்தாள்.

எதிரே ஓர் இம்பாலா கார் வந்தது.

அவர்கள் இருவரையும் அது இரு திசை களுக்குப் பிரிப்பது போன்று அவர்கள் இடை வெளியை அகற்ற வைத்துவிட்டு அது சற்றே வேகம் குறைத்து இருவருக்கும் மத்தியில் நீந்திச் சென்றது.

செக்கச் செவேலென்று ஒரு முப்பது வயதுக்காரன் இறுகிய உதடுகளும் தடித்த பிரேம் போட்ட ஸ்பெக்ஸுமாக அதை 'ட்ரைவ்' செய்து கொண்டு வந்தான். அவன் கீர்த்தியை வெறித்துப் பார்த்துவிட்டு நகர்ந்தான்.

''ராஸ்கல்... இதுதானே ஆணவம்கறது!'' என்று கார் அகன்றதும் கிரீஷ் சொன்னான்.

''அவர்தான் என் கணவர்'' என்று கீர்த்தி அமைதியாகச் சொன்னாள்.

''சனிட்...'' என்று கிரீஷ் திரும்பி தூரத்தில் போகும் அந்தக் காரைப் பார்த்தான். அவனது அகன்ற தோள் மட்டும் தெரிந்தது.

அவனைத் திட்டியதற்கு ஸாரி என்று சொல்லத் தோன்றியது. ஆனால் சொல்லவில்லை.

2

'இன்று முரளியின் ரிஸல்ட் வந்தது. எதிர்பார்த்தது போலவே பெயில் ஆகிவிட்டான். அப்பா வந்து டைவர்ஸ் ஸூட் கொடுக்க வேண்டுமென்றார். மறுத்து விட்டேன். மனைவியை விலைக்கு வாங்கிய பொம்மை என்று நினைக்கின்ற ஆண் உலகத்தில் விடுதலை வாங்கிக் கொண்டு இனி நான் செய்யப் போவது என்ன? இன்னொரு விஷப் பரிட்சையா? இன்று யூனிவர்சிடி கான்வகேஷனுக்குப் போகும் வழியில் அவர் கார் என்னைக் கடந்து சென்றது.

நானும் கிரீஷும் இணைந்து சென்றதை கண்டு அவர் முகத்தில் துடித்த கோபத்தை அந்த சலவைக் கல் நெற்றி எனக்குக் காட்டிக் கொடுத்தது. ஆண்! என்ன விசித்திரமான பிறவி! தனக்காக எல்லாப் புறக்கணிப்புக்களையும் பொறுத்துக் கொண்டு ஒரு பெண் தவம் செய்து கொண்டிருக்க வேண்டும் என்று நினைக்கிற உணர்ச்சிக் கோளம்...'

டைரி எழுதிக் கொண்டிருந்த கீர்த்தி நிறுத்தினாள். வெளியே கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. முரளிதான். டைரியை மூடிவிட்டு எழுந்து போய்க் கதவைத் திறந்தாள்.

அன்று மாலை காலேஜ் விட்டு வந்ததிலிருந்து முரளியைக் கீர்த்தி பார்க்கவில்லை. இப்போது இரவு மணி பத்தாகியிருந்தது. எங்கே போய் வருகிறான்? சினிமாவுக்கா?

முரளியின் கண்கள் சிவந்திருந்தன.

முதல் பார்வையிலேயே கீர்த்தியின் மனசில் ஒரு சிவப்பு வெளிச்சம் எரிந்தது.

தலை குனிந்தவாறு அவளைக் கடந்து உள்ளே வரும்போது பழம் அழுகிய வாசனை. கீர்த்தி உடனே புரிந்து கொண்டாள். குடித்திருக்கிறான். கீழுதட்டை அவள் மெல்லக் கடித்துக் கொண்டாள்.

'ஃபெயில் ஆனதைத் தாங்க முடியவில்லையோ! இருந்தாலும் குடித்துவிட்டு என் முன்னால் நிற்க வேண்டும் என்று இவனுக்கு எப்படித் தோன்றுகிறது?'

அவன் காலைக் கழுவிக்கொண்டு வந்தான். கீர்த்தி சமையல் அறைக்குப் போய் சாப்பிடுவதற்காக மணையை எடுத்துப் போட்டாள்.

அவன் சமையல் அறைக்குள் வராமல் வெளியே நாற்காலியில் வந்து உட்கார்ந்தான்.

அவள் இரண்டு தட்டுக்களை எடுத்து வைக்கும் ஓசை அவனுக்குக் கேட்டது.

''எனக்குச் சாப்பாடு வேண்டாம்.''

''ஏன்?''

''பசிக்கலே.''

''பசிக்கலியா... சாப்பிட்டா ஒத்துக்காதா''

அவன் மௌனமாக இருந்தான்.

கீர்த்திக்குத் தனியே சாப்பிடப் பிடிக்கவில்லை. சாப்பிடவே வெறுப்பாக இருந்தது. காஸ் ஸ்டவ்வைப் பற்றவைத்துப் பால் காய்ச்சினாள். இரண்டு டம்ளர்களில் பாலை நிரப்பிக் கொண்டு மீதியைத் தயிர் தோய வைப்பதற்காக சூடு ஆறவிட்டு பால் டம்ளர்களை வெளியே கொண்டு வந்தாள்.

> ஓமப்பொடி செய்யும் போது மிக்ஸியில் கொஞ்சமாக ஓமம் நைஸாக அரைக்க முடியாது 3 அவுன்ஸ் ஓமவாட்டரை வாங்கி அரை கிலோ கடலை மாவுக்கு மூன்று சுடுக்கு மூன்று அவுன்ஸாக பிரித்து விட்டுப் பிசைந்து பிழியலாம். கண்ணிலும் அடைத்துக்கொள்ளாமல் வேஸ்டும் ஆகாமல் பிழிய முடியும். வாசனை கமகமவென்று இருக்கும்.
>
> -சாரதா ராமசுவாமி

''இந்தா...''

அவன் பால் டம்ளரை ஏறிட்டுப் பார்த்தான். வாங்கவில்லை.

''வேண்டாம்.''

''ஏன் போதை தெளிஞ்சுடுமோ?''

சவுக்கால் அடிபட்ட மாதிரி அவன் டம்ளரை வாங்கிக் கொண்டான்.

அவள் எதிரிலிருந்த கட்டிலின் மீது போய் உட்கார்ந்தாள்.

''குடி..''

பிரம்பை வைத்துக் கொண்டு நிற்கிற வாத்தியாரம்மாவின் குரல் மாதிரி அவள் கட்டளை கணீரென்று வந்தது. முரளி பேசாமல் எழுந்து போய் உள்ளேயிருந்து பாலை ஆற்றுவதற்காக ஒரு டம்ளர் கொண்டு வந்தான். நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஆற்றினான். அவளை நிமிர்ந்து பார்க்கவே இல்லை. பாலைக் குடித்துவிட்டு டம்ளரை மேஜை மேல் வைத்தான்.

''எத்தனை நாளா இப்படி?''

''......''

''இன்னிக்குத்தான் ஆரம்பமா?''

''......''

''ரொம்பப் பெருமையான ஆரம்பம். சாமராஜபுரம் வாசுதேவ ஆச்சார்யார் பிள்ளை, மானம் பொறுக்காமெ காவேரியிலே பிராணனை விட்ட நாகலட்சுமியின் பையன். என்ஜினீயரிங் பரிட்சையிலே பெயில் ஆனதுக்காகக் குடிக்காம இருக்கலாமா...''

அவன் கையிலிருந்த பால் டம்ளரைக் கட்டில் ஓரத்தில் வைத்து விட்டான்.

அவன் நாற்காலியை விட்டு எழுந்துகொண்டான்.

''என்டா எழுந்துட்டே?''

''போதும்.''

''என்னது?''

''.....''

''அவ்வளவு வருத்தப்படறவன் என் குடிச்சே? நீ ஃபெயில் ஆனதை செலிப்ரேட் பண்ணணும்னு...''

அவன் மௌனமாக இருந்தான்.

''குடிச்சிட்டு என்னை அவமதிக்கிற மாதிரி என் முன்னால வரணும்னு உனக்கு எப்படித் தோணித்து?''

''அக்கா . யார் அந்த கிரீஷ்?''

கீர்த்தியை யாரோ முதுகில் அறைந்த மாதிரி இருந்தது.

''நீ என் அவரோட சுத்தறே?''

இதுவரை அவளுக்கு அடங்கிய தம்பியாக இருந்த முரளி இப்போது திடீரென்று சரமசமாகி அவளைக் கேள்வி கேட்கிற ஆளாக மாறிவிட்டது கீர்த்திக்கு வியப்பாக இருந்தது. தப்புச் செய்தவர்கள் வேறு எதன் மீதோ யார் மீதோ குற்றம்சுமத்துகிற சிறுபிள்ளை முயற்சி மாதிரி தோன்றிற்று. அடுத்து அவன் மீது வருத்தமாக வந்தது. இத்தனை வருஷங்கள் இப்படி இவனோடு ஒன்றியிருந்து கூடப் பிறந்து இன்னும் கூட தன்னைப் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறானே... இவன் என்ன தம்பி!

''யார் சொன்னது?''

''என் ஃப்ரெண்ட் பார்த்தானும் கண்ணுக்கு நேரே.''

''உடனே நீ நம்பிட்டியாக்கும்.''

''.....''

''நாளைக்கு சாயந்திரம் அவரை இங்கே அழைத்து வருறேன். யூ மீட் ஹிம். தெரிஞ்சுப்பே.''



''ஐ டோண்ட் வாண்ட் டு மீட் ஹிம்.''

''நோ... நீ கட்டாயம் அவரை மீட் பண்ணணும். அதோட ஒன் ஃப்ரெண்ட் இருக்கான் பாரு... ஒங்கிட்டச் சொன்னவன் அவனையும் கூட்டிக்கிட்டு வா. ரெண்டு பேருமா அவரை மீட் பண்ணுவீங்க.''

அவன் தலை குனிந்து நின்றான்.

''ஃபூல். இருபத்திரண்டு வருஷமா இந்த அக்கா கூடப் பழகறியே... நான் எப்படிப் பட்டவள்னு புரிஞ்சுக்க முடியலையே.''

''வந்து... நான்...அவர் மாமாவினுடைய குமாஸ்தா ரங்கையா வந்து...''

''ஒன்னை மீட் பண்ணுறாரா?''

அவன் தலையாட்டினான்.

கீர்த்தியின் கணவன் சந்திரமௌலியின் கப்பல் மார்க் ஊதுபத்தி கம்பெனியின் முக்கிய காரியஸ்தர் ரங்கையா. அவருக்குத் தான் கிரீஷோடு சேர்ந்து சுற்றுவதாக யார் சொல்லி யிருப்பார்கள்?

அவனுக்கு இன்று சந்திரமௌலியின் கார் தன்னைக் கடந்து சென்றது பளிச்சென்று பொறி தட்டிற்று. அவரே சொல்லியிருப்பாரா? அந்தச் சந்தேகமே அவனைக் கூனிக் குறுக வைத்தது.

''ப்ரெண்டுன்னு சொன்னியே?''


''வந்து... ப்ரெண்டுக்கு அவர் அப்பா.''

''ம்ஹூம்...''

அழுவதா... கதறுவதா... அலறுவதா... ஒன்றும் வேண்டாம். ஜஸ்ட் ஸ்மைல் அட் இட். மனிதனால் எவரெஸ்ட் உச்சிக்கும் போகமுடியும். அதல பாதாளத்தில் சேற்றிலே விழுந்து புரளவும் முடியும்.

''முரளி'' என்று சின்னப் பையனைக் கூப்பிடுகிற மாதிரி அழைத்தாள் கீர்த்தி.

அவன் ஒரு முறை அவள் கண்களின் தெளிவை அதில் மின்னிய உண்மையின் உறுதியை எதிர்கொண்டு பார்த்துவிட்டுத் தலை குனிந்தான்.



''இப்பச் சொல்றேன் கேட்டுக்க... அந்த கிரீஷும் நானும் ரீஜனல் காலேஜ்லே ஒரே மெயின் எடுத்திருக்கோம். அவர் என்னுடைய உண்மையான நண்பர். ஒனக்கு எத்தனை கேர்ள் ஃப்ரெண்ட்ஸ் இருக்காங்க... அதையெல்லாம் வச்சு ஒன்னை நான் சந்தேகப்பட்டிருக்கேனா?''

''நான் சந்தேகப்படலே.''

''பிறத்தியார் அபவாதத்தை நம்பிட்டே''

அவன் குற்றம் சாட்டுவது போலச் சொன்னான்.

''ரங்கையாவே சொன்னார். அவர் 'ஸன்'னும் சொன்னான்.''

''லெட் மீ கிவ் யூ எ ஷாக்கிங் நியூஸ். என் மதிப்புக்குரிய கணவரே இன்னிக்கு நேரிலே பார்த்தார். அவருடைய அட்வைஸின் பேரிலே ரங்கையா மறைமுகமா என்னை 'வார்ன்' பண்ணியிருப்பார்.''

முரளிக்குப் போதை தெளிந்து விட்டதோ என்னவோ இந்தக் குற்றச்சாட்டின் வேர் எங்கிருந்து தொடங்கியது என்று கேள்விப்பட்டதும் அவனுக்குத் தன் மீதே அருவருப்பாக இருந்தது.

''அக்கா...'' என்று ஏதோ சமாதானம் சொல்ல வந்தவன் போன்று இழுத்தான் முரளி. அவன் வருந்த ஆரம்பித்துவிட்டான் என்று கீர்த்தி புரிந்து கொண்டாள்.

''சரி... நீ படுத்துக்கோ. ஒன் ப்ரெண்டை நீ அழைச்சுண்டு வர்றியோ இல்லையோ...

> அகத்திக்கீரை வயிற்றுப் புண்ணை அகற்றும் கீரை! வாய் துர்நாற்றத்தை அகற்றும் கீரை! வயிற்றில் உள்ள பூச்சிகளை அழிக்கும் கீரை! மாதம் இருமுறையாவது அகத்திக் கீரையை உணவுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றுதான் பெரியவர்கள் ஆதி காலத்திலிருந்து துவாதசியன்று அகத்திக் கீரையைத் தேடிப் பிடித்து உண்பார்கள் போலும்!
>
> -ரமாமணி பார்த்தசாரதி

அதைச் சொல்லிவிட்டு சூடு தணிந்திருந்த பாலை ஒரே மூச்சில் குடித்து அவனுக்குக் கட்டிலைக் காலி செய்தவாறு உள்ளே போனாள்.

பாத்திரத்தில் சூடு தணிந்திருந்த பாலுக்குப் புரைகுத்தி ஜாடியில் ஊற்றி வைத்துவிட்டு அவள் கட்டிலைக் கடந்து உள்ளே போனாள்.

உள்ளறையில் டேபிள் லாம்பைப் போட்டுக்கொண்டு அவள் விளக்கை அணைத்தாள். அந்தப் போர்ஷன் கதவை முரளி தாளிட்டுவிட்டுப் படுக்கையில் வந்து விழுவது கேட்டது. பாதியில் விட்டு வைத்திருந்த அன்றைய டைரியைப் பூர்த்தி செய்வதற்காக அவள் உட்கார்ந்தாள்.

முன்பு எழுதியவற்றைப் படிக்கும்போது அவளுக்குப் புன்னகை வந்தது. பெண் என்ற வார்த்தையைப் பார்த்தாள். மீண்டும் எழுதத் தொடங்கினாள்.

எதிலிருந்தோ நான் தப்பி ஓடுகிறேனா?

எஸ்... என்னிடமிருந்து நான் தப்பி ஓடுகிறேன். எல்லோருமே தப்பி ஓடுகிறார்கள். முரளி இன்று நான் கிரீஷோடு சேர்ந்து சுற்றுவதாக ரங்கையாவும் அவர் பிள்ளையும் சொல்கிறார்கள் என்றான். இன்று முதல்முறையாக அவன் குடித்துவிட்டு வந்திருந்தான்.

அவள் எழுதுவதை நிறுத்தினாள்.

வெளியே விசும்பல் ஒலி கேட்டது.

முரளி அழுது கொண்டிருந்தான். தேம்பித் தேம்பி...

3

''கீர்த்தி... கீர்த்தி... ஏன் இன்னும் தூங்கிண்டிருக்கே.''

காதருகில் வந்து யாரோ... யாரோ அல்ல அம்மா நாகலட்சுமிதான் கத்தினாள். பளிச்சென்று கீர்த்தியின் தூக்கம் கலைந்தது.

விழித்துப் பார்த்தபோது சற்றே ஒருக்களித்திருந்த ஜன்னல் வழியே வாசலில் நிலா வெளிச்சம் தெரிந்தது. இன்னும் விடியவில்லை. மணி என்ன?

அவளுக்கு எழுந்து மணி பார்க்கத் தோன்றவில்லை. எத்தனையானால் என்ன? இன்னும் விடியவில்லை. வெளியே பால் டெப்போவுக்கு ஓட்டிச் செல்லப்படும் எருமைகளின் காலடி ஓசை ஒரு படை அணிவகுப்பு மாதிரி ஓரிரு நிமிஷத்துக்கு விடாது கேட்டது.

'மகிஷங்கள்... மகிஷாசுரர்கள்... மகிஷாசூராகிய இந்த மைசூர். அவளுக்குச் சட்டென்று சாமுண்டீஸ்வரி மலையில் உள்ள அம்மன் விக்கிரகமே நினைவுக்கு வந்தது.

''அசப்பிலே பார்த்தா நாகலட்சுமி சாமுண்டீஸ்வரி விக்கிரகம் மாதிரியே இல்லே' சின்ன வயசில் வீட்டுக்கு விருந்தாளியாக வந்த ஒரு சுமங்கலி, அம்மாவைப் பார்த்துச் சொன்னது நிஜமென்று இந்தப் பின்னிரவில் பல வருஷங்களுக்கு அப்பால் நினைவு வந்தது.

'மனசு எனும் ரகசியப் பேழையில் என்னென்னவெல்லாம் சேமித்து விடுகிறது. அப்புறம் சேமிப்புக்களை எடுத்து வேடிக்கை பார்க்கும் சிறுமி மாதிரி எப்படியெல்லாம் புரட்டிப் பார்க்கிறது!

'அம்மா தான் கனவில் வந்தாள். ஏன் என்னை எழுப்பினாள்? சாமுண்டீஸ்வரியையும் மகிஷாசூரனையும் இப்படி நினைப்பதற்காகவா?

'யார் மகிஷாசுரன்? தன் கணவர் சந்திரமௌளியா? இல்லே... ரங்கையாவா... ச்சீ... அரக்கனாக இருப்பதற்குக் கூட ஒரு மாட்சிமை வேண்டும். இவர்கள் பாவம். சாமுண்டி யார்? நானா... ஐயோ பாவம். அம்மாவா... இருக்கலாம்... எனக்குத் தெரியாது.

அவள் படுக்கையில் தலையையும் முதுகையும் மட்டும் சற்றே உயர்த்தியவாறு மார்பு வரை போர்த்திக் கொண்டு யோசித்தாள்.



சௌத் இந்தியா கார்ப்பொரேஷன் (ஏஜென்ஸீஸ்) லிட். சென்னை, கோயம்புத்தூர், மதுரை திருச்சிராப்பள்ளி, செகந்திராபாத், விஜயவாடா, விசாகப்பட்டினம், பெங்களூர், மங்களூர், எர்ணாகுளம் ஆகிய நகரங்களுக்கு விநியோகஸ்தர்கள்.

சாமராஜபுரத்தில் காவிரி ஓடுகிறது. கரையில் ஒரு சிவன் கோயில். பிரகாரச் சுவரிலிருந்து ஒரு படித்துறை தயங்கித் தயங்கித் தவழ்ந்து இறங்குகிறது. கரையிலே வந்து நிற்கும் பெரிய பெரிய மீன்கள். மூன்றடி நாலடி உயரத்துக்குக் கொழுத்து வளர்ந்த மீன்கள். கோயிலுக்கு வருவோர் அந்த மீனுக்காகப் பிரசாதம் கொண்டு வருவார்கள். அவற்றைப் பிடிக்க யாருக்கும் அனுமதி இல்லை. அவை சிவன் சொத்து.

கீர்த்தி சிறு குழந்தையாக இருக்கும்போதிலிருந்து அவற்றைப் பார்த்து வருகிறாள். பௌர்ணமிகளில் நாகலட்சுமி கீர்த்தியையும் முரளியையும் கோயிலுக்கு அழைத்து வருவாள். நைவேத்தியம் பண்ணிய சித்ரான்னத்தில் ஒரு பங்கை அவர்கள் கையில் கொடுத்து மீன்களுக்கு வீசி எறியச் சொல்வாள்.

மீன்கள் பௌர்ணமி நிலவில் காவிரியில் ஜலக் கிரீடை செய்ய வந்த மச்ச கன்னிகைகள் போலத் திரளாக ஜொலித்துக் கொண்டு அந்த நைவேத்தியங்களைத் தின்ன வரும்.

அம்மாவுக்கு சிவ பக்தி அதிகம்.

அவள் நாள் தப்பாமல் கோவிலுக்கு வந்தாள்.

வரும்போது வெறுங் கையோடு வந்து விட்டால் அவள் மனசு பரிதவிக்கும். நதிக் கரையில் காத்திருக்கும் குழந்தைகள் போல வாயைக் குவித்துக் குவித்து மீன்கள் கூட்டம் கூடுவது அவள் மனசைத் துளைத்து விடும். அவள் எப்போதும் பொரியாவது பிடிக் கடலையாவது இல்லாமல் கோவிலுக்கு வரமாட்டாள்.

கீர்த்திக்குப் பத்து வயது வரை அந்தக் கோவிலுக்கு அம்மாவுடன் வந்து போன அனுபவங்கள் மனசில் சிற்பம் செதுக்கியது மாதிரி நினைவிருக்கிறது.

அப்புறம் ஒரு நாள் அவளது அம்மா நாகலட்சுமி அதே படித்துறையில் குதித்து உயிரை விட்டாள். ஒரு மைல் தொலைவில் மறுநாள் அவள் உடல் கரை ஒதுங்கியிருந்தது உடம்பெல்லாம் மீன்கள் கொத்தியிருந்தன. இரண்டு நிமிஷம்தான் கீர்த்தி அந்தக் கோரத்தைப் பார்த்திருப்பாள். யாரோ அவளை அதற்கு மேல் பார்க்க விடாது இழுத்துக்கொண்டு போய்விட்டனர்.

பின்பு அவள் மட்டும் தன்னந் தனியாக எத்தனையோ முறை வந்து கடைசிப் படியில் காலைச் சில்லென்று தழுவும் காவிரியைப் பார்த்துக் கொண்டே மணிக் கணக்காக உட்கார்ந்திருக்கிறாள். அப்போதும் வாயைக் குவித்தவாறே மீன்கள் வந்தன. அவளுக்கு ஆரம்பத்தில் அவற்றின் மீது கோபம் கோபமாக வந்தது. ஓடும் காவிரியில் அவளது சூடான கண்ணீர் கலந்து கரைந்தது.

கீர்த்திக்குப் பதினொரு வயதானபோது அவளையும் முரளியையும் பராமரிக்க ஒரு சித்தி வந்து சேர்ந்தாள். அவள் கண்களில் எப்போதும் மை வைத்துக் கொள்வாள். அவள் வந்த பின்புதான் அம்மா ஏன் ஆற்றிலே விழுந்து விட்டாள் என்ற விவரம் புரிய வந்தது.

''ஓடுகாலி பெத்த பிள்ளைகளுக்கு ஓடுகாலி புத்திதானே இருக்கும்'' அந்த மயக்கும் பார்வை கொண்ட சித்தி சுலோசனா அவர்களை அடிக்கும்போதெல்லாம் அந்த வார்த்தைகளைத்தான் பயன்படுத்தினாள். பழங்காலத்துச் சிற்றன்னை கதைகளிலே கேள்விப்பட்ட 'டிபிகல் சிற்றன்னை' மாதிரியே அவளும் இருந்தாள்.

மனம் ஒரு பேழையல்ல. அது லட்சோப லட்சம் பக்கங்கள் கொண்ட ஒரு பெரிய ஆல்பம். ஒவ்வொரு மனுஷ ஜீவனும் ஓர் ஆல்பம். அதிலே எத்தனை சித்திரங்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன! ஆனால் கீர்த்தியைப் பொறுத்தவரையில் சாமராஜபுர வாழ்க்கையில் நடந்த பல சம்பவச் சித்திரங்களின் முத்தாய்ப்பாக மீன்கள் மேயும் அந்தப் படித்துறை வந்துவிடுகிறது.

கீர்த்தி நஞ்சன்கூடு ஹோலி க்ராஸ் பப்ளிக் ஸ்கூலில் நியமன உத்தரவு கிடைத்தபோது அவளது சிற்றன்னை காலமானாள். பத்து வருஷம் அப்பாவை அவள் பாடாய்ப் படுத்தி அவரை உறிஞ்சிக் குடித்துவிட்டு கடைசியில் அவள் எலும்பும் தோலுமாகி அஸ்தமித்துச் சாம்பலானாள்.

தலைமுடி பளபளப்பாகவும் மிருதுவாகவும் இருக்க தலைக்கு ஷாம்பு தேய்த்துக் குளித்த பின் கடைசிச் சொம்பு நீரைத் தலையில் ஊற்றிக் கொள்ளும்போது அந்நீருடன் சிறிதளவு ஆலிவ் எண்ணெயைக் கலந்து ஊற்றவும். இதனால் தலைமுடி மிகவும் பளபளப்பாக ஆவதோடு தலைமுடியில் சிக்கு ஏற்படாமலும் தடுக்கும்.

-கீதாபத்மா

இரண்டாவது முறையாக ஒரு மனைவி தவறியதற்கு அப்பா குலுங்கிக் குலுங்கி அழுதார்.

அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது இவ்வளவு சீக்கிரம் செத்துப் போவோம் என்று தெரிந்திருந்தால் அவள் இவ்வளவு அதிகாரம் செலுத்தி வெறுத்துப் பொரிந்திருக்க மாட்டாளோ...

அவளுக்கு யார்மீது வெறுப்பு? கோயில் குருக்களோடு உறவு வைத்திருந்தாள் என்று சொந்தப் புருஷனாலேயே குற்றம் சாட்டப்பட்ட மூத்தாள் மீதா... குற்றம் சாட்டிய அவர்மீதா... அந்த இடத்தை நிரப்ப வந்த தன் தலைவிதி மீதா... எப்படியோ அப்பா அம்மாவை ஆட்டிப் படைத்ததற்கு இவள் அவரை ஆட்டிப் படைத்து விட்டாள்.

எல்லாத் துக்கமும் எல்லா வெறுப்பும் கண்ணீரில் கரைந்து விடுகின்றன. சித்தி சுலோசனா மீதிருந்த வெறுப்பும் அன்றோடு கரைந்து போயிற்று.

நஞ்சான்கூடு ஹோலி க்ராஸ் பப்ளிக் ஸ்கூலின் மதர் சுபீரியர் கடுகளவும் வெறுப்பு இல்லாதவள். மாம்பழம் மாதிரி குண்டு முகம். எப்போதும் பிரகாசமான ஒரு ரோஜாப் புன்னகை.

பப்ளிக் ஸ்கூலுக்கு ஒரு நாள் வந்து, ''அப்பா உன்னை இரண்டு நாள் லீவு போட்டு விட்டுக் கையோடு அழைத்து வரச் சொன்னார்'' என்றான் முரளி.

காரணம் சொல்லவில்லை. அவள் சாமராஜபுரம் புறப்பட்டுப் போனாள்.

4

சென்ட்ரல் இன்ஸ்டிடியூட் ஆஃப் இண்டியன் லாங்வேஜஸ் கட்டிடத்துக்கு எதிரில் ஒரு காந்தி மண்டபம். மாஞ்சோலை சூழ்ந்த ஓர் அமைதி. விக்கிரகம் எதுவுமில்லாத ஒரு பிரார்த்தனைக்கூடத்தின் படிக்கட்டில் கிரீஷும் கீர்த்தியும் உட்கார்ந்திருந்தனர்.

> **சரியான தாம்பூலம்**
>
> ஐந்து வெற்றிலை, ஒரு பாக்கு, கோஷ்டம் பச்சைக் கற்பூரம், மூன்று தக்கோலம், கிராம்பு சிறிது சாதிக்காய், சிறிது சுண்ணாம்பு ஆகியவை சேர்ந்ததுதான் சரியான தாம்பூலம்!
>
> துவர்ப்பு, உப்பு, கசப்பு முதலியவைகளைக் கொண்ட இத்தாம்பூலம், வாதத்தைக் கண்டித்து, கபத்தையும், கிருமிகளையும் போக்கும் தன்மையுடையது. மேலும் பற்களுக்கு உறுதி அளித்துத் தொண்டை நோய்களைப் போக்கி வாய் நாற்றத்தையும் நீக்கும்.
>
> -''வெற்றிலைச் செல்வம்'' என்ற புத்தகத்திலிருந்து - வி. உஷா

கிரீஷ் ஒரு நோட்டுகளை அவளிடம் நீட்டினான். அவள் வாங்கினாள்.

அது ஒரு கராத்தே கிளாஸ் ஆரம்ப நோட்டுகள்.

''பஸ் ஸ்டாண்டிலே எங்கிட்டக் கொடுத்தாங்க. இஃப் யூ லைக் டு ஜாய்ன்....''

அவள் சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறீங்க?''

''காந்தி மண்டபத்துக்குக் கிட்டே இதைக் கொடுத்துட்டு என்னைச் சேரச் சொல்றீங்களே!''

''தற்காப்புக்காகப் பெண்கள் போராடலாம்னு காந்திஜியே சொல்லியிருக்கார்.''

''என் தற்காப்புக்கு இந்த வயலன்ஸ் தேவையில்லே கிரீஷ் நீங்கள் கவி. வயலன்ஸை நம்பலாமா?''

''வயலன்ஸ்தான் இன்றைய கவிதை.''

''நீங்களும் அதை ஒப்புக்கிறீங்களா?''

''நான் ஒப்புக்கறது இருக்கட்டும். உலகம் பூரா கவிதை இப்போ ஒரே கோபமும் சாபமுமாக் கொந்தளிக்கிறது.''

''என் ஹஸ்பெண்டை நீங்க நேத்து பார்த்தீங்க இல்லே?''

''சொல்லுங்க.''

''அவருக்கு ஷூட்டிங் தெரியும். கராத்தே தெரியும். பாக்ஸிங் தெரியும். ஹார்ஸ்ரைடிங் தெரியும். சொந்தமா ரெண்டு குதிரை வச்சிருக்கார்.''

தேவையில்லாமல் அதைச் சொன்னமாதிரி கீர்த்தி சட்டென்று வாய் மூடிக் கொண்டாள்.

அவன் இதுவரை கீர்த்தியிடம் அவளது குடும்ப வாழ்க்கையைப் பற்றிக்கேட்டதில்லை. அவளும் சொன்னதில்லை. இன்று திடீரென்று ஆரம்பித்ததால் அவனுக்கே சற்று எல்லை மீறுவது போன்று தோன்றிற்று.

''பாதியிலே நிறுத்திட்டீங்க.''

''ம்ம்... இவ்வளவும் தெரிஞ்சுக்கிட்டதாலே என்ன ரிசல்ட் தெரியுமா?''

அவன் காத்திருந்தான்.

'' ஹி மிஸ்ட் ஒன் திங்... லவிங்...''

''யூ மீன்...?'' என்று அவன் திகைத்த போது அவள் தன்னைச் சுதாரித்துக்கொண்டாள்.

''ஆமா... நேசிக்க அவருக்குத் தெரியலே. அதான் எங்களுடைய முதலாவது ஸ்ட்ரகிள்''

''ஒங்க மேரேஜ் ஒரு லவ் மேரேஜ்னு நெனச்சேன்.''

கீர்த்தி புன்னகை பூத்தாள்.

''இல்லே. அவருக்கு ஜூலியஸ் சீஸராத்தான் இருக்கணும். ஹி கேம். ஹி ஸா அண்ட் ஹி காங்க்வர்ட் மீ.''

''புரியலே.''

''எங்க பப்ளிக் ஸ்கூலுக்கு ஏதோ டொனேஷன் கொடுக்க வந்திருக்கார். என்னைப் பார்த்தாராம். மூணாவது நாளே எங்க வீட்டிலே இருந்து தம்பி வந்துட்டான்.''

தன் கணவரைப் பற்றி ஒரு அந்நியனிடம் பேசுகிற உணர்வு அவளுக்குள் குறுக்கிட்டது. தன்னை வரம்பு மீறாமல் அடக்கிக் கொண்டாள்.

''தென் தி யூஷுவல் ஸ்டோரி. ஒரு மாசத்துலே அவர் மயக்கம் தீர்ந்துபோச்சு. அவரா விரும்பிச் செஞ்சுகிட்ட இந்தத் திருமணத்திலே ஏதோ பெரிய வரத்தை எனக்குக் கொடுத்துட்ட பகவான் மாதிரி தன்னை நெனச்சுட்டார். நெஜமா பகவானு மாதிரியிருந்தா நானும் பக்தையாய் இருப்பேனோ என்னவோ?''

கையிலிருந்த கராத்தே க்ளாஸ் நோட்டுகளை நான்காக மடித்து அவள் ஒரு கப்பல் செய்தாள். அந்தக் காகிதக் கப்பலை பிரார்த்தனைக் கூடத்தின் மொஸைக் தரையில் வைத்து விட்டு அதைப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டாள்.

''வாட் வாஸ் தி ட்ரபிள்... நான் ரொம்ப பர்ஸனல் கேள்வியைக் கேக்கறதா இருந்தா மன்னிக்கணும்.''

அவன் முகத்தில் விஷயம் தெரிந்து கொள்ளும் ஆர்வம் இல்லை. உண்மையான ஈடுபாடு இருந்தது.

கீர்த்தி அவன் முகத்தை ஒரு சித்திரத்தைப் பார்ப்பது போல அமைதியாகப் பார்த்தாள்.

''நேத்து ஒங்களையும் என்னையும் சேர்த்துப் பார்த்தவுடனே என்ன நெனச்சிருப்பார்னு ஒங்களுக்குத் தோணுது?''

கிரீஷ் இவளது குடும்ப அமைதியில்தான் குறுக்கே வந்து விட்டோமோ என்று நினைத்தான்.

''சந்தேகப்பட்டிருப்பாரா?''

அவள் உதடு சற்றுப் பிரிந்தது. துடித்தது. மீண்டும் சலனமின்றி மூடிற்று.

''அதுக்கு மேலே. சந்தேகம்னு கொஞ்சம் நம்பிக்கையும் சேர்ந்ததுதானே. ஆனு அவர் முடிவே கட்டியிருப்பார்.''

இப்போதுதான் அவள் வாழ்க்கையின் பின்னணியில் இருந்த பயங்கரம் அவனுக்குப் புரிந்தது.

''ஐ வாண்ட் டு மீட் ஹிம்.''

கீர்த்தி கிரீஷை ஏறிட்டுப் பார்த்தாள்.

5

கிரீஷை முரளி பார்க்க வேண்டுமென கீர்த்தி கூப்பிட்டிருந்தாள். அவனும் அன்று மாலை வரமுடியவில்லை. மறுநாள் ஞாயிற்றுக் கிழமை ஆதலால் காலையில் வருவதாகக் கீர்த்தியிடம் சொன்னான். சொன்னபடி வந்தான்.

சமையலறையில் கீர்த்தி மும்முரமாயிருந்தாள். வாசல் நடையில் படிக்கட்டின் மீது உட்கார்ந்து நியூஸ் பேப்பர் படித்துக் கொண்டிருந்தான் முரளி.

''அக்கா'' என்று கிரீஷைப் பார்த்துவிட்டு உள்ளே திரும்பிக் குரல் கொடுத்தான் முரளி.

கீர்த்தி வெளியே வந்தாள். அறிமுகம் செய்து வைத்தாள்.

''மீட் முரளி... என் தம்பி.... இவர் ஜே. கிரீஷ். மை கிளாஸ்மெட். கவிஞர்.''


ஒரு விரோத பாவத்துடன் இருந்த முரளியின் முகபாவம் கிரீஷின் சினேகபாவமான இந்த 'கார'த்திற்கு நான் எவ்வகையிலும் இலக்கு இல்லையே என்ற எளிமையான தோற்றத்தில் சற்று நெகிழ்ந்தது.

''க்ளாட் டு மீட் யூ.''

''நீங்க கிரிக்கெட் ப்ராக்டீஸ் பண்றீங்கன்னு கேள்விப்பட்டேன். பௌலரா... பாட்ஸ்மெனா?''

ஐந்தாறு வருஷம் முரளி கிரீஷுக்கு இளையவனாயிருப்பான். சற்றும் மிகையின்றி இயல்பாகக் கிரீஷ் கொடுத்த மரியாதையில் அவன் வெறுப்பு இன்னும் கொஞ்சம் இளகிற்று.

''பௌலர்,''



''ஸ்பின்?''

''ம்ம்ம்...''

சமீபத்திய டெஸ்ட் மாட்சைப் பற்றி கிரீஷ் பேச ஆரம்பித்தபோது பத்து நிமிஷத்தில் ஒரு நெருக்கத்தை முரளி உணர்ந்தான். கிரீஷின் சாமர்த்தியத்தைப் பார்த்து அவனுக்கு மட்டும் அறிவிக்கிற மாதிரி ஓர் அட்மிரேஷன் புன்னகை செய்துவிட்டு சமையலறைக்குப் போய் விட்டாள்.

பேச்சு கிரீப் ஜோஷியிடமிருந்து மெல்ல கபில்தேவுக்குப் போயிருந்தது. கிரீஷுக்கு இப்படி ஒரு கிரிக்கெட் டேஸ்ட் உண்டா என்று அவளுக்கு வியப்பாக இருந்தது. அன்று அவள் மைசூர் ஜூவுக்குப் போக சித்ரான்னம் தயாரித்துக் கொண்டிருந்தாள். நெய் சுத்தமாக இல்லாதது அப்போதுதான் தெரிந்தது.

கிரீஷ் காப்பி சாப்பிடும்போது முரளியை உள்ளே அழைத்தாள்.

''கொஞ்சம் நெய் வாங்கிட்டு வர்றியா?''

''சரி... பணமும் பாத்திரமும் கொண்டா. இன்னிக்கு ஞாயிற்றுக் கிழமை எந்த ஸ்டோர் தொறந்திருக்குமோ தெரியலே.''

ஒரு பையில் பாத்திரத்தைப் போட்டு ஓரமாக நிறுத்தியிருந்த சைக்கிளில் மாட்டினான் முரளி.

> ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள வந்த வெளி நாட்டு வீராங்கனைகள் இங்கே கிடைக்கும் சாந்துப் பொட்டுக்களைப் பார்த்து அசந்து விட்டார்கள். அதன்பின் அனைத்துப் பெண் வீராங்கனைகளும் அதிகாரிகளிடம் சாந்துப் பொட்டுக்களையே கேட்டு நச்சரித்தனராம்!
>
> —எஸ். ஜெயலக்ஷ்மி

''எங்கே முரளி ஷாப்பிங்கா?'' என்று கேட்டான் கிரீஷ்.

''நானும் வர்றேனே... ஐ லைக் எ ரூல். மைசூரிலே ஹாலிடே மார்னிங் ரொம்ப ப்ளெஸண்டா இருக்கும்.''

தான் தனியே இருப்பதைத் தவிர்ப்பதற்காக அவன் அப்படிச் சொல்கிறானோ என்று கீர்த்தி நினைத்தாள்.

''நீங்க வேண்டாம் ஸார். ஐ'ல் கம் விதின் டென் மினிட்ஸ்.''

''ரெண்டு பேருமாத்தான் போயிட்டு வருவோமே. அருமையா இருக்கே.''

அதற்கு மேல் அவனால் ஆட்சேபிக்க முடியவில்லை. எடுத்த சைக்கிளை மீண்டும் ஸ்டாண்ட் போட்டு நிறுத்தினான்.

களைந்த அரிசியைக் குக்கரில் போட்டுவிட்டு காய்கறிகளை அரியத் தொடங்கினாள்.

நேற்று கிரீஷ் சொன்னது எங்கிருந்தோ ... வந்த ஒரு சிட்டுக் குருவி கீச்சிட்ட போது கவனம் வந்தது.

''நான் ஒரு முயற்சி பண்றேனே.''

கீர்த்தி தன் ஒரு வருட குடும்ப வாழ்க்கையில் ஒரு சம்பவத்தை நினைத்துக்கொண்டாள்.

சந்திரமௌளி காலையில் குதிரைச் சவாரி கொஞ்ச நேரம் செய்து வருவான்.

அப்படி அவன் அன்று திரும்பி வந்தபோது கீர்த்தி தோட்டக்காரனுக்குப் புதிய ரோஜா பதியன்களை நடுவதைப் பற்றி யோசனை சொல்லியவாறு தோட்டத்தில் நின்றிருந்தாள். அவன் வீட்டுக்குப் போய் அவளைத் தேடிவிட்டு ஆத்திரத்தோடு அங்கே வந்தான்.

''ஒய் ஆர் யூ ஸ்டாண்டிங் ஹியர்? இன்னிக்கு சேம்பர் ஆஃப் காமர்ஸ் மீட்டிங் இருக்குன்னு நான் ஒங்கிட்டச் சொல்லலே?''

தோட்டக்காரன் எதிரில் இப்படி சிறுமியை அதட்டுகிற மாதிரி அவன் பேசியது அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''ப்ரீஃப் கேஸிலே ஃபைலெல்லாம் எடுத்து ரெடி பண்ணிட்டேனே.''

அவள் நயமாகப் பேசினாள்.

''ஒய் கான்ட் யூ வெயிட் ஃபார் மீ தேர்?''

''நீங்கதான் ஹார்ஸ் ரைடிங் போயிருக்கிங்களே. இந்த ரோஸஸ் நஞ்சன்கூட்லேருந்து மதர் சுபீரியர் கொடுத்தனுப்பிச்சாங்க.... இது ஸ்பெஷல் வெரைட்டி.''

அவளை மேலே தொடர விடாமல் ''ப்ளடி ரோஸஸ்... நான் சேம்பர் ஆஃப் காமர்ஸுக்குப் போகணுமேன்னு 'ரைடிங்கை ஹாப் பவர்லே கட் பண்ணிட்டு வர்றேன்... காலங்கார்த்தாலே வந்து தோட்டத்திலே நின்னுக்கிட்டிருக்கியே...''

கீர்த்திக்கு முகம் சிவந்தது. வேலைக்காரர்கள் எதிரில் அசம்பாவிதம் செய்துகொள்ள வேண்டாம் என்று இப்படி அவனுக்கு ஆங்காரம் வரும்போதெல்லாம் அவள் தணிந்து விடுவாள். அன்று அவளுக்கே தாங்கவில்லை.

மேற்கொண்டு அங்கே நிற்காமல் விடுவிடுவென்று வீட்டுக்குள் நடந்தாள்.

பின்தொடர்ந்துவந்த அவனுக்குக் கோபம் தலைக்கேறியிருந்தது.

''இது என் வீடு. அவங்க என் வேலைக்காரங்க. நீ என் மனைவி. ஐ ஆம் தி பாஸ் ஹியர்.''

''ஒங்களுக்கே சந்தேகமா இருக்கா? சொல்லிச் சொல்லிப் பார்த்துக்கறீங்களே!''

''ஷட் அப்.''

''டோண்ட் ட்ரீட் மீ லைக் தட்.'' அவள் கண்ணீர் பொங்கக் கூறினாள்.

''யூ டோண்ட் டிசர்வ் மோர் தன் தட்.''

அதற்கு மேல் அவள் பேசுவது வீண் என்று அப்போது உணர்ந்தாள்.

6

அந்த வாழ்க்கையில் அன்றாடம் எத்தனை விஷ வாசனை வீசுகின்ற அசுத்தங்கள் பூத்தன! ஒரு கருணையால் கடாட்சிக்கப்பட்டதாக ஒவ்வொரு நாளும் நேரடியாகவோ



Visit Temples
ALWAYS
WITH A PACKET OF
BKR
PERFUMERY
Scented Bathies
B.K.R. PERFUMERY, COIMBATORE-1
THALAMPOO
BATHIES
VARIETIES TO CHOOSE
● THALAMPOO ● MULLAIPOO
● ROJAPOO ● LAVENDER
● KADAMBAM ● SUGANDA PRIYA
● AGARBATHIS ●
TRADE BKR PERFUMERY MARK
MEANS
FLOWERY FRAGRANCE
PHONE: 25283
Mfrs:-
B·K·R·PERFUMERY
COIMBATORE-2.(S. INDIA)



உண்மைதான்...சிறந்த சேமியா என்றலே சிறந்த பாயசம்...

இதுவரை கண்டதில்லை
இது போன்ற சேமியா:

- தரம் மிகுந்த மைதா மாவினுல் தயாரிக்கப்பட்டது.
- சமைக்கும்போது பசைபோல ஒட்டிக்கொள்வதில்லை.
- நவீன இத்தாலிய எந்திரங்களினுல் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படுவது.
- சுவையான பாயசம் தயாரிக்க மிகவும் ஏற்றது.



இப்போது!

பிஸ்கட் தயாரிப்பாளர்கள் அளிக்கும் சிறந்த சேமியா

HTM-AFL-2855

மறைமுகமாகவோ ஒருத்திக்கு உணர்த்திக் கொண்டே இருந்தால் என்ன நேருமோ அது ஒரு நாள் நேர்ந்தது.

சந்திரமௌளியின் விஸ்கி கலப்பதற்கு ஐஸ் இல்லை. இரவு பதினொரு மணியாகிவிட்டதால் எந்தக் கடை திறந்திருக்கும்... யாரை அனுப்புவது என்று பிரச்னை தோன்றிவிட்டது. ஏதோ வேலையில் ஃப்ரிஜ்ஜில் தண்ணீர் ஊற்றி ஐஸ் ட்ரேயை நிரப்ப கீர்த்தி மறந்துவிட்டாள். அவனுக்குக் கோபம் வந்துவிட்டது.

''யூ டோன்ட் பிஹேவ் லைக் எ வய்ஃப்.''

அவனுக்காக ஒவ்வொரு பாராக ஐஸ் இருக்கிறதா என்று போன் செய்துகொண்டு நின்ற கீர்த்திக்கு அந்தச் சொற்கள் குத்தீட்டிகள் போன்று பாய்ந்தன. குபு குபுவென்று அவள் காதும் கன்னங்களும் சிவந்து சூடேறின.

''இப்ப அதுக்கு என்ன பண்ணலாம்?''

''இந்தத் திமிர்... இந்தத் திமிர்...'' என்று உறுமிக்கொண்டே அவன் எழுந்து வந்தான்.

துணிகளைப் பரீட்சிக்கும் முறை

(1) நல்ல பட்டாக இருந்தால் கைவிரலை அதன் மீது வைத்து அழுத்தினால் கை ரேகைகள் துணி மீது பதிந்ததும் சட்டென மறைந்து விடும். பட்டோடு வேறு வகை நூல்கள் கலந்திருந்தால் அந்த ரேகைகள் அப்படியே இருக்கும்.

(2) கம்பளியைப் பரிசோதிக்க அதன் நூலை எடுத்து இழையாக்கிக் கொள்ள வேண்டும். கம்பள ரோமங்கள் சுருண்டு இருக்கும். அதோடு கலந்த மற்ற நூல்கள் விறைப்பாக இருக்கும்.

(3) ஈரமான கையை லினன்மீது வைத்தால் லினன் உடனே கையில் உள்ள ஈரத்தை இழுத்துக்கொண்டு விடும். துணியின் மறுபுறம் ஈரப் பசையைக் காணலாம்.

—கிரிஜா சந்திரசேகர்

அதற்குள் மறு முனையில் ''ஹலோ'' என்று குரல் வந்தது.

''க்வாலிட்டி பார்?''

''எஸ்...''

''இங்கே 'ஹில் வியூ'விலேருந்து பேசறேன். ஐஸ் க்யூப்ஸ் கிடைக்குமா?''

''ஓ எஸ்.''

''வில் யூ ப்ளீஸ் ஸென்ட் இட் த்ரு எ மெஸஞ்சர்... ஆமாம்... ஆட்டோவிலே அனுப்புங்க. ஆட் தி ஃபேர் இன் தி பில்...''

அவள் போனை வைத்துவிட்டு விறைத்து நின்ற சந்திரமௌளியை வெறித்துப் பார்த்தாள்.

''ப்ரொஸீட்...'' என்றாள்.

அவன் அருகில் வந்து அவளை ஓங்கி அறைந்தான். கீர்த்தி எதிர்க்கவில்லை. தடுக்கவும் முயற்சிக்கவில்லை. மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டினாள்.

''இது பாக்கி இருக்கு.''

வெறி தலைக்கேறியிருந்த அவன் அவள் காட்டிய கன்னத்தின் மீதும் ஓங்கி ஓர் அறை விட்டான்.

''இப்ப திருப்தியாயிடுத்தா?''

''வாயைத் திறந்தா கொலை விழும்.''

''செத்துடுவோம்னு நான் பயப்படறதா நீங்க நினைக்கிறீங்களா?''

அதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் அவன் பற்களைக் கடித்தான்.

''உன்னைக் குப்பையிலேருந்து கோபுரத்துக்குக் கொண்டாந்தேன் பாரு... அதுக்கு இதுவும் சொல்வே.. இதுக்கு மேலேயும் சொல்வே.''

கீர்த்தி அந்தக் கணத்தில் தனது கடைசி இழைப் பொறுமையைக் கைவிட்டாள்.

''ஹூ ஆஸ்க்டு யூ... ஒங்களை யாரு என்னைக் கைதூக்கி விடச் சொல்லி கெஞ்சிக் கேட்டுக்கிட்டது?''

''யூ பிச் வாட் டு யூ ஸே.''

''நான் 'பிச்' இல்லே. கேர்ஃபுல் ஆஃப் யுவர் வர்ட்ஸ். நானா வந்து உங்களை என்னை கட்டிக்கோங்கன்னு ஒங்க கழுத்தைப் புடிச்சுட்டுத் தொங்கலே. இப்பக் கூட ஒங்க கழுத்துலே நான் ஒரு பாரமா இல்லே. யூ ஆர் ஃப்ரீ....''

''எஸ்...எஸ்...எஸ்... கெட் அவுட்.''

''ஆல் ரைட்'' என்று ஒரு தீர்மானத்திற்கு வந்தாள்.

''இதோ பாருங்க... மிஸ்டர் சந்திரமௌளி. ஒரு உண்மையை நீங்க தெரிஞ்சுக்கணும். ஐ டோண்ட் லவ் யூ... இத்தனை நாள் ஒங்களுக்கு நான் பயந்து நடுங்கி ஒடுங்கிப் போனேன்னு நினைக்கிறீங்களா... இல்லே... ஐ பிடீ யூ.. ஐ பிடீ யுவர் ஈகோ... யுவர் ஸ்டேட்டஸ் யுவர் மனி... எல்லாத்தையும் பார்த்து எனக்குப் பரிதாபமாயிருந்தது.''

''ஸ்டாப் இட்'' என்று ஆக்ரோஷமாகக் கத்தினான் சந்திரமௌளி.

''இல்லே. இன்னும் சொல்ல வேண்டியது பாக்கி இருக்கு. ஐ'ம் நாட் கோயிங் டு ஸ்டாப். நீங்க கொலை செஞ்சாக் கூட சரி. ஐ'ம் நாட் அஃப்ரெய்ட் ஆஃப் யூ.''

சந்திரமௌளி தன் மேஜை மீது வைத்திருந்த விஸ்கி பாட்டிலைத் திறந்து சோடா இல்லாமல் ஐஸ் இல்லாமல் 'ரா'வாக நேராகக் கொஞ்சம் வாய்க்குள் ஊற்றிக்

கொண்டான். நடுங்கும் கைகளோடு ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தான். இரண்டு இழுப்பு இழுத்தான். ஏதோ ஒரு பலம் வந்தது.

''கமான் கண்டின்யூ'' என்றான்.

''எத்தனை பரிதாபமான வெலங்குகள்ளே மாட்டிக்கிட்டு நீங்க தவிக்கிறீங்க.. லேமா தட்... ஒங்களுக்குச் சொந்தப் பொண்டாட்டி கூட எஸ் பாஸ் எஸ் பாஸ்னு தலையாட்டற ஒரு அடிமையாட்டம் தேவைப்படறு. மிஸ்டர் சந்திரமௌலி...'' என்று இரண்டாம் முறையாக அவள் அவன் பெயரைச் சொல்லி அழைத்தாள்.

மகிஷாசுர மர்த்தினியாக சாமுண்டீஸ்வரி நிற்பது போல் அவனுக்கு ஒரு பிரமை தட்டிற்று.

''எ வய்ஃப் சஸ் எ வய்ஃப். நீங்க அவளை ஏமாத்தலாம். துரோகம் பண்ணலாம்; அடிக்கலாம் வதைக்கலாம்... ஸ்டில்.. அந்த ஸ்டேட்டஸ் யூ கெனட் ஷேக் இட்... அப்படியே நீங்க குப்பை மேட்டிலே இருந்து இந்தக் கோபுரத்துக்குக் கொண்டு வந்துட்டதா நெனச்சாலும் இது ஒரு ஸ்டேட்டஸ்.''

> மாதுளம் தோலைத் தூள் செய்து, கடுகு எண்ணெயில் கலந்து காய்ச்சி மேல் பூச்சாக உபயோகித்து வந்தால், பெண்களின் தளர்ந்து விட்ட மார்பகங்கள் வலிமை பெற்று திகழும்.
>
> —எஸ். வனஜா

''ஐ வில் டிவோர்ஸ் யூ'' என்று அதிர்ச்சியடைந்தவன் போன்று அவன் சொன்னான்.

''அப்பக் கூட அது ஒரு ஸ்டேட்டஸ்... கோர்ட் முன்னாலே நீதிபதி லாயர்... சொஸைட்டி முன்னாலே நின்னு யூ ஹாவ் டு அக்ஸெப்ட் யுவர் ஃபெய்லியர்.''

''கெட் அவுட்... கெட் அவுட்'' என்று குண்டு பாய்ந்து நகர முடியாத வேங்கை மாதிரி அவன் அலறினான்.

அடுத்த நாள் அதிகாலையில் தன்னுடைய டிகிரி சர்ட்டிபிகேட்டுகள் கொண்ட ஒரு ப்ரீஃப் கேஸை மட்டும் எடுத்துக்கொண்டு சாமராஜபுரத்துக்குப் போனான். அவளைக் கண்டதும் வீட்டில் நிலவிய அதிர்ச்சியை லட்சியம் செய்யாது பெட்டியை வைத்துவிட்டுப் படித்துறைக்குப் போனான்.

அம்மா... நீ பயந்து கொண்டு.. மனுஷ மனசினுள் இருக்கும் மகிஷாசுரர்களை மர்த்தனம் செய்வதில் இருக்கும் ஆயாசத்துக்கு அஞ்சிப் பிராணனை விட்டுவிட்டாய். நான் ஓர் அசுரனைக்கு எதிரே நின்றுவிட்டு வந்திருக்கிறேன். அதை ஹதம் செய்தேனா என்று தெரியவில்லை. அல்லது உன் மாதிரியே என்னை வேறொரு வகையில் ஹதம் செய்து கொண்டேனா என்றும் தெரியவில்லை.

அன்று மத்தியானமே சுருக்கமாக விஷயத்தைச் சொல்லிவிட்டு நஞ்சன்கூட்டிற்கு பஸ் ஏறினாள் கீர்த்தி. மதர் சுபீரியர் அவளை அணைத்துக்கொண்டாள்.

7

நெய் வாங்கிக் கொண்டு திரும்பி வந்த போது முரளி கிரீஷிடம் ஒரு தனி மரியாதை கொண்டுவிட்டான் என்று புரிந்தது.

''கீர்த்தி... முரளி ஒரு முக்கியமான கேள்வி கேட்டார்.''

''அவன் சின்னப் பையன்தானே! கேட்டான்னே சொல்லுங்க. கோவிச்சுக்க மாட்டான்.''

''ஸாரி... எனக்கு அவன் இவன்னு யாரைப் பேசியும் பழக்கமில்லே.''

முரளிக்கு மேலும் அவன் மீது மதிப்பு உயர்ந்தது.

''சரி. ஒங்க இஷ்டம்... என்ன கேள்வி கேட்டான்?''

''கவிஞனாலே ஒலகத்துக்கு என்ன பிரயோஜனம்?''

கீர்த்தி சொன்னாள்: ''சாந்தி நிகேதன் விஸ்வ பாரதி யூனிவர்ஸிடி! அது ஒரு கவிஞர் வேலைதானே... ரவீந்திரநாத் டாகோர் செய்ததுதானே.''

கீர்த்தி சொன்னதைக் கேட்டு கிரீஷ் முரளியைப் பார்த்தான்.

''அவ்வளவு ஏன்... நம்ம யூனிவர்ஸிடி காம்பஸ் மானஸ கங்கோத்ரி இருக்கே. அது கன்னட மகாகவி குவேம்புவோட லட்சியக் கனவுதானே....''

''ஸ்டில்...'' என்று நிறுத்தினான் கிரீஷ்.

''சீக்கிரமா டிபன் சாப்பிட்டுட்டு ஜூவுக்குப் போவோம். அங்கே யோசிக்கலாம்.''

''ஜூவுக்கா?''

''ஆமா... இன்னிக்கு ஹோலி க்ராஸ் ஸ்டுடண்ட்ஸெல்லாம் ஜூவுக்கு பிக்னிக் வரப் போறதா மதர் சுபீரியர் லெட்டர் போட்டிருக்கா.''

''நாங்களும் அந்த ஸ்டுடன்ட்ஸ் டீச்சரை மீட் பண்ற சம்பவத்துக்கு ஸ்பெக்டேடர்ஸா இருக்கணுமா?''

அந்தக் கனத்த பூட்டுக்கள் அடைத்த கம்பிக் கதவுகள்... வட்டமான கிராதிகள்... இதனாலெல்லாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தாலும் சிங்கங்கள் இன்னும் சிங்கங்களாகவே இருந்தன.

கீர்த்தி சிங்கங்களின் செக்ஷனை விட்டு அகலவே மனமின்றி நின்று கொண்டிருந்தாள்.

''ஒங்களுக்குப் பறவைகள் செக்ஷன் தான் ரொம்பப் பிடிக்கும்னு நெனச்சேன்'' என்று கிரீஷ் சொன்னான்.

மலரின் புதுமையுடன் திகழ



- உயர்ரக விஸ்கோஸ் இழைகளை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டது.
- மிருதுவானது
- அதிக உறிஞ்சும் தன்மையுடையது
- உடலுடன் ஒட்டி உறுத்தாது சுகமளிப்பது
- விஞ்ஞான ஆராய்ச்சி முறைப்படி தரக்கட்டுப்பாட்டுடன் தயாரிக்கப்பட்டது.
- நியாய விலையில் கிடைக்கிறது.

பெல்ட் இலவசம்.




சர்காட் இண்டஸ்ட்ரீஸ் பி. லிட்.

23, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-600007

போன்: 661982 & 662004

APRC



துளியிலும் தேர்ந்தெடுத்த நறுமணம்!
Yendelux
coconut oil
என்டீலக்ஸ்
தேங்காய்
நாகலிங்க நாடார் சன்ஸ்
கொல்லம்—கேரளா
ஆபீஸ் : 2244, 4484, மில்ஸ் ; 2266, 4611
DISTRIBUTORS FOR TAMIL NADU
M. M. NAGALINGA NADAR
VIRUDHUNAGAR, Phone : 3107, 3745.

''நீங்கள் கவிஞர் அல்லவா?''

''ஏதாவது கூல்டிரிங்க்ஸ் சாப்பிடுவோமா'' என்று குறுக்கிட்டான் முரளி.

''போரரா?''

''நாட் எக்ஸாக்ட்லி.''

''கிட்டத்தட்ட'' என்று முரளிக்கு எடுத்துக் கொடுத்தாள்.

அவன் புன்னகையோடு தலையாட்டினான்.

''என்னமோ எனக்கு சிங்கத்தைப் பிடிக்கிறது. அதுவும் ஆண் சிங்கத்தை. வலிமை, மக்னனிமிடி... கருணை...''

''கருணையா? சிங்கத்துக்கிட்டயா?''

''எஸ். லுக் அட் ஹிஸ் ஐஸ். ஒரு ராயல் பெனவலன்ஸ் தெரியலே. அம்பிகைக்கு இதை வாகனமா ஹிந்துக்கள் கற்பனை பண்ணி யிருக்காங்களே!''

''அக்கா...'' என்று மறுபடியும் முரளி கூப்பிட்டான்.

''எனக்கு வேணாம் முரளி. நீ போய்ச் சாப்பிட்டு வா.''

''நான் வரட்டுமா முரளி'' என்று கூட வேண்டுமானால் துணைக்கு வருகிறேன் என்ற பாவத்தில் கிரீஷ் கேட்டான்.

''வேண்டாம் சார்.''

எங்கே கிரீஷ் போய்விடுவானோ என்று கீர்த்தி கவலையுற்றாள். அந்த நேரத்தில் ஏனோ அவன் கூட இருக்க வேண்டும் என்று தோன்றியது.

முரளி தூரத்தில் தெரிந்த கூல் ட்ரிங்க் பாருக்குப் போனான்.

''ஹவ் ஈஸ் முரளி?'' என்று தம்பியைப் பற்றிப் பொதுவாக விசாரித்தான்.

''வெரி நைஸ்.''

அலைகின்ற சிங்கத்தையே பார்த்துக் கொண்டு கீர்த்தி சொன்னாள்:

''முந்தாநேத்து முரளி குடிச்சுட்டு வந்திருந்தான். ஒங்களையும் என்னையும் சம்பந்தப்படுத்தி யாரோ என்னமோ சொன்னாங்களாம். யாரோ என்ன எங்க ஹெஸ்பெண்ட்டுமாஸ்தாதான்....''

சிவுக்கென்று தலையையும் கால்களையும் தன் ஓட்டுக்குள் ஓர் ஆமை இழுத்துக் கொள்வது போன்ற உணர்வு கிரீஷுக்கு ஏற்பட்டது.

என்ன சகஜமாக அதைத் தெரிவிக்கிறாள் இவள்... ஈஸ் ஷி ஸோ ஷாலோ... ஆழமற்றவளா... இல்லை ஆழம் உணர்ந்தவளா?

''என்ன பேசாம ஒரு சைலன்ஸ்?''

அவன் திரும்பி அவளை எதிட்டுப் பார்த்தான். அவன் கண்கள் அவளை முற்றிலும் வித்தியாசமாகப் பார்த்தன. அவற்றில் இத்தனை உணர்ச்சிகள் செறிந்து கீர்த்தி இன்றுதான் பார்த்தாள். திடீரென்று அவளுக்கு எந்த ஆளரவமும் இல்லாத ஒரு வனாந்தரத்தில் தானும் அவனும் மட்டும் தனித்து நிற்பது போன்ற உணர்வு ஏற்பட்டது.

''டூ யூ லவ் மீ கீர்த்தி?'' அவன் தொண்டை கரகரக்கக் கேட்டான்.

அவன் கேள்விக்குச் சொல்வதற்கு அவளிடம் எந்தப் பதிலும் இல்லை.

''ஐ நீட் நோ ரிப்ளை'' என்று அவளது சுருள் சுருளாய் வளர்ந்த கூந்தலைப் பார்த்தவாறே சொன்னான்.

''ஐ ஷுட் பி ஹானெஸ்ட்... ஐ லவ் யூ... ஐ லைக் யூ... ஐ அட்மைர் யூ.''

''ஷ்ஷ்'' என்று அவன் உணர்ச்சிவேகத்தை அவள் அடக்கினாள். நல்ல வேளையாக அவர்களைச் சுற்றி இரண்டு சிங்கங்களைத் தவிர வேறு யாருமில்லை.

''லெட் மீ ஃபினிஷ்''

''நல் ஒன்லி ஸ்டார்ட்... ஒரு டீன் ஏஜ் பையன் மாதிரி.''

''அதனாலேதான் முடிச்சுடறேன். என்னாலே உங்களுக்கு ஒரு அபவாதம் வந்தா... எதுவுமே நடக்கலேன்னாலும் நான் குற்றவாளியா எனக்குத் தோணறது.''

கீர்த்தி அவன் குரலில் இருந்த ஒரு நேர்மையில் நிசப்தமாய்விட்டாள்.

''ஐ லவ் யூ... நீங்க பயப்படவே வேண்டாம். நத்திங் வில் ஹாப்பன். ஆனா ஒண்ணு. நீங்க எவ்வளவு பிடிவாதமா மறுத்தாலும் சரி. நான் ஒரு முயற்சி பண்ணியே தீரணும்''

''புரியலே'' அவள் முகம் வெளிறிவிட்டது

''நான் முரளியோட போய் மிஸ்டர் சந்திரமௌளியை மீட் பண்ணப்போறேன்.''

அவள் மௌனமாக இருந்தாள்.

''கவிஞனாலே நாட்டுக்கு என்ன பிரயோஜனம்... வாட் எ ப்ரோவோகிங் க்வெஸ்சன்' திடீரென்று அவன் எங்கோ ஒரு மூலையில் சம்பந்தப்படுத்துவதை அதில் தன் வாழ்க்கை சம்பந்தப்பட்டிருந்ததை அந்தச் சூழ்நிலையின் அசந்தர்ப்பத்தை கீர்த்தி அவ்வளவு ரசிக்காமல் தெளிந்தாள்.

கூல்ட்ரிங்க்ஸ் குடித்துவிட்டுத் திரும்பி வரும்போது யூனிஃபார்ம் அணிந்த நாற்பது ஐம்பது குழந்தைகளின் குதூகலக் குரல்களோடு வந்தான் முரளி.

8

அன்று கிரீஷ் லீவு போடப் போவதாகத் தெரிவித்திருந்தான். அதனால் அவனை எதிர்பாராமல் யூனிவர்ஸிடி காண்டீன் அருகே பஸ்ஸிலிருந்து இறங்கி நடந்தாள்.

ஜலதோஷம் ஆரம்பிக்க அறிகுறி தென்பட்ட உடன் (தும்மல் + மூக்கு உளைதல் + லேசாக நீர் வருதல்) ஓமத்தை இடித்து உச்சியில் அரக்கி குழித்தால் ஜலதோஷம் மாறிவிடும். —பட்டு

மைசூர் என்ற மனோகரத்தின் ஒரு தனி மந்தகாச இதழ் என்று மானஸ கங்கோத்ரியைப்பற்றி அவளுக்கு எண்ணத்தோன்றிற்று.

காலையிலிருந்து இன்னதென்று தெரியாத ஒரு மகிழ்ச்சி அலை அலையாக வந்துகொண்டிருந்தது. துயரம் என்பதையோ கவலை என்பதையோ இதுவரை கண்டே அறியாதவள் போன்று அவளுக்குள் ஒரு குதூகலம் குமிழ்த்தது.

> கேப்பையை மாவு ஆக்கி அதில் சிறிது பச்சரிசியை இட்டு கூழ்காய்ச்சி சாப்பிடுங்கள்: சிறுநீர் தங்கு தடையின்றிப் பிரியும், உடல் பூவாய் குற்றால அருவியில் குளித்தது போல் இருக்கும்.
>
> -வள்ளி மயில் மணியம்

'என்ன காரணம்?' என்று தன்னையே கேட்டுக்கொண்டு அவள் காலேஜை நோக்கி நடந்தாள்.

நேற்று ஜூவில் கிரீஷ் தன்னை வெளிவிட்டுக் கொண்டதா... இரவில் அடிக்கடி நேர்ந்த விழிப்பில் என் காலையில் எழுந்து டிரஸ் செய்து புறப்படும் வரை, பஸ்ஸில் உட்காரும்வரை கூட அவனது வெளிப்படையான பேச்சு காதருகில் வந்து ஒரு ஹலோ சொல்லிவிட்டுச் சொல்லிவிட்டுப் போயிற்று.

கிரீஷை நான் காதலிக்கிறேனா...

அந்தக் கேள்விக்கு அவளிடம் சுத்தமாகப் பதில் இல்லை. ஆனால் தான் காதலிக்கப்படுகிறோம் என்ற உணர்வில் ஒரு சுயத்துவம் பற்றிய வெற்றி இருந்தது. அது ஒரு மூன்றாந்தர உணர்ச்சியைப் போலன்றி இன்னும் அவளிடம் உயிர்க்களை இருக்கிறது என்று யாரோ நினைவூட்டியது போல உணர்ந்தாள்.

நேசித்தல் நேசிக்கப்படுதல் இந்த இரண்டு விவகாரம் தவிர உலகில் வேறு பிரச்னையே இல்லையோ?

அவளுக்குத் திடீரென்று கணவன் சந்திர மௌளி பற்றி நினைவு வந்தது.

''மிஸ்டர் சந்திரமௌளி'' என்று தனக்குள் அழைத்துக் கொண்டாள். அவரைப் பெயர் சொல்லி அழைத்தது ஒரு பெரிய இன்ஸல்ட்டாக இருந்திருக்குமோ!

அந்த ஓராண்டு வாழ்வில் அவள் அனுபவித்ததெல்லாம் ஸ்டேட்டஸ் ... ஹை சொஸைட்டி... கல்ச்சர்... அப்பாடா எத்தனை சிறைகள்... நடப்பது ... நிற்பது பேசுவது எல்லாவற்றுக்கும் ஏதோ ஒரு ஒத்திகையை மனசுக்குள் பார்த்துக் கொள்ள வேண்டி வந்தது. வெறும் மனிதர்களுக்காக இல்லாமல், மனித உணர்ச்சிகளுக்காக இல்லாமல் சில சம்பிரதாயங்களுக்காக வாழ வேண்டிய மாதிரி... ஒரு யந்திரமானமாதிரி...

அன்பு என்றால் என்னவென்று அவருக்குத் தெரிந்திருக்குமா?

சின்ன வயசிலேயே அவருடைய அம்மா செத்துப் போய்விட்டாள். கான்வென்டிலும் போர்டிங்கிலும் வளர்ந்தவர். கர்ள் பிரண்ட்ஸ் நிறைய இருந்திருக்கலாம். ஆனா உண்மையான பெண் ஒருத்திகூடவா கிடைத்திருக்க மாட்டாள்?

கிடைத்திருக்கலாம். அவரால் நம்பியிருக்க முடியுமா?

'அன்புக்கு நம்ப வேண்டுமா?' என்று தனக்குள்ளேயே அவள் ஒரு கேள்வி முளைத்ததை உணர்ந்தாள்.

'சம்பிரதாயங்களிலும் அந்தஸ்திலுமே ஊறிப்போன அவரால் அதைத்தான் நம்ப வேண்டி வந்திருக்கும். வேறு எதை அவர் நம்புவது? சார்ந்திருப்பதைத்தான் நம்ப முடியும்!

யூனிவர்ஸிடி காண்டீனிலிருந்து ரீஜனல் காலேஜுக்குப் போகும் பஸ் ரூட் சாலையில் நடக்கும்போது அவள் மனம் தெளிவாக இருந்தது.

பொருள்களை வாங்குவது மாதிரியா என்னை அவர் வாங்கியிருப்பார்?

அப்படி மதிப்பிடுவது இந்த மனோநிலையில் அவளுக்கு ஓர் அநியாயம் போல் தோன்றியது. தான் ஒரு வஸ்துவில்லை என்று உணர்த்த உணர்த்த அவர் குமுறி எழுந்து அடக்கிவிடச் செய்த முயற்சிகளை நினைத்தாள் கீர்த்தி.

''ஐ டோன்ட் லவ் யூ''

அதுதான் அவள் எறிந்த கடைசி ஆயுதம். அதைவிடக் கொடுமையானதை ஒருகணவன் தன் மனைவியிடமிருந்து கேட்க முடியாது.

அது உண்மையா?

'ஐ லவ் யூ. ஐ லைக் யூ. ஐ அட்மயர் யூ.'

கிரீஷின் வார்த்தைகள் மீண்டும் எதிரொலித்தன.

அந்தஸ்து, கௌரவம், ஆணவம் என்று எத்தனை புறக் கவசங்கள் பூட்டி நின்றாலும் எங்கோ ஒரு மூலையில் நின்ற ஒரு பெண்ணிடம் ஏதோ ஒரு கவர்ச்சியால் கொஞ்ச காலம் என்றாலும் தன்னை இழந்துவிட்ட அந்த மனிதர் மீது எனக்கு நேசமில்லையா?

ஒரு மாத தேனிலவு மயக்கத்தில் அவர் அவளுக்காக வாங்கிக் குவித்த பொருள்கள் எங்கெங்கோ அவளை இருக்கென்று அழைத்துப் போனது எல்லாம் இப்போது அவளுக்கு ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தன. அந்த ஒவ்வொரு செயலும் அவளது அன்பிற்காகப் போடப்பட்ட விண்ணப்பங்கள் அல்லவா?

'ஹி வான்டட் டு பொஸஸ் மீ'

தன்னை ஆக்கிரமித்துக் கொள்ள முயற்சி செய்தார். பாவம், அந்த அந்தஸ்தையும்விட தான் ஒரு முக்கிய சொத்து என்று அவருக்

ருத் தோன்றியிருக்கும். ஹவ் புவர் ஹி ஈஸ், என்று பரிதாபப்பட்டாள்.

அன்பு வேறு ஆக்கிரமிப்பு வேறு என்று அவருக்குத் தெரிந்திராது. ஆக்கிரமித்தாலே அன்பு அடைபட்டு விடும் என்ற விஷயம் எங்கே அவருக்குத் தெரியப் போகிறது? தெரிந்துகொள்ளாத விஷயங்களை ஒருவருக்கு எப்படித் தெரிய வைப்பது? விலகி வந்தா... புறக்கணித்தா...

எங்கோ தான் ஒரு தவறு செய்த மாதிரி முதல் தடவையாகக் கீர்த்தி நினைத்தாள். கணவன் என்பதற்காக அன்றி, தனக்குச் சொற்ப காலம் ஓர் அந்தஸ்தை வழங்கியதற்காக அன்றி, ஒரு மனிதர்... தன் அன்பிற்கு ஒரு மாதமேனும் இடைவிடாத விண்ணப்பங்கள் போட்டவர் என்பதற்காக தான் இன்னும் கொஞ்சம் 'மக்னனிமஸாக' நடந்திருக்கலாமோ...

'ஐ டோண்ட் லவ் யூ'

என்ன கொடுமையான வார்த்தை அது! வேறு ஒரு மனிதனால் இவ்வளவு பகிரங்கமாக 'நான் உன்னை நேசிக்கிறேன்' என்று அறிவிக்கப்பட்ட பின்தான் தான் சொன்ன வார்த்தைகளின் கொடுமை அவளுக்கு உறைத்தது.

அவளுக்கு அம்மா ஞாபகம் வந்தது. அபவாதத்திற்கு அஞ்சி உயிர் துறந்த அம்மா. ஹவ் ஷி வேஸ்டட் ஹர் லைஃப். வெறும் அபவாதத்துக்காக உயிரை விட்டு விடலாமா? என் மேல்... முரளி மேல்... அப்பா மேல் அவளுக்கிருந்த அன்பு எங்கே போயிற்று? எல்லாரையும் விட்டுவிட்டு ஆற்றில் விழுந்து போவதென்றால் அது யார் மேல் வைத்த அன்பு?

தன் மேல் தானே வைத்திருக்கும் அன்பா? ஈஸ்ண்ட் இட் ஈகோ?

அவள் ரீஜினல் காலேஜ் பஸ் ஸ்டாப்பை நெருங்கும்போது பஸ்ஸுக்குக் காத்திருந்த ஒருவன் கையில் வைத்திருந்த ட்ரான்ஸிஸ்டரில் சென்னை வானொலி கேட்டது.

'வேண்டுமடி எப்போதும் விடுதலை'

பாரதி பாட்டு. விடுதலை எதிலிருந்து? பனிச்சென்று ஒரு சூர்யோதயமாவது போல அந்த மன மூட்டத்திலிருந்து அவளுக்கு ஒரு பதில் உதயமாகியது.

தன்னிடமிருந்து—

'ஈகோ'விலிருந்து—

'நான்' என்ற நினைவிலிருந்து—

அதுதான் உண்மையான விடுதலை. அந்த விடுதலை கிடைத்து விட்டால் எந்த ஆக்கிரமிப்பும் எவரையும் ஒன்றும் செய்து விட முடியாது. அது கிடைக்காதவரை ஒவ்வொரு விடுதலையும் வேறொரு தளைதான்!

அது மகான்களுக்கு மட்டும்தான் சாத்தியமா?

ஒரு மனைவிக்கு? ஒரு கணவனுக்குச் சாத்தியமில்லாமல் போய்விட்டால் குறைந்த பட்சம் ஒரு மனைவிக்கு? அது அம்மாவுக்குச் சாத்தியமில்லாமல் போய்விட்டது! ஆனால் தனக்கு?

தன் சிந்தனை போகும் போக்கை கீர்த்தி ஒரு 'ரூட்-மேப்'பைப் பார்க்கிறவள் போன்று மீண்டும் திருப்பிப் பார்த்தாள்.

இதுதான் தணிந்து போதலோ! ஆண்களின் அடக்குமுறையால் கட்டுப்பட்டிருக்கின்ற ஒரு சமூகத்திற்கு இண்டலெக்சுவலாகவோ ஸ்பிரிச்சுவலாகவோ தான் வழங்குகின்ற அங்கீகாரமோ!

அவள் தன்னை மீறி வந்த புன்னகையை கட்டுப்படுத்திக் கொண்டாள். இந்த நினைப்பு தனக்குத் தோன்றுவதன் காரணமே இன்னும் தான் விடுதலை பெறவில்லை என்பது தானே என்று எண்ணினாள். மிகவும் சிக்கலான ஒரு கணக்கிற்கு விடை கண்டு பிடித்த மாதிரி ஒரு சின்ன சந்தோஷம் தோன்றிற்று.

> ஜலதோஷம் பிடித்த பின் மூச்சு திணறலுக்கு ஓமத்தை ஒரு துணியில் கட்டி மூக்கினால் உறிஞ்சினால் மூச்சு திணறல், மண்டை இடி மாறும்.
>
> —பட்டு

அவள் ரீஜனல் காலேஜ் கேட்டை நெருங்கியபோது மெர்க்காரா ரோடிலிருந்து வந்து கொண்டிருந்த ஓர் இம்பாலா கார் சாலையில் நின்றது.

அவள் திரும்பிப் பார்த்தாள்.

அந்தக் காரின் டிரைவர் சீட்டில் சந்திரமௌலி உட்கார்ந்திருந்தான். அவனுக்குப் பக்கத்தில் கிரீஷ் அமர்ந்திருந்தான்.

அவள் உள்ளே போகலாமா வேண்டாமா? அதற்குள் கதவைத் திறந்து கொண்டு காரிலிருந்து சந்திரமௌலி கீழே இறங்கி வந்தான். ஒரு கணம் கீர்த்தியின் முதுகு சிலிர்த்தது. தலை குனிந்துவிடப் பார்த்தது. ஆனால் அவள் தன் பலத்தை சேகரித்துக் கொண்டு நிமிர்ந்து நின்றாள்.

''கீர்த்தி....''

சந்திரமௌலி தொண்டையை ஒரு முறை செருமிக் கொண்டான். தன் கையை இறுக்கிப் பிடித்திருந்த ரிஸ்ட் வாட்சின் கோல்ட் ஸ்ட்ராப்பை அதன் 'ப்ரஸ்'ஸை அவிழ்த்து லூஸாக விட்டுக் கொண்டான். கையில் அது அழுந்தியிருந்த தழும்புகள் தெரிந்தன. அதைத் தேய்த்து விட்டுக் கொண்டே பேசினான். அது அவனுக்கு ஒரு மானரிஸம்.

''ஐ வாண்ட் டு டாக் டு யூ.''

தன்னை முகத்துக்கு முகம் சந்திப்பதற்குக் கூச்சப்பட்டுத்தான் இந்த மானரிஸத்தில் அவன் ஈடுபட்டிருக்கிறான் என்று அவள் உணர்ந்து கொண்டாள்.

அதைச் சொல்லி முடித்து விட்டு பனிச்சென்று அவளை அவன் ஒரு பார்வை பார்த்தான். தோல்வி... வருத்தம்... ஒரு நிராதரவு என்று உணர்ச்சிகளின் வானவில் ஒன்று அந்தப் பார்வையில் தெறித்தது.

இப்போது தான் பெரியவளாக வேண்டிய சந்தர்ப்பம் வந்து விட்டதை உணர்ந்தாள்.

''ஓ... எஸ்...''

''வில் யூ கம் வித் மீ?''

''எங்கே?'' அதைக் கேட்டிருக்க வேண்டாம் என்று கீர்த்தி அப்புறம் உணர்ந்தாள்.

''ஜஸ்ட்... ஜஸ்ட்... ஒரு ஃபைவ் மினிட்ஸ் காரிலேயே போய்விட்டு மறுபடியும் ஒன்னைக் கொண்டாந்து ட்ராப் பண்ணிடறேன்!''

''ஆல்ரைட்... ஆனா காலேஜுக்கு டயம் ஆறது.''

''நோ.. ஐ வோண்ட் டிலே யூ.''

சந்திரமௌளியின் நடத்தை முற்றிலும் ஃபார்மலாக இருந்தது. அவன் வருந்துகிறான் என்பது அவள் பெண் மனசுக்கு மட்டும் தெரிந்தது.

''இது என்ன இவர்'' என்று அவளுக்கே கஷ்டமாக இருந்தாலும் கீர்த்தியால் அதைத் தவிர்க்க முடியவில்லை.

கார்த்திகை தீபம் வைப்பவர்களுக்கு ஒரு யோசனை

> பழைய கார்த்திகை தீபங்களை விறகு அடுப்பிலோ அல்லது குட்டு அடுப்பிலோ இட்டு வைத்துவிட்டு சிறிது நேரம் கழித்து எடுத்தால் புது விளக்குப் போல் இருக்கும். அடுத்த வருடம் எண்ணெய்ப் பிசுக்கு மிக்க கார்த்திகை தீபங்களைச் சுத்தம் செய்யக் கஷ்டப்பட வேண்டி யிருக்காது.
>
> —சீதாலக்ஷ்மி

அவன் பின்தொடர சந்திரமௌளி போய் தன் காரின் கதவைத் திறந்தான். அதற்குள் கிரீஷ் எழுந்து கதவைத் திறந்து வெளியே நடை பாதையில் இறங்கி நின்று கொண்டான்.

கீர்த்தி அந்த இடத்தை வேண்டுமென்றே தவிர்த்துவிட்டு காரின் பின் சீட் கதவைத் திறந்தாள்.

''ஒய் கான்ட் யூ'' என்று தன் பக்கத்து சீட்டைக் காட்டி ஒரு கேள்வி கேட்ட சந்திரமௌளி அதன் அபத்தத்தையும் தன் அவசரத்தையும் உணர்ந்து வாயை மூடிக்கொண்டான்.

பின்னால் திரும்பிப் பார்த்து விட்டு சந்திரமௌளி காரை ஸ்டார்ட் செய்தான். ஓர் இங்கிதமான உறுமலோடு காரின் என்ஜின் உயிர் பெற்றது.

''ஸோ....தாங்க்யூ'' என்று மிகவும் அந்யோன்யமான ஒரு சிநேக பாவத்தோடு நடை பாதையில் நின்ற கிரீஷுக்கு சந்திரமௌளி கை ஆட்டினான்.

அந்த தாங்க்ஸ் பொருள் பொதிந்ததுஎன்று கீர்த்திக்குத் தோன்றியது.

கிரீஷுக்கு அவன் கையை அசைத்தான். அவன் மகிழ்ச்சியோடு முகத்தில் ஒரு பிரகாசம் தெரிய கையாட்டினான். அந்த இம்பாலா புறப்பட்டபோது ஜூவில் நேற்று கிரீஷ் சொன்ன வார்த்தைகள் எதிரொலித்தன.

''ஐ லவ் யூ... ஐ லைக் யூ... ஐ அட்மயர் யூ.''

என்னுமாய்த் தன் நேசத்தை கிரீஷ் நிரூபித்திருக்கிறான் என்று நினைத்தபோது சந்திரமௌளி பேசத் தொடங்கினான்.

''ஐ ஆம் வெரி ஸாரி கீர்த்தி.''

அந்த இம்பாலா சந்திரமௌளி சொன்ன மாதிரி ஐந்து நிமிஷத்துக்குள் ரீஜனல் காலேஜுக்குத் திரும்பி வரவில்லை. ஹோட்டல் உட்லாண்ட்ஸ் எதிரில் அது அரை மணி நேரம் நின்றிருந்தது.

பின்பு கீர்த்தியின் விருப்பப்படி அங்கிருந்து புறப்பட்டு நஞ்சன்கூட்டிற்குச் செல்லும் சாலையில் கம்பீரமாக மிதந்து சென்றது. கீர்த்தி சந்திரமௌளியின் பக்கத்து சீட்டில் அமர்ந்திருந்தாள்.

''எவ்வளவு நாளா ஒனக்குக் கிரீஷைத் தெரியும்?''

''ஜஸ்ட் ஆறு மாசமா.''

''பர்ஃபெக்ட் ஜெண்டில்மன்.''

கீர்த்தி பதிலளிக்கவில்லை.

''யூ நோ ஹவ் ஹி மெட் மீ... கையிலே ஷேக்ஸ்பியரோட ஜூலியஸ் சீசர் ஒரு காப்பி கொண்டு வந்திருந்தார். என்ன பேசாமல் வர்றியே?''

''என்ன பேசறது?''

ஹோட்டலில் சர்வர் காப்பி கொண்டு வரப் போனதும் சந்திரமௌளி கர்ச்சீப்பை எடுத்து அழுத்தமாக முகத்தைத் துடைத்துக்கொண்டதை நினைத்தாள். அவர் கண்ணீரை மறைக்கிறார் என்று அவளுக்குப் பளிச்சென்று புலப்பட்டது.

கண்ணீர் கூட ஒருசில சமயங்களில் விடுதலையின் சின்னமாகி விடுவதை நினைத்துப் பார்த்தாள். ஏதோ கிரீஷ் போய் இவர் மனசைத் தொட்டதனால் மட்டுமே இவர் இளகிவிட்டிருக்க மாட்டார் என்று நினைத்தாள். எங்கோ ஓர் உறுத்தல் இவரை வருத்திக் கொண்டிருக்க வேண்டும்!

சந்திரமௌளியோடு வந்த பயணங்களில் அது ஒரு தனி விதமாக நூதனமாக இருப்பதைக் கீர்த்தி உணர்ந்தாள். இதற்குக் காரணம் அந்தப் பயணமா? மீண்டும் சந்திரமௌளியோடு சேர்ந்து மதர் சுபீரியரை சந்திக்கப் போவதா... எதிர் காலமா என்று அவளால் அப்போது நிர்மானிக்க முடியவில்லை.

(முற்றிற்று)

புதிய

பிரிமியர்

முருக்கு அச்சு

இல்லத்தரசிகளின் நிச்சய தேவை

பிரிமியர் முருக்கு அச்சு நேரத்தையும், செலவையும் மீதப்படுத்தும் ஓர் ஒப்பற்ற சாதனம். அலுமினியம் அலாயினால் தயாரிக்கப்படுவதால் துரு பிடிக்கும் வாய்ப்பில்லை, சுத்தம் செய்வதும் மிக எளிது.

நீங்கள் வீட்டிலேயே ரிப்பன் பகோடா, நட்சத்திர முனைகள் கொண்ட முருக்கு, தேன்குழல், மெல்லிய இழை கொண்ட இடியாப்பம், ஓமப்பொடி முதலியவற்றை செய்யலாம். இல்லத்தரசிகளின் தேவைக்கேற்ப சேவை செய்யவே பிரிமியர் முருக்கு அச்சு வடிவமைக்கப்பட்டது.

பிரிமியர் முருக்கு அச்சு மூன்று அளவுகளில் பெரும் எல்லா பாத்திரக் கடைகளிலும் கிடைக்கின்றது.



Manufacturers

S. SIVANESAN & CO

244, MINT STREET, MADRAS-600 003

PHONE: 33926

Regd. No. TN MS (S) 231